விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION MONEY TRANSFER
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Wastern Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392
(C-4238)

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 பங்குனி 26 வெள்ளிக்கிழமை (08.04.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி '111

# தீர்மானங்களையே ஏற்காதவர்கள் திட்டமுன்வரைபை ஏற்பார்களா?

## த.தே.கூட்டமைப்பின் தலைமையை நொந்து பிரதி அவைத் தலைவர் சபையில் கேள்வி



(யாழ்ப்பாணம்)

வட மாகாண சபையின் தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகள் வட மாகாண சபையால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வுத் திட்டமுன்வரைபை ஏற்றுக்கொள்வார்களா என வட மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன் நேற்றையதினம் சபையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.செயலகம்முன் இன்று போராட்டம்


(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் படையினரின் தேவைகளுக்காக பொது மக்களுக்குச் சொந்தமான காணிகள் சுவீகரிப்பிற்காக இன்று அளவீடு செய்யப்படவுள்ள நிலையில் குறித்த நடவடிக்கைகளுக்கு எதிரான போராட்டம் இன்று காலை 8.00 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலகம முன்பாக நடைபெறும் என மாகாண சபை உறுப்

24ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு மாகாண சபையின் தீர்வுத்திட்ட முன்வரைபு

### முதலமைச்சர் நேற்று முன்மொழிவு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையினால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வு திட்ட யோசனைக்கான முன்வரைபு வட மாகாண முதலமைச்சர் சி.க.விக்னேஸ்வரனால் நேற்றையதினம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் 49 ஆவது அமர்வு கைதடியில் அமைந்துள்ள வட மாகாண சபை கட்டடத்தில்

24ஆம் பக்கம் பார்க்க....

## அனல் மின்திட்டத்திற்கு எதிர்ப்பு

(திகோணமலை)

திருகோணமலை சம்பூர் பிரதேசத்தில் அனல் மின் நிலையம் அமைக்க வேண்டாம் எனக் கோரி மக்கள் நேற்று அமைதி போராட்டத்தில் ஈடுபட்டனர். சம்பூர் அனல் மின் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பதாகைகளை ஏந்தியவாறு சந்தோசபுரம் கிறவற்குழி சிவசக்தி வித்தியாலயத்திற்கு முன்னால் மக்கள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

பசுமைதிருகோணமலை அமைப்பு மற்றும்

23ஆம் பக்கம் பார்க்க....

## ரூ.ஆயிரத்து நூறு கோடி நன்கொடை

### இலங்கைக்கு வழங்குவதாக சீன பிரதமர் அறிவிப்பு



(பீஜிங்)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சீன விஜயத்தின் ஆரம்பத்திலேயே ஆயிரத்து நூறு கோடி ரூபாய் நன்கொடை இலங்கைக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான நட்புறவை அடையாளப்படுத்தும் வகையில் இந்த 1100 கோடி ரூபாய் நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

## மஹாநாயக்கர் நேற்று நியமனம்



(கண்டி)

கண்டி அஸ்கிரிய மஹா நாயக்கர் தேரராக பதுளை முதியங்கன ரஜமஹா விகாரையின் விகாராதிபதி வண.வரக்காகொட ஞானரத்தன தேரர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அஸ்கிரிய மஹாநாயக்கரை நியமிப்பது தொடர்பான மஹா சங்கத்தி

24ஆம் பக்கம் பார்க்க....

### கொழும்பு துறைமுக அபிவிருத்தித் திட்டம்

## ஐ.தே.கவின் முக்கியஸ்தர் சீனாவுடன் இரகசிய 'டீல்'!

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகரத்திட்டத்தை மீள சீனாவிடம் கையளிப்பதற்காக ஐ.தே.க.முக்கியஸ்தர் ஒருவர் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை பணமாக பெற்றுக் கொண்டுள்ளார் என நேற்று சபையில் குற்றம்சாட்டிய ஐ.ம.சு.முன்னணி எம்.பி மகிந்தானந்த அளுத்கமகே எம்.பி., மகிந்த ராஜபக்ஷ சம்பூர் உடன்படிக்கையை இந்தியாவுடன் கையெழுத்திட்டது பிழையென்றால் ஏன் அந்தப் பிழையை நீங்கள் தொடருகின்றீர்கள் என்றும் கேள்வி எழுப்பினார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## முன்னாள் ஜனாதிபதி மகிந்தவிற்கு விசேட அதிரடிப்படை பாதுகாப்பு

### பாதுகாப்புச் செயலர் அறிவிப்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பிற்கு பொலிஸ் அதிகாரிகளும், விசேட அதிரடிப்படை அதிகாரிகளும் நியமிக்கப்படவுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரி

24ஆம் பக்கம் பார்க்க....

## கிணற்றுக்குள் வீழ்ந்து சிறுவன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

அயல் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த முன்பள்ளி சிறுவன் ஒருவன் தவறுதலாக அங்கிருந்த கிணற்றுக்குள்ளே விழுந்ததில் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 2.00 மணியளவில் அராலி தெற்கு வட்டுக்கோட்

24ஆம் பக்கம் பார்க்க....

### பசிலின் மகன் வீட்டில் சமைப்பதற்காக

## இராஜதந்திர கடவுச்சீட்டு மூலம் அமெ.அனுப்பப்பட்ட கடற்படையினர்

(கொழும்பு)

பசில் ராஜபக்ஷவின் மகனின் வீட்டில் சமையல் வேலைகளை செய்வதற்காக இலங்கை கடற்படையினர் இருவர், இராஜதந்திரக் கடவுச்சீட்டில் அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் கலிபோர்னியாவில் உள்ள பசில் ராஜபக்ஷவின் மகனின் வீட்டில் சமையல்

24ஆம் பக்கம் பார்க்க....

## இந்.மீனவர்கள் 9 பேர் கைது!

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட புதுக்கோட்டை ஜெகதாப்பட்டினத்தை சேர்ந்த இந்திய மீனவர்கள் ஒன்பது பேரையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊரகாவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிபதி

24ஆம் பக்கம் பார்க்க....

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




## க.பொ.த சாதாரண பரீட்சை 2015


முதன்மைப் பெறுபேறு
மு/முல்லைத்தீவு
மகா வித்தியாலய
மாணவி
**அன்ரனியூட் நிம்சி**
8A, B

பாடசாலையின் முதன்மைப் பெறுபேற்றைப் பெற்று பாடசாலைக்கும் எமக்கும் பெருமை தேடித்தந்தமைக்காக பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(அ-4246)

**ஜெ.இந்திராதேவி (அப்பம்மா), கி.துஷி குடும்பம் (மாமி) (லண்டன்)**

# ஆறாம் மாத நினைவஞ்சலி



**அமரர் கிட்டிணன் நற்குணம்**
(சின்னக்கிளி)
மலர்வு 30.04.1954
உதிர்வு 14.10.2015

கூவில், புலோலி தென்மேற்கு, புலோலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கிட்டிணன் நற்குணம் (சின்னக்கிளி) அவர்களின் ஆறாம் மாத நினைவஞ்சலி

*அன்பு என்பதன் அர்த்தம் புரிந்து*
*அடுத்தவன் மனதை நோகடிக்காமல்*
*தியாகம் என்பதன் உச்சியை தொட்டு*
*ஆசை என்பதை அறுத்து நின்று*
*அடுத்தவன் உயர்வில் சிரித்து நின்று*
*பாசம் என்ற பதத்தை புரிந்து*
*பண்பு என்பதன் இலக்கணம் காத்து நின்றீரே*
*உம்மை உறவு என்று சொல்ல*
*உள்ளம் பூரிக்குதையா*
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*
*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய*
*சொக்கன் கலட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மனையும்,*
*கூவில், கொட்டடி ஞான வைரவரையும்*
*வேண்டி நிற்கின்றோம்.*

தகவல்:
சகோதரர்கள், மைத்துனன்மார், மைத்துனிமார், பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள்.

# அனல் மின் நிலையத் திட்டத்தால் வாழ்வாதாரத்துக்கு பெரும் பாதிப்பு

(கொழும்பு)

வாழ்வாதார மேம்பாட்டுக்காக தம்மால் செய்யப்பட்டுவந்த விறகு வெட்டுதல், தேன் எடுத்தல், வேட்டையாடுதல், விவசாயம் போன்ற தொழில்கள் இந்த அனல் மின் நிலையம் அமைப்பதினால் பாதிக்கப்பட்டு வருவதாகவும் அதனை உடனடியாக நிறுத்த வேண்டுமெனவும் சம்பூர் பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள அனல் மின் நிலையத் திட்டத்தைக் கண்டித்து முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை, மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சம்பூர் பிரதேசத்தில் அனல் மின் நிலையம் அமைக்கப்படவுள்ளதைக் கண்டித்து சந்தோசபுரம் கிறவட்குழி சிவசக்தி வித்தியாலயத்துக்கு முன்பாக நேற்று வியாழக்கிழமை பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பசுமை திருகோணமலை அமைப்பு மற்றும் இலங்கை பழங்குடியினர் உரிமைகளுக்கான அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின்போது, "நிலக்கரியை எரித்து எம்மை நோயாளி ஆக்காதே", "எங்களின் விளைநிலங்களை நாசம் ஆக்காதே", "எமது சூழலை பாதிக்கும் அனல் மின் நிலையத்தை ஆரம்பிக்காதே" உள்ளிட்டவை எழுதப்பட்ட பதாகைகளையும் பொது மக்கள் தாங்கியிருந்தனர். ஆர்ப்பாட்ட இறுதியில் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்னாண்டோ ஊடாக ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கான மகஜர் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கே.நாகேஸ்வரனிடம் பசுமை திருகோணமலை அமைப்பினர் கையளித்துள்ளனர். (இ-5)

## காணி சுவீகரிப்புத் தொடர்பான அவசர உதவிகோரி விண்ணப்பம்

ஜே/11 கிராம சேவையாளர் பிரிவில்மண்கும்பான் மேற்கு, பள்ளிவாசலடி என்னும் முகவரியில் சாட்டி சுற்றுலா கடற்கரைக்கு அண்மையில் எமது காணியில் அமைந்துள்ள கடற்படை முகாமிற்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு காணி சுவீகரிப்பதற்காக எமது காணியை அளவீடு செய்யப் போவதாக வேலணை பிரதேச செயலகத்திற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால் காணி உரிமையாளராகிய எமக்கு எவ்வித மான முன்னறிவித்தலும் வழங்காமல் எதேச்சாதிகாரமாக மேற்படி எமது பூர்வீக நிலங்களை சுவீகரிப்பதை உடனடியாக காலதாமதமின்றி தடுத்து நிறுத்துவதற்கு ஆவன செய்யுமாறு தங்களைக் கேட்டுக்கொள்வதுடன் மேற்படி காணியை கடற்படையினரிடமிருந்து நிரந்தரமாக விடுவித்துத் தருவதற்கும் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கு காணி உரிமையாளர்கள் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் இணைந்து கையளித்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ

## மீட்கப்பட்ட வெடிமருந்து வெடிக்கக்கூடியதல்ல

### பொலிஸ் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

சாவகச்சேரியில் மீட்கப்பட்ட வெடிபொருட்களில் உள்ளடங்கியிருந்த சி-4 பிளாஸ்டிக் வெடிமருந்து, மிகவும் பழைமையானது என்றும், அது வெடிக்கும் திறனை இழந்துவிட்டதாகவும், இலங்கை பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள பேச்சாளர் ருவான் குணசேகர மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி- மறவன் புலவில் உள்ள வீட்டில் இருந்து மீட்கப்பட்ட வெடிபொருட்களில், மூன்று பொதிகளில் 10 கிலோ சி-4 பிளாஸ்டிக் வெடிமருந்தும் காணப்பட்டது.இது மிகவும் பழைமையானது. வெடிப்பதற்கான வேதியல் ரீதியான திறனை இழந்து விட்டது." என்று தெரிவீத்தார்.

மீட்கப்பட்ட வெடிபொருட்கள் அரச இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டது தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக் குப் பதிலளித்த,பேச்சாளர், தீவிரவாத வசாரணைப் பிரிவினர் மேற்கொள்ளும் விசாரணைகளுக்கு இடையூறை ஏற்படுத்தும் எந்த தகவலலையும் வெளிப்படுத்த முடியாது என்று தெரிவித்தார். (இ-5)

## சிறுநீரக வியாபாரம்; இந்.பிரஜைகளிடம் ஆவணங்கள் மீட்பு

இலங்கையில் சட்டவிரோதமான முறையில் சிறுநீரக விற்பனையில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் கடந்த சில நாட்களாக பல்வேறு செய்திகள் வெளியாகிவரும் நிலையில் தற்போது உத்தியோகபூர்வ இலட்சினை மற்றும் கடிதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனடிப்படையில், சந்தேகத்தின் பேரில் அண்மையில் கொழும்பில் கைதுசெய்யப்பட்ட இந்தியப் பிரஜைகளிடம் குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட விசாரணையில் இருந்து இந்திய வைத்தியர்களின் உத்தியோகபூர்வ இலட்சினை மற்றும் கடிதங்கள் என்பன மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்திய வைத்தியர்களின் உத்தியோகபூர்வ இலட்சினை மற்றும் கடிதங்கள் என்பன எவ்வாறு சந்தேக நபர்களிடம் வந்தது என்பது தொடர்பாகவும், ஆவணங்களின் உண்மைத் தன்மை தொடர்பாகவும் விசாரணைகளை துரிதப்படுத்தியுள்ளதாகவும்பொலிஸார்தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட 8 இந்திய பிரஜைகளில் 6 நபர்களின் சிறுநீரகங்கள் நீக்கப்பட்டிருந்ததாகவும் சட்ட வைத்திய அதிகாரிகள் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இனவாதத்தை தூண்டுபவர்கள் அரசியல்வாதிகளே-திகாம்பரம்

இனவாதத்தை தூண்டுபவர்கள் அரசியல்வாதிகளே என தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷனில் இடம் பெற்ற தேசிய ஒற்றுமையைக் கட்டி எழுப்பும் மாநாட்டில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் ஆலயங்கள், விகாரைகள், பாடசாலைகள், பள்ளிவாசல்கள் ஆகியவற்றில் ஒருபோதும் இந்த இனவாதம் பற்றி பேசப்படுவதில்லை. மாறாக சில அரசியல்வாதிகளே இந்த இனவாதத்தை தூண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் எல்லா மதங்களும் சமூகத்தில் ஒற்றுமையாக வாழ்வது பற்றியே போதனைகளை செய்கின்றன. ஆனால் வடக்கு மற்றும் தெற்கில் உள்ள ஒரு சில அரசியல்வாதிகள் தமது பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வதற்காக ஒற்றுமையாக வாழும் மக்கள் மத்தியில்இனவாதத்தினை விதைகிறார்கள் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## மோட்டார் சைக்கிள் மரத்துடன் மோதுண்டதில் மூவர் பலி!

(கொழும்பு)

கெகிராவை ,சேனபுர பிரதேசத்தில் நேற்றுக் காலை மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியை விட்டு விலகி மரம் ஒன்றுடன் மோதுண் டதில் 3 பேர் பலியாகியுள்ள னர்.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மூன்று பேரில் இரண்டு பேர் அந்த இடத்திலே உயிரிழந்ததுடன் மற்றொருவர் படு காயமடைந்த நிலையில் சேனபுர வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டதன் பின் உயிரிழந்துள்ளார்.

குறித்த மூன்று பேரும் கெகிராவை பிரதேசத்தினை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டது.(இ-5)

## சீனாவை சென்றடைந்தார் ரணில் விமான நிலையத்தில் வரவேற்பு



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீனாவை சென்றடைந்துள்ளதாக பிரதமர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு பிரதமர் நேறறு முன்தினம் சீனாவிற்கு புறப்பட்டுச் சென்றிருந்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீனாவின் தலைநகர் பீஜிங்கை சென்றடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீன வெளிவிவகார துணை அமைச்சர் கொங் சூவான் யூ மற்றும் சீனாவிற்கான இலங்கை தூதுவர் கலாநிதி கருணாசேன கொடிதுவக்கு ஆகியோர், பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் அவரது பாரியார் மைத்திரி விக்கிரமசிங்க ஆகியோரை பீஜிங்கில் கெப்பிட்டல் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து வரவேற்றனர்.

விமான நிலையத்திலிருந்து விசேட வாகனத் தொடரணி ஒன்றின் மூலம் ஹோட்டலுக்கு பிரதமர் உள்ளிட்ட குழுவினர் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (இ-5)

## ஆயுதங்கள் ஒப்படைப்பு குறித்த பொது மன்னிப்புக்காலம் அரசாங்கத்தால் அறிவிப்பு

பொதுமக்கள் சட்டவிரோதமாக வைத்திருக்கும் ஆயுதங்களை ஒப்படைப்பதற்காக பொது மன்னிப்புக் காலம் இலங்கை பாதுகாப்பு அமைச்சினால் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் மே மாதம் 5 ஆம் திகதி வரையில் ஆயுதங்களை ஒப்படைக்க முடியும் என தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் உரிய அனுமதிப்பத்திரம் எதுவுமின்றி ஆயுதங்களை வைத்திருக்கும் நபர்கள் அந்த ஆயுதங்களை பொலிஸ் நிலையங்கள் அல்லது பிரதேச செயலகங்களில் ஒப்படைக்க முடியும் என அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும், பொது மன்னிப்புக் காலத்தில் ஒப்படைக்கப்படாத ஆயுதங்கள் அதன் பின்னர் அபகரிக்கப்படுவதுடன் அதற்கான விசேட சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பொது மன்னிப்புக் காலத்தில் தம்மிடமுள்ள சட்ட விரோத ஆயுதங்களை ஒப்படைப்பவர்களுக்கு எதிராக எந்தவொரு சட்ட நடவடிக்கையும் முன்னெடுக்கப்படாது எனவும் குறிப்பிடப்படுகின்றது.

சட்டவிரோத ஆயுத பயன்பாட்டினால் ஏற்பட்டு வரும் பாதக விளைவுகளை தடுக்கும் நோக்கில் அரசாங்கம் இவ்வாறு நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சாவு அறிவித்தல்

## சண்முகம் வீரவாகு

பிறப்பு 15 - 05 - 1925



இறப்பு 07 - 04 - 2016

பிரப்பு வெட்டுவானை பிறப்பிடமாகவும் புதுக்குடியிருப்பு 6-ம் வட்டாரம் சிவநகரை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் வீரவாகு அவர்கள் 07.04.2016 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் சின்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கற்பகத்தின் அன்பு கணவரும் ஆவார்.

அன்னார் அமரர் கனகசுந்தரசுவாமி (முன்னாள் கிராமசேவையாளரும், வடமாகாண சபை உறுப்பினரும்), நகுலேஸ்வ்ரன் (சந்திரன்) ஆகியோரின் அன்பு தந்தையும், சண்முகப்பிரியா (ஓய்வுநிலை ஆசிரியர்), ரேவதி ஆகியோரின் அன்பு மாமனாரும் இலட்சுமி, ராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜனார்த்தனி, ஜீவர்சினி, ஜனமேயன், யதுகுலன், அமிர்தவர்சினி, அம்சத்வனி, தீலீபன், பரிமலா, சர்மிளா, பத்மப்பிரியா, தஜீந்திரன், ரஜிதா, வர்சனா ஆகியோரின் பேரனும், சகிந், நேசிகா, அட்சயா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08-04-2016 வெள்ளிக்கிழமை இன்று மு.ப 9.00 மணியளவில் அவரின் புதுக்குடியிருப்பு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**6-ம் வட்டாரம், பொக்கணை வீதி,**
**சிவநகர், புதுக்குடியிருப்பு.**
**T.P : 0772203125**

(C-4248)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# 31-ம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

## மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்

தோற்றம் 03 - 07 - 1933



மறைவு 09 - 03 - 2016

எமக்கு எல்லாமாகிய முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமரர் அ. அமிர்தலிங்கம் அவர்களின் துணைவியார் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள் கடந்த 09.03.2016 லண்டனில் காலமாகிய செய்தியை அறிந்தவுடன் நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் பத்திரிகைச் செய்தி - விளம்பரம் மூலமும் தமது கவலையை வெளிப்படுத்தி - எமக்கு ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-4250)

குறிப்பு : அன்னாரது மறைவையொட்டி தமது கட்சி அலுவலகங்களில் அஞ்சலி நிகழ்வுகளை நடத்தியவர்களுக்கும் எமது நன்றிகள்

மூளாய்
0777279238

குடும்பத்தவர் சார்பில்
தங்கமுகுந்தன் (பெறாமகன்)

# யாழில் சிறப்புப் பட்டிமன்றம் இந்தியத் தூதரகம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்தியத் துணைத் தூதரகம் வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு அமைச்சுடன் இணைந்து பட்டிமன்றமொன்றை நடத்த தீர்மானித்துள்ளது.

சுதந்திர இந்தியாவின் சட்டம் மற்றும் நீதித் துறைக்கான முதலாவது அமைச்சர் கலாநிதி அம்பேத்கார் அவர்களின் 125ஆவது பிறந்த தின நினைவு நாளை முன்னிட்டும்,

தமிழ் சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டும் எதிர்வரும் 14ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு சிறப்புப் பட்டிமன்ற நிகழ்வு நல்லூர், சங்கிலியன் தோப்பில் நடைபெறவுள்ளது.

இச்சிறப்புப் பட்டிமன்ற நிகழ்வில் இந்தியாவிலிருந்து வருகை தரும் பிரபல பேச்சாளர்களான பட்டிமன்றம் ராஜா மற்றும் திருமதி பாரதி பாஸ்கர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இவர்களுடன் வட மாகாணத்தின் பேச்சாளர்களான முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் தி.வேல்நம்பி, செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன், ந.விஜயசுந்தரம், இ.சர்வேஸ்வரா மற்றும் செல்வி ப.கதிர்தர்சினி ஆகியோரும் இப்பட்டிமன்ற விவாத அரங்கினில் கலந்து கொள்ளவுள்ளனர். (ந)

## கிராம சேவகர்களை மரியாதை செய்கிறேன்

(கொழும்பு)

கிராம சேவர்களின் சேவை தொடர்பில் தனது மனதில் பெரும் மரியாதை மற்றும் பக்தி காணப்படுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள 15 ஆயிரம் கிராம அதிகாரிகளில் இரண்டாயிரத்து 500 பேருக்கு அடையாள அர்த்தத்தின் படி சமாதான நீதவானாக பதவி வழுங்குவதற்காக அலரி மாளிகையில் நேற்று காலை இடம்பெற்ற வைபவத்தில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி இதனை தெரிவித்திருந்தார். (செ-12)

**SLEAS மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கான விடுமுறைக்கால வகுப்பு**

- ஆரம்பம்: 11.04.2016 திங்கட்கிழமை காலை 9.00 மணி
- வழமையான பிரிவு : ஒவ்வொரு ஞாயிறும் 10 மணியிலிருந்து 4 மணிவரை நடைபெறுகின்றது
- ஏனைய சகல போட்டிப் பரீட்சைகளுக்கான வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

(C-4251)

**தொடர்பு - 0766883394**
**யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவு**
(யாழ் ஆஸ்பத்திரி வீதி,
கொமர்ஷல் வங்கி அருகில்)

# ஆறாம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்


பிறப்பு 30-04-1954

இறப்பு 14-10-2015

அமரர்

## கிட்டிணன் நற்குணம்

**(சின்னக்கிளி)**



கூவில் புலோலி தென்மேற்கு புலோலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கிட்டிணன் நற்குணம் (சின்னக்கிளி) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 08.04.2016 வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் கூவில் கொட்டடி வைரவர் ஆலய முன்றலில் நடைபெற்று 09.04.2016 சனிக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

- நன்றி -

(C-4241)

கூவில்,
புலோலி தென்மேற்கு,
புலோலி.

தகவல்: குடும்பத்தினர்.

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## WALK- IN - INTERVIEW

Walk in interview for appointments to the following posts will be held on 15.04.2016 at the Board Room of this University on the time indicated against the posts.

| | |
|---|---|
| Posts of Temporary Lecturer/ Temporary Instructor in Music (Vocal) | 09.30 a.m |
| Posts of Temporary Lecturer/ Temporary Instructor in Music (Violin) | 10.00 a.m |
| Posts of Temporary Lecturer/ Temporary Instructor in Music (Miruthangam) | 10.15 a.m |

Interested candidates with the required qualifications are expected to be present for the Interview at time scheduled above with relevant certificates, NIC and **Self prepared application**

(C-4242)

**Registrar,**
**University of Jaffna**
**07.04.2016**

# நாட்டு நிலைமைக்கு ஏற்பவே பிரபுக்களின் பாதுகாப்பு-சரத்

(கொழும்பு)

**நாட்டின் பாதுகாப்பு நிலைக்கு ஏற்பவே முக்கியஸ்தர்களுக்கு வழங்கப்படும் (பிரபுக்கள்) பாதுகாப்பு தீர்மானிக்கப்படுவதாக அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் தொகையை நீதிமன்ற உத்தரவின் ஊடாக 30 ஆகக் குறைக்க முற்பட்டவர்கள் இன்று முக்கியஸ்தர்களின் பாதுகாப்புக் குறித்து பேசுவதாகவும் அவர் தெரிவித்தார். 23/2 நிலையியற் கட்டளையின் கீழ் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புத் தொடர்பில் தினேஷ் குணவர்த்தன எம்.பி. கேள்வியெழுப்பினார். இதன் பின்னர் ஏற்பட்ட சர்ச்சையின் போது கருத்து தெரிவிக்கும்போதே பீல்ட் மார்ஷல் இதனை தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர் யுத்தகாலத்தில் ஓய்வு பெற்ற முன்னாள் ஜனாதிபதிகளின்பாதுகாப்புக்கான படைவீரர் தொகையை 30 ஆகக் குறைக்க கடந்த அரசாங்கம் உச்சநீதிமன்றத்தில் உத்தரவொன்றைப் பெற்றது.

அன்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்பட்டது. அவரின் பாதுகாப்புக்கு பொலிஸாரை மாத்திரம் வழங்கும் நோக்குடன் இந்த உத்தரவு பெறப்பட்டிருந்தது. இதனை அமுல்படுத்த கடந்த அரசாங்கம் முயன்ற போது பாதுகாப்பு கவுன்சிலில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அதை நடைமுறைப்படுத்த நான் இடமளிக்கவில்லை.

தற்போதைய ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் பொலிஸ் பாதுகாப்பே வழங்கப்பட்டுள்ளது.

முக்கியஸ்தர்களுக்காக வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு படையினரின் தொகையை வெளியிடுவது உகந்ததல்ல. பயிற்றப்பட்ட படையினரே முக்கியஸ்தர்களின் பாதுகாப்புக்கு வழங்கப்படுகிறார்கள். பொலிஸ் பாதுகாப்பு வழங்குவது தவறல்ல. 2010 ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளிவந்தவுடன், என்னை வீட்டில் இறக்கிவிட்டு அனைத்து பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் மீள அழைக்கப்பட்டார்கள். என்னை சிறையில் அடைத்தார்கள். அந்த சிறையில் புலி உறுப்பினர்களும் இருந்தார்கள்.

எனவே மனசசாட்சிக்கு பயந்து பேச வேண்டும். இராணுவத் தளபதி ஒருவருக்கு பாதுகாப்பு அவசியம் இல்லையா? முக்கியஸ்தர்களுக்கான பாதுகாப்பு நாட்டின் பாதுகாப்பு நிலைக்கு ஏற்ப மாற்றப்படும். நேற்று 200 பேர் வழங்கப்பட்டிருந்தால் அது இன்று 100 ஆக மாறலாம். நாட்டின் பாதுகாப்பு நிலைக்கு அமையவே முடிவுகள் எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# பங்களாதேசத்தில் இஸ்லாமியத்திற்கு எதிராக பேஸ்புக்கில் கருத்துக்கூறிய மாணவன் கொலை

(டாக்கா)

பங்காளதேசத்தில் இஸ்லாமிய மதத்திற்கு எதிராக பேஸ்புக்கில் கருத்து பதிவு செய்த சட்டமாணவர் நிஜாமுதீன் சமாத் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர் நிஜாமுதீன் மதசார் பின்மை தொடர்பான தனது கருத் துக்களை பதிவு செய்ததை தொடர்ந்து டாக்காவில் கொல் லப்பட்டுள்ளார்.

டாக்காவில் போக்குவரத்து சந்திப்பு பகு தியில் வாளால் வெட்டி பின்னர் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. மாணவர் நிஜாமுதீன் பங்களா தேசத்தில் உள்ள மதசார்பின்மை குழுவை சேர்ந்தவர் என்றும் தெரிய வந்துள்ளது.

பங்களாதேசத்தில் மதத்திற்கு எதிராக கருத்து தெரிவிப்பவர்கள் தொடர்ந்து கொலைசெய்யப்படும் நிலையானது நீடித்து வருகிறது.

இப்பிரச்சினையை சரியாக கையாளுவதில் பங்காளதேச அரசு தோல்வி அடைந்துவிட்டது என்று மதசார் பற்றவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

டாக்காவில் போக்குவரத்து நெரி சல் காணப்படும் சந்தியில் நேற் றுக்காலை மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று பேர், வீட்டிற்கு சென்று கொண்டிருந்த நிஜாமுதீனை வெட்டிவிட்டு, பின்னர் துப்பாக்கியால் சுட்டு உள்ளனர் என்று பொலிஸ் தரப்பில் தெரி விக்கப்பட்டுள்ளது. (இ-5)

# 31ம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 05 | 09 |
| 08 | 03 |
| 1934 | 2016 |



## அமரர் நடராசா தங்கபூவதி (பொற்கொடி)

கடந்த 09.03.2016 புதன்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு எல்லா வகையிலும் அனுதாபம் தெரிவித்து இறுதி வரை இணைந்து நின்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று 08.04.2016 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் (சட்டநாதர் கோவில் கல்வியங்காடு) இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்


செட்டித்தெரு,
நல்லூர். (4133)

மருமகன்-இராகவன்
(சிரேஷ்ட சுகாதார மேற்பார்வையாளர்)
மகள்-சாந்தி (குடும்ப நல உதவியாளர்)

# அமெரிக்காவில் சிக்கிய 15 அடி இராட்சத முதலை

(வோஷிங்டன்)

15 அடி நீளம் கொண்ட இராட்ச முதலை ஒன்று அமெரிக்காவில் பிடிபட்டுள்ளது. இரு தொழில்சார் வேட்டையரே இந்த முதலையை பிடித்துள்ளனர்.



புளோரிடா மாநிலத்தில் கால் நடைகள் நீர் குடிக்கும் குட்டை ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் இந்த முதலையை சுமார் 20 அடி நெருங்கி தூரத்தில் வைத்து குறித்த வேட்டைக்காரர்கள் சுட்டுள்ளனர்.

அருகில்இருக்கும்பண்ணைகளில் உள்ள கால்நடைகளே இந்த குட்டையில் நீர் அருந்த வருகின்றன. இந்த முதலை கால்நடைகளை வேட்டையாடி இருப்பதாக பண்ணை உரிமையாளர் நம்புகிறார். இந்த முதலை 360 கிலோ கிராம் எடை கொண்டதாகும். (இ-5)

# இராசி பலன்

08.04.2016
(பங்குனி 26, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு
பிரதமை பிற்பகல் 3.03 மணிவரை
அச்சுவினி பின்னிரவு 1.50 மணிவரை
சுபநேரம் 6.07-7.37 மணிவரை
இராகுகாலம் 10.37-12.07 மணிவரை
செல்லப்பா சுவாமிகள் குருபூசை
அமிர்த சித்தம்

வளவன்

| | | | |
| --- | --- | --- | --- |
| சூரி, சுக் | புத, சந் | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் உத்தரம், அத்தம் | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மீனம்:** தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், இறை வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**மேடம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உடல்நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, பணியில் சிறு மனஉளைச்சல் ஏற்படலாம்.

**இடபம்:** சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்:** மற்றவர்கள் பாராட்டும் வகையிலான செயலொன்றை செய்து காட்டுவீர்கள், எண்ணிய காரியங்கள் உடனுக்டன் நிறைவேறும், தனவரவுகள் திருப்திதரும்.

**கும்பம்:** முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன்வருவர், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள்.

**கடகம்:** தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**மகரம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பெற்றோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** தொழிலில் போட்டியாக இருந்தவர்கள் விலகுவர், பேச்சில் இனிமை ஏற்படும், சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு:** நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார நன்மையுண்டு.

**விருச்சிகம்:** மனக்குழப்பம் அகலும், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும் நாள், பயணங்களால் பலனுண்டு, எண்ணங்கள் எளிதில் கைகூடும் நாள்.

**துலாம்:** திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொதுவாழ்வில் புகழ்கூடும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள்.

# 10 ஆயிரம் மெற்றிக்தொன் நெல் யாழ்.மாவட்டத்தில் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் காலபோக நெற்செய்கையில் அறுவடையாக சுமார் 10ஆயிரம் மெற்றிக்தொன் நெல் விவசாயிகளிடமிருந்து நெல்சந்தைப்படுத்தும் சபையினரால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.**

நெல்சந்தைப்படுத்தும் சபையினர்,கடந்த மார்ச்மாதம் முதல் யாழ்.மாவட்ட விவசாயிகளிடமிருந்து நிர்ணய விலைக்கு நெல் கொள்வனவு செய்யும் பணி ஆரம்பமாகி தற்போது பூர்த்தியடைந்துள்ளது. கொள்வனவு செய்யப்பட்ட 10 ஆயிரம் மெற்றிக்தொன் நெல்லில் 6ஆயிரம் மெற்றிக்தொன் நெல் வடமராட்சியில் உள்ள புலோலி அரச களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி,வடமராட்சி பிரதேச விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நெல்,புலோலி களஞ்சியத்தில் கடந்த மாதம் 18 ஆம் திகதி முதல் கடந்த 4 ஆம் திகதிவரை களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. (இ-60)

## இசைக்கருவி பயிற்சிக்கு விண்ணப்பிக்க முடியும்

(யாழ்ப்பாணம்)

ராகஸ்வர இசை மன்றத்தின் ஏற்பாட்டில் இளைஞர், யுவதிகளுக்கான சகலவிதமான இசைக்கருவிகள் இசைக்கும் பயிற்சிகள், இலவசமாக வழங்கப்படவுள்ளது.

மேற் கூறப்பட்ட பயிற்சிகளுக்கு உள்வாங்கப்படுபவர்களுக்கு கணனி, ஆங் கிலம், சிங்களம் மற்றும் எழுத்தாக்க பயிற்சிக ளும் இலவசமாக வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 10 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு இளைஞர்களுக்காக 5பிரிவுகளுக்கு யுவதிகளுக்கு தனியாக 5பிரிவுகளுமாக ஆக்கத்திறன் மற்றும் நுண்கலைத்திறன்,வாரத்தில் 2நாட்கள் வீதம்,இன்றைய சூழலில் இளையோர்களை நற்பிரஜைகளாக்கும் நோக்கில் மேற்படி பயிற்சிகளை ஒழுங்கமைக்கக்கூடிய இணைப் பாளர்கள் கலை, கலாசார, சமூக ஆர்வலர்களை யாழ். ராகஸ்வரம் இசைமன்றத்தின் Jaffnarakaswaram@gmail.com என்ற மின்னஞ்சல்முகவரியினூடாக விண்ணப்பிக்க முடியும் என்று மேற்படி இசை மன்ற செயலாளர் அறிவித்துள்ளார். (இ-51)

## தொழில்துறை சாதனையாளர் விருது

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய கைத்தொழில் சம்மேளனத்தினால் Ceylon National Chamber of Industry நடத்தப்படுகின்ற தொழில்துறை சாதனையாளர் விருதுகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் யாழ். மாவட்டத்தினை சேர்ந்த தொழில் முயற்சியாளர்கள் அதற்குரிய விண்ணப்பப்படிவத்தினை இல.124, இராசாவின்தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலமைந்துள்ள யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்வதுடன் எதிர்வரும் மேமாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க முடியும். மேலதிக விபரங்களுக்கு 021 222 6609 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் என யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்ற பிரதான நிறைவேற்று அதிகாரி அறிவித்துள்ளார். (இ

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலைய வருடாந்த பொதுக்கூட்டம் நாளை 9 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நிலைய மண்டபத்தில் சன சமூக நிலைய தலைவர் கு.சண் முகநாதன் தலைமையில் இடம்பெறும்.

இதில் 12.01.2014 ஆம் ஆண் டுக்கான பொதுக்கூட்ட அறிக்கை வாசித்தல், கணக்கறிக்கை சமர்ப் பித்தல், புதிய நிர்வாகசபைத் தெரிவு என்பனவும் இடம்பெறும். (இ

## நடைபாதை வியாபாரிகளை அகற்றி புதிய சந்தைக்குள் உள்வாங்குங்கள்

### நெல்லியடி வாணிபர் கழகம் வலியுறுத்து

நெல்லியடி வர்த்தக சங்க எல்லைக்குட்பட்ட மாலுசந்தியில் இருந்து மூத்தவிநாயகர் கோவில் வரை உள்ள வீதி ஓரங்களில் வியாபார நடவடிக்கையை மேற்கொள்ளும் அங்காடி வியாபாரிகளினால் நிரந்தரமாக தமது வர்த்தக சங்க எல்லைக்குள் வியாபாரத்தை மேற்கொள்ளும் வியாபாரிகள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகின்றார்கள். வருமான வரி, ஊழியர்சேமலாப நிதி,வங்கிக்கடன்கள் மற்றும் இதுபோன்ற நிதிவளங்களை வட்டிக்குப் பெற்று வியாபார நடவடிக்கையை மேற்கொள்ளும் வியாபாரிகள் இந்த அங்காடி வியாபாரிகளினால் பாதிப்புக்குள்ளாகின்றார்கள். கடந்த காலங்களில் பொது மக்களின் நன்மைகருதி பல பொது வேலைத்திட்டங்களுக்கு பெருமளவான நிதிப்பங்களிப்பினை வர்த்தகர்களே மேற்கொண்டிருந்தனர். வீதியோர வியாபாரத்தினால் போக்குவரத்து செய்யும் பொதுமக்களுக்கும் பலத்த இடையூறு ஏற்படுவதுடன் வீதி விபத்து ஏற்பட காரணமாக இருக்கிறது. ஆகவே வர்த்தகர்களின் நலன்கருதி இந்த தெருவோர அங்காடிகளை அப்புறப்படுத்தி நெல்லியடி புதிய சந்தைக்குள் உள்வாங்குமாறு நெல்லியடி வாணிபர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது. (இ-60)

# உடனடித் தீர்வு வேண்டும்

### இ.போ.ச.யாழ்.சாலை ஊழியர் தொழிற்சங்கங்கள் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்து சபையின் யாழ்.சாலை ஊழியர்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளுக்கு உயர் அதிகாரிகள் உடனடியாக தீர்வினை பெற்றுக்கொடுக்காதுவிடின் யாழ்.சாலை ஊழியர் தொழிற்சங்கங்களினால் பாரிய கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும் என ஊழியர் தொழிற்சங்கங்கள் கூட்டாக அறிவித்துள்ளன. இது தொடர்பாக இ.போ.ச.யாழ். சாலையில் இயங்குகின்ற தொழிற்சங்கங்களான ஸ்ரீலங்கா சுதந்திர போக்குவரத்து ஊழியர் சங்கம், தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கம், தமிழ்த் தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கம் ஆகியன கூட்டாக இணைந்து அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது,

இ.போ.சபை யாழ். சாலை முகாமையாளரினால் ஊழியர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதால் ஊழியர்கள் உளவியல் ரீதியில் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஊழியர்களை குறிவைத்து குற்றவாளிகளாக்கும் நோக்குடன் குற்றப்பத்திரம் தயாரித்தல், தண்டப்பணம் அறவிடுதல், இடைநிறுத்தம் செய்தல், இடமாற்றம் செய்தல், தண்டப்பணம் பெற்று மீட்டல் பயிற்சி வழங்குதல், வேலை நீக்கம் செய்ய எத்தனித்தல், மாதாந்தக் கலந்துரையாடல் தொழிற்சங்கங்களுடன் ஏற்படுத்தாமல் எதேச்சதிகாரமாக தன்னிச்சையான முடிவுகளை செயற்படுத்தல், தொழிற்சங்கங்களுக்கு இடையூறு விளைவித்தல் போன்ற செயற்பாடுகளாலேயே ஊழியர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக தனியார் பேருந்தை முந்திச் செல்லத் தவறின் அந்தச் சாரதி காப்பாளருக்கு எதிராக தனியார் பேருந்துக்கு ஆதரவாக செயற்பட்டாரென்று குற்றப்பத்திரம் போட்டு சம்பளத்தில் தண்டப்பணம் அறவிடப்படுகின்றது. மட்டுமல்லாமல் மேலதிக தண்டப்பணம் கட்டி மீட்டல் பயிற்சி பெற்றே ஆகவேண்டும்.

இவ்வாறான அநாகரிக செயற்பாடுகளால் பேருந்தை போட்டி போட்டு ஓடுவதற்கு சாலை முகாமையாளரே பிரதான காரணமென்று சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

வழிப்பட்டியல் வருவாய் குறைவாக இருந்தால் தண்டப்பணம் கட்டுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள்.

மேற்படி சாலை முகாமையாளரின் அநீதிகளுக்கு உயரதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளார்கள். தொழிற்சங்கங்களால் விடுக்கப்படும் கோரிக்கைகளுக்கு உரிய பதில் அளிப்பதில்லை. மாதாந்த ஊழியர்கள் தொடர்பான கலந்துரையாடலில் தொழிற்சங்கங்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகளுக்கு உரிய தீர்வினை வழங்குவதற்கு மறுத்து வருகின்றமை இதற்குக் காரணமாகும். இவ்வாறான நிலைமையில் தான் பாதிக்கப்பட்ட ஊழியர்கள்தொழில் திணைக்களம், மனித உரிமை ஆணைக்குழு, நீதிமன்றம் போன்றவற்றை நாடவேண்டியுள்ளது. அண்மைக் காலமாக வடமாகாண தொழில் திணைக்களம் எமது ஊழியர்கள் பிணக்குகளில் அதிகம் அக்கறை செலுத்தவில்லை எனவும் யாழ்.சாலை முகாமையாளருக்குஎதிரான முறைப்பாடுகள் நிலுவையில் இருப்பதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

யாழ்.சாலை முகாமையாளருடைய இவ்வாறான செயற்பாடுகளை கண்டித்து தொழிற்சங்க சட்டவிதிகளுக்கு அமைவாக பாரிய தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக ஊழியர்களுக்குரிய தீர்வினை பெற்றுக்கொடுக்கக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் எம்மால் மேற்கொள்ளவிருக்கும் பாரிய கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏனைய சாலை ஊழியர்களும் ஆதரவினை வழங்க வேண்டும் என அவ்வறிக் கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)



சிவகாமி பதிப்பகத்தின் 15 ஆவது வெளியீடான வே.தபேந்திரனின் யாழ்ப்பாண நினைவுகள்- பாகம்-3 நூலிற்கான வெளியீட்டு நிகழ்வு அண்மையில் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடிக்கு அருகாமையில் உள்ள ஹம்சியா மஹாலில் நடைபெற்ற போது...

## கலந்துரையாடல்

வடமாகாண முன்னாள் பாதுகாப்பற்ற புகையிரத கடவையாளர் சங்கத்தின் அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு புங்கன்குளம் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் சங்கத்தின் அங்கத்தவர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலுக்கு சமுகம் தரும் படி கேட்கப்பட்டுள்ளனர்.

சமுகம் தரும் அங்கத்தவர்கள் அனைவரும் கடந்த 1988-1990 ஆம் ஆண்டுகளில் பாதுகாப்பற்ற புகையிரத கடவையாளர்களாக பணியாற்றியமைக்கான சகல ஆவணங்களும் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும் என மேற்படி சங்கத்தின் செயலாளர் எம்.ரவிச்சந்திரன் கேட்டுள்ளார். (இ-5)

## போட்டிகள் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அராலி மத்தி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் 76 ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு நாளை 09 ஆம் திகதி (சனிக்கிழமை) கீழ்வரும் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

பிற்பகல் 2 மணிக்கு போட்டிகள் ஆரம்பமாகும்.

முன்பள்ளி சிறார்களுக்கான போட்டிகள், தரம் 1-5 வரையான மாணவர்களுக்கான போட்டிகள் (மாலை கட்டுதல், கோலம் போடுதல், இசைவும் அசைவும்).

மறுநாள் ஞாயிற்றுக் கிழமை இடம்பெறவுள்ள போட்டிகள் காலை 6 மணிக்கு ஆரம்பமாகும்.

பெரியவர்களுக்கான மரதன் ஓட்டம், மாவட்டம் தழுவிய சைக்கிள் ஓட்டம், நிலைய சிறார்களுக்கான ஓட்டம், மெதுவான மோட்டார் சைக்கிள் ஓட்டம், முதியவர்களுக்கான ஓட்டம், தமிழர் பாரம்பரிய போட்டிகள் (கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல்).

ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் தரம் 6- 11 வரையான மாணவர்களுக்கான பேச்சுப் போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

போட்டிகள் யாவும் நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. போட்டிகளில் பங்கு பற்றும் அனைவருக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

நிலையத்தின் இறுதி நாள் கலை நிகழ்வுகள் புதுவருடப் பிறப்பன்று 14.04.2016 நிலையத்தின் பிரதான கலையரங்கில் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவிருக்கின்றன. இந்நிகழ்வில் பாரம்பரிய கலை நிகழ்வுகள் பட்டிமன்றம், நடனம் ,நாடகம் என்பனவும் இடம்பெறவுள்ளன.(இ

# குஞ்சர்கடை வீதியோரமாகவுள்ள முட்செடிகளை உடன் அகற்றுங்கள்

(யாழ்ப்பாணம்)

குஞ்சர்கடை சந்தியில் இருந்து தெற்குப்பக்கமாக மண்டான் வீதியில் சுமார் 200 மீற்றர் தூரம் வரை இருமருங்கிலும் நாயுருவி, இலந்தை போன்றபாதசாரிகளுக்கு இடையூறுவிளைவிக்கும் மரம், செடிகள் அடர்ந்து வளர்ந்துள்ளன.

இதனால் இப்பாதையால் பயணிக்கும்பாதசாரிகள்,மாணவர்கள்மற்றும்வாகன ஓட்டிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகுகின்றனர்.

இவ்வீதியால் இலங்கை போக்குவரத்துக்குச் சொந்தமான பேருந்து தினமும் மூன்று, நான்கு தடவைகள் சேவையை மேற்கொள்கின்றது.

இவ் வேளைகளில் இடமளிப்பதில் ஏற்படும் சிரமத்தை கவனத்தில் எடுத்து வீதித்தொழிலாளர்கள் மூலம் இவ் வீதியை துப்புரவாக்கி தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ்வடமராட்சி தெற்கு, மேற்கு (கரவெட்டி) பிரதேச சபை செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளகடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-60)

# தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு நடைபெறும் விசேட ரயில் சேவை அட்டவணை

தமிழ், சிங்கள புத்தாண்டையொட்டி நாளை மறுதினம் 10 ஆம் திகதி முதல் தூர இடங்களுக்கு விசேட ரயில் சேவைகளை நடத்த ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி பண்டாரவளை, யாழ்ப்பாணம், மஹாவ, காலி மற்றும் மாத்தளை ஆகிய இடங்களுக்கு இந்த விசேட ரயில் சேவைகள் நடத்தப்படவுள்ளன.

இதற்கான நேர அட்டவணை திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

| திகதிகள் | புறப்படும் நேரம் | சென்றடையும் நேரம் |
|---|---|---|
| 10,12,17,19 | கொழும்பு கோட்டை- 19.30 | பண்டாரவளை- 04.01 |
| 11,13,18,20 | பண்டாரவளை 8.30 | கொழும்பு கோட்டை- 16.57 |
| 12 | கொழும்பு கோட்டை- 22.00 | யாழ்ப்பாணம்- 6.30 |
| 17 | யாழ்ப்பாணம்- 20.00 | கொழும்பு கோட்டை- 4.43 |
| 08,09,10,11,12,13 | கொழும்பு கோட்டை- 13.05 | மஹாவ- 16.29 |
| 08,09,10,11,12,13 | மஹாவ- 17.10 | கொழும்பு கோட்டை- 20.57 |
| 11,12,13,17 | மருதானை-09.20 | காலி- 12.02 |
| 11,12,13,17 | காலி- 13.00 | மருதானை- 15.40 |
| 11,12,13,15,16,17 | மருதானை- 15.10 | மாத்தளை- 18.16 |
| 11,12,13,15,16,17 | மாத்தறை- 19.00 | மருதானை- 22.50 |


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா:51<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/4217 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம்: 5'3".<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு:விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/5008 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 22 சூரி செவ் 5 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்A/L/சொந்த தொழில<br>தொ.இ: B/4220 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மூலம<br>கி.பா: 43<br>உயரம்: 153cm<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5009 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 67<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்BSc/பொறியியலாளர்<br>தொ.இ: B/4223 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 28 செவ் 2 இல்<br>உயரம்: 156cm<br>தகைமை/தொழில்:A/L/வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5010 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 54 செவ் 1 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ் PR<br>தொ.இ: B/4225 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/5013 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
([illegible])


தரம்-5 மாணவர்களுக்கான

# புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-05

பகுதி-II

## தமிழ்க் கல்விக் கழகம்

## விடைகள்

(07.04.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)

01.
1.இரக்கம்
2.நற்குணங்கள் உடையவர்கள்
3.ஞாபகம்
4.வைத்திருப்பவர்
5.அவர்கள்
6.கல்லில் எழுதப்பட்ட எழுத்துப்போல்
02.
1.கருணை
2.களை
3.பானம்
03.
1. கூவியது
2.சென்றன
3.சென்றாள்
4.வந்தான்
04.
1.மெய், வாய், கண்,மூக்கு, செவி என்பன ஐம்பொறிகளாகும்.
2. இது கணனியின் "மையச் செயலகமாக" விளங்குகிறது.
05.
1.முனிவர்கள் வாழுமிடம் – ஆச்சிரமம்
2.வழக்கில் குற்றம் சாட்டப்படுபவன் – பிரதிவாதி
06.
1.செல்வங்களுள் சிறந்த செல்வம் கல்விச் செல்வமாகும்.
2.நாங்கள் நூலகத்திற்குச் சென்று நூல்களை வாசிக்கின்றோம்.
07.
1.இங்கிலாந்து
2.நன்றன்று
08.
COCONUT
RAINBOW
09.
தயவு செய்து அமைதியாக இருக்கவும்.
நான் நாளை வருவேன்
10.
1.கைகளை உயர்த்துங்கள்-Handsup
11. I.கூம்பியா
II.பாசல
12.
1.பிறந்த நாள் வாழ்த்துக்கள்
2.முன்னோக்கி வரவும்
13. கெசல் மேசய ஒறலோசுவ
14. காலையில் தினமும் உடற்பயிற்சி செய்வதால் உடல் சுறுசுறுப்படையும்.

நான் எனது உடலை கட்டுக்கோப்பாக வைத்திருப்பதற்காக உடற்பயிற்சியில் ஈடு படுகிறேன்.

உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உடற்பயிற்சிகள் பெரிதும் உதவுகின்றன.

15.
01.
1.830, 308, 803
2.308,803, 830
02.30933
03.ரூ.165.00
04.4/6
05.9cm
06.6Kg
07.44cm
08. 1. D,S 2.V
09. 40 கோழிகள்
10.1. 08:10 மணித்தியாலம்
2.3 மணித்தியாலம் 35 நிமிடம்
11.256
12.1. 02
2. 02
13.4cm
14.8 நாட்கள்
15.259km

16.
1. 1
2. 3
3. 4
4. 3
5. 1
6. 2
7. 1
8. 3
9. 2
10. 3
11. 2
12. 4
13. 3
14. 1
15. 3
16. 3
17. 4
18. 1
19. 3
20.2
21. 3
22.2
23.4
24.4
25.4
26.3
27.2
28.2
29.4
30.3

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி, இடைக்காட்டுப்பகுதி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தான மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 20 ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும் 21ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (இ-5)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# உலக நாடுகளின் இராணுவ செலவு பெருமளவு அதிகரிப்பு

2011 இற்குப் பிந்திய காலப் பகுதியில், உலக நாடுகள் இராணு வத்திற்குச் செய்யும் செலவு கடந்த ஆண்டு பெருமளவு அதிகரித்துள் ளது.

கடந்த ஆண்டு சர்வதேச ரீதியாக இராணுவத்திற்கென கட்டத்தட்ட 1.7 ட்ரில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாக ஸ்டாக்ஹோம்சர்வதேச அமைதி ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. இரா ணுவத்திற் கென அதிகம் செலவு செய்த நாடுகளின் பட்டியலில் ரஷ்யாவை பின் னுக்குத் தள்ளி சவுதி அரே பியா மூன்றாவது இடத்திலுள்ளது.

சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்துள்ள நிலை யில் எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் தமது இராணுவச் செலவுகளைக் குறைத்துக் கொண்டுள்ள ஒரு சூழலில, சவுதி தனது இராணுவச் செலவுகளை அதிகரித்துள்ளது.

ஏமனில் உள்ள ஹூத்தி கிளர்ச்சி யாளர்களுடன் சண்டையிடுவதற் காக சவுதி 5.3 பில்லியன் டொலர் களை செலவு செய்துள்துள்ளது. இதனால் அந்நாட்டின் இராணுச் செலவை கிட்டத்தட்ட 6 சத வீதம் அதிகரித்துள்ளது.

ரஷ்யாவின் எல்லைப்புற நாடுகளும்தமது பாதுகாப்பு செலவீனங்களை பெருமளவில் அதிகரித்துக் கொண்டுள்ளதாக அந்த ஆய்வு நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. இராணுவச் செலவுகளைப் பொறுத்த வரை அமெரிக்கா முதலிடத்திலும் சீனா இரண்டாவது இடத்திலும் உள்ளன. (இ-5)

# இரவு வேளைகளில் மதுபோதையில் செல்பவர்கள் பொதுமக்கள், வர்த்தகர்களுக்கு இடையூறு

## ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முள்ளியவளைப் பொலிஸாருக்கு பொதுமக்கள் வேண்டுகோள்

முல்லைத்தீவு முள்ளியவளை பிரதேசத்தில் நாளாந்தம் இரவு வேளைகளில் மது போதையில் செல்பவர்கள் வர்த்தக நிலையங்களுக்கும் பொதுமக்களுக்கும் பல்வேறு இடைஞ்சல்களை ஏற்படுத்துவதாகவும் அவர்களைக் கட்டுப்படுத்த முள்ளியவளைப் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வர வேண்டும் எனவும் பொதுமக்கள், வர்த்தக நிலை உரிமையாளர்கள் ஆகியோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

குறித்த பிரதேசங்களில் இரவு நேரங்களில் மது போதையில் செல்லும் சில விசமிகள் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகவுள்ள மின்குமிழ்களை திருடிச் செல்வதுடன் சில இடங்களில் அவற்றைச் சேதப்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் பிரதான சந்திகளில் ஆங்காங்கே கூடும் இவ்வாறானவர்கள் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் பாடல்களை ஒலிக்கச் செய்து வீதிகளில் குழுமி நின்று நடனம் ஆடுவதையும் அவதானிக்க முடிகின்றது என பாதிக்கப்பட்ட பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகள் நாளாந்தம் அதிகரித்துச் செல்வதால் பொது மக்கள், வர்த்தக நிலைய உரிமையாளர்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர்.

எனவே இ விடயத்தை முள்ளியவளை பொலிஸார் கவனத் திற்கு கொண்டு இரவு சுற்றுக் காவல் கள் வீதி ரோந்து நடவடிக்கைகளை அதிகப்படுத்திப் பொது மக்களுக்கு இடையூறு விளைவிப்பவர்களை கட்டுப்பாட்டினுள் கொண்டுவர ஆவன செய்ய வேண்டும் என பொது மக்கள், வர்த்தக நிலைய உரிமையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-3-310)




# துணுக்காய் பிரதேச முதியவர்களுக்கு இன்று முதல் மாதாந்த உதவித்தொகை

(மல்லாவி)

மத்திய சமூக சேவைகள் அமைச்சின் கீழுள்ள முதியோர் செயலகத்தின் ஊடாக 70 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கு வழங்கப்படும் 2 ஆயிரம் ரூபா உதவித் தொகை எதிர்வரும் தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் துணுக்காய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட முதியவர்கள் தாம் வழமையாகப் பெறும் தபாலகங்கள் ஊடாகப் பெற்றுக் கொள்ளமுடியுமென துணுக்காய் பிரதேச செயலாளர் இ.பிரதாபன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மாதாந்த இக்கொடுப்பனவு 15 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை வழங்கப்பட்டு வருவது வழமையாகும். இம்முறை விசேட ஏற்பாடாக சித்திரை வருடப் பிறப்பை எமது பிரதேசத்தைச் சேர்ந்த முதியவர்கள் கொண்டாடுவதற்காக முற்கூட்டியே வழங்கப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-3-15)

# 150 முதியோருக்கு மூக்குக் கண்ணாடி வழங்கலும் மருத்துவ சேவையும்

(கிளிநொச்சி)

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் யாழ்ப்பாண லயன்ஸ் கழகத்தினால் 150 முதியோருக்கு மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வும், மருத்துவ சேவை வழங்குதலும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாவட்ட முதியோர் அபிவிருத்திப் பேரவை அங்கத்தவர்களின் பூரண ஒத்துழைப்புடன் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி டிப்போ சந்திக்கு அருகாமையிலுள்ள மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்திலேயே இந்த மருத்துவ முகாம் நடைபெறும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் 021 321 5529 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-254)

# கூட்டுறவுச் சங்க அங்கத்தவ குடும்பங்களின் 25 பெண்களுக்கு பனங்கைப்பணிப் பயிற்சிநெறி



இப் பயிலுநர்களுக்கான மூன்று மாத காலப் பயிற்சியில் மூலப் பொருள மற்றும் உபசரணைக் கொடுப்பனவினை உள்ளடக்கிய பயிற்சிக் காலக்கொடுப்பனவாக, மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இவ் ஆரம்ப விழாவுக்கு பிரதம விருந்தினராக பனை அபிவிருத்திச் சபை தலைவர் மா.கணபதிப்பிள்ளை, சிறப்பு விருந்தினர்களாக விரிவாக்க முகாமையாளர் கா.கோபால கிருஸ்ணன், முல்லை.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உ.சுபசிங்க, சிறுசுவடுகள் தலைவி திருமதி.த.பவானி மற்றும் பனை அபிவிருத்திச் சபையின் முல்லை.மாவட்ட இணைப்பாளர் பி.றஜீபன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கியிருந்தனர். (2-3-9)

பனை அபிவிருத்திச் சபையினால் விசுவமடு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அஙகத்தவர்களின் குடும்பங்களைச சார்ந்த 25 பெண்களுக்கு கடந்த 4 ஆம் திகதி பனங்கைப்பணிப் பயிற்சிநெறி சங்கக் கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

# மஹோற்சவம்

(வவுனியா)

வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடி யேற்றத் துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத்திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் 20 ஆம் திகதி புதன் கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (2-3)



வட்டு இந்து வாலிபர் சங்கத்தினால் முல்லைத்தீவு மாவட்ட அமரா குடும்பத் தலைமை தாங்கும் பெண்கள் ஒன்றியத்தின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு நேற்று முன்தினம் பாடசாலை உப கரணங்கள் வள்ளிபுனம் இனிய வாழ்வு இல்ல மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது. முதற்கட்டமாக பிள்ளைகளுக்கு புத்தகப்பைகள், அப்பியாசக் கொப்பிகள் என்பன வழங்கப்பட்டன. (படங்கள்:-மல்லாவி செய்தியாளர்)

# இணைந்த நேர அட்டவணைக்கு இ.போ.ச.இணக்கம் 19 ஆம் திகதி உயர்மட்டக்குழு கூடுகின்றது

(பனிக்கன்குளம்)

இலங்கைப் போக்குவரத்து சபைக்கும் தனியார் போக்குவரத்துத் துறைக்கும் இடையில் நீண்ட காலமாக நிலவிவந்த பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்ற நோக்கோடு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ வரனினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தற்போது முடிவு நிலையை எட்டியிருப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த நேர அட்டவணையை தயார்செய்யும் பொருட்டு மாவட்ட ரீதியாகவும், மாகாண ரீதியாகவும் இதுவரை 35 கூட்டங்களுக்கு மேல் நடத்தப்பட்டு முடிவு செய்யப்பட்டுள்ள நேர அட்டவணைக்கு இறுதிவரை இ.போ.சபையினர் தமது சம்மதத்தை தெரிவிக்காமல் இழுபறி நிலையில் இருந்துவந்ததாகவும், நேற்று முன்தினம் அமைச்சர் நேரடியாக பிராந்திய பிரதம முகாமையாளர் மற்றும் நடைமுறைப்படுத்தும் முகாமையாளர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு விடயம் தொடர்பில் கலந்துரையாடியபோது இறுதியில் தமது சம்மதத்தை தெரிவித்திருக்கின்றனர்.

இந்த நிலையில் ஏற்கனவே தனியார் போக்குவரத்துத் துறையினர் தமது சம்மதத்தை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ்விடயம் தொடர்பில் உருவாக்கப்பட்ட உயர்மட்டக் குழு எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அமைச்சரின் தலைமையில் ஒன்றுகூடவுள்ளது.

அன்றையதினம் புதிய இணைந்த நேர அட்டவணை எத்தினத்தில் இருந்து அமுல்படுத்துவது எனும் தீர்மானத்தையும் எடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (2-3-281)

# கிராமமட்ட அமைப்புக்களைப் புதுப்பித்து திட்டங்களை நடைமுறைப்படுத்த உதவுங்கள்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் செல்வபுரம், இந்துபுரம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் உள்ளிட்ட கிராம மட்ட அமைப்புக்களை புதுப்பிக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மீள் குடியேற்றப்பட்ட பின்னர் அமைக்கப்பட்ட குறித்த அமைப்புக்கள் கடந்த 6 வருடங்களாக புதிய தெரிவுகள் எதுவும் இடம்பெறாத நிலையில் இயங்கி வருவதாகவும், தமது கிராமத்திற்கு கிடைக்க வேண்டிய அபிவிருத்தி திட்டங்கள் கிடைக்கப் பெறாமல் உள்ளதாகவும் அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

குறித்த கிராம சேவையாளர் பிரிவில் உள்ள இரண்டு கிராமங்களிற்கும் சமமான முறையில் அபிவிருத்திகள் சென்றடைவதில்லை எனவும், செல்வபுரம் என கிராம அபிவிருத்தி சங்கம் 2009ம் ஆண்டுவரை இயங்கி வந்ததாகவும் மீள் குடியேற்றத்தின் பின்னர் குறித்த கிராம அபிவிருத்தி சங்கம் இயக்கப்படாமல் இந்துபுரம் கிராம அபிவிருத்தி சங்கம் என புதிய சங்கம் அமைக்கப்பட்டதாக குறிப்பிடும் பிரதேச மக்கள், செல்வபுரம் கிராம அபிவிருத்தி சங்கத்தில் பல இலட்சக்கணக்கான நிதி காணப்பட்டதாகவும், அவை தொடர்பில் எவ்வித கணக்குகளும் காண்பிக்கப்படாத நிலையில் புதிய கிராம அபிவிருத்தி சங்கம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடுகின்றனர்.

செல்வபுரம் கிராம அபிவிருத்தி சஙகத்தினையும் இயங்கு நிலைக்கு கொண்டு வர வேண்டும் என கோரிக்கை விடுக்கும் மக்கள், இந்துபுரம் கிராம சேவையாளர் பிரிவல் வழங்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் இரு கிராமங்களிற்கும் சமமாக பகிரப்பட வேண்டும்எனவும கோரிக்கை விடுக்கின்றனர். (2-3-15)

புதிய உயர்தர வகுப்புக்கள் 2ஆம் தவணை ஆரம்பமாகும்

# கணித பாடத்தை கருத்திற் கொள்ளாது உயர்தர வகுப்புகளுக்கு அனுமதிக்குக

## மாகாண கல்வியமைச்சின் செயலாளர் அறிவிப்பு

வடக்கு மாகாண கல்வி அமைச்சிற்குட்பட்ட பாடசாலைகளில் கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை எழுதி சித்தியடைந்த மாணவர்களுக்கான 2018 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரத்திற்குரிய புதிய வகுப்புகள் வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் இரண்டாம் தவணை ஆரம்பத்திலிருந்து ஆரம்பிக்கப்படும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. ரவீந்திரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்றிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, 2015 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றி சித்தியெய்திய மாணவர்கள் அனைவரையும் 2018 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பிரிவிற்குப் பொருத்தமான பாடங்களைத் தெரிவு செய்து கற்பதற்கு கணித பாட சித்தியைக் கருத்தில் கொள்ளாது இடமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

குறித்த க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் கணித பாடத்தில் சித்தியைப் பெறத் தவறி இருப்பினும் நடப்பாண்டு டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் அல்லது எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த.(சா/த) பரீட்சையில் குறைந்தது எஸ் தரப்பெறுபேற்றை பெற்றுத்தரவேண்டும்என மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட வேண்டும்.

இதேவேளைக.பொ.த (உ/த) வகுப்புக்கள் யாவும் நடப்பாண்டில் இரண்டாம்தவணை ஆரம்பத்திலிருந்து அரம்பிக்கப்படும் என அவர் அந்த சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.(2-3-15)

# வவு. மாவட்ட அபிவிருத்தி, தேவைகள் தொடர்பில் ஆளுநர் கலந்துரையாடல்

## இராணுவ குடியேற்றத்திட்ட பகுதிக்கும் நேரில் விஜயம்

வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட செயலகத்திற்கு சென்று அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

வவுனியா மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் திணைக்கள அதிகாரிகளை சந்தித்து மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும் தேவைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் மாவட்ட மட்டத்தில் ஒவ்வொரு திணைக்களத்திற்கும் மத்திய அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பாக கேட்டறிந்து கொண்டதுடன் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் மாவட்ட மட்ட தேவைகள் குறித்தும் அறிந்து கொண்டார்.

இச் சந்திப்பில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன். வடக்கு மாகாண ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் எஸ். சோமசிறி. அரச அதிபர் ரோஹண புஸ்பகுமார. திணைக்களத் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை. அண்மையில் வவுனியா கொக்குவெளி பிரதேசத்தில் கையளிக்கப்பட்ட இராணுவக் குடியேற்றத்திட்டம். இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட நெற்களஞ்சிய சாலை என்பவற்றையும் ஆளுநர் சென்று பார்வையிட்டார். (2-3-250)

## முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில்

# வெட்டுக்கிளிகளினால் விவசாயிகள் பெரும்பாதிப்பு

# நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்பு

(குருமன்காடு)

வன்னி மாவட்ட விவசாயிகள் மேற்கொண்டு வந்த விவசாயச் செய்கைகள் வெட்டுக்கிளியின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளமை குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்ற நிலையில் உரிய நடவடிக்கைகளை எடுக்க ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

மன்னார். வவுனியா. முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் மேற்கொண்டு வந்த விவசாய நடவடிக்கைகளில் வெட்டுக்கிளியின் தாக்கம் அதிகரித்த நிலை காணப்பட்டமையினால் விவசாயிகள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்திருந்தனர்.

இந்நிலையில் விவசாய நடவடிக்கைகளும் பாதிப்படைந்தன.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட விவசாயிகள் செல்வம் அடைக்கலநாதனின் கவனத்திற்கு கொண்டு சென்ற நிலையில் அவர் ஜனாதிபதி. பிரதமர் மற்றும் விவசாய அமைச்சர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார்.

பாதிக்கப்பட்ட விவசாயிகள் தொடர்பான அறிக்கையினை உடனடியாக சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி செயலகம். பிரதமர் மற்றும் விவசாய அமைச்சர் வன்னி மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேலும். பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் விவசாயிகளுக்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்கவும்வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது. (2-3-250)



மன்னார் மாவட்ட மாந்தை மேற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தேவன்பிட்டி கிராமத்துக்கு கடந்த ஆண்டு வடக்கு கிராம அபிவிருத்தித் திணைக்களம் மூலம் ரூபா 2 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு கட்டப்பட்ட வெதுப்பகமும் விற்பனை நிலையமும் கடந்த 5 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணியளவில் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேயினால் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டதை படத்தில் காணலாம்.

(படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

## வற்றாப்பளை பனிச்சைமர விவகாரம்

# மதத்தலைவர்களின் தலையீட்டினால் சமரசமான தீர்வு எட்டப்பட்டுள்ளது

(முள்ளியவளை)

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய நிர்வாகத்தின பராமரிப்பில் முன்றாம் கட்டைச்சந்தியிலுள்ள பனிச்சை மரத்தை சுற்றி சீமெந்தினால் சுவர் அமைக்கும் வேலை நேற்று முன்தினம் நிறைவு பெற்றது.

இதுதொடர்பில்தெரியவருவதாவது, சகோதார இனத்தைச் சேர்ந்த நபர் ஒருவரினால் ஏற்படுத்தப்பட்டு வந்த முட்டுக்கட்டை மதத்தலைவர்கள், புத்திஜீவிகள் ஆகியோரின்தலையீட்டையடுத்து சமரசமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

இதனையடுத்து காணி உரிமையாளரினால் அமைக்கப்பட்டிருந்த வேலிக்கட்டைகள் நேற்று முன்தினம் மாலை அகற்றப்பட்டு வேலி எல்லையை பின்னோக்கி நகர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதனையடுத்து கோவில் ஆலய நிர்வாகத்தினரால் பனிச்சை மரத்தை சுற்றி சீமெந்தினால் சுவர் அமைக்கும் பணி நேற்று முன்தினம் இரவோடிரவாக முடிவு பெற்றது.

இதேவேளை மேற்படி ஆலய விசாகப் பொங்கல் விழா மே மாதம் 23 ஆம் திகதி வழமை போன்று நடைபெறும்.

அதற்கு முன்னோடியாக மே மாதம் 16 ஆம் திகதி திங்கட்கிழமை காட்டா விநாயகர் ஆலயத்தில் இருந்து வழமையாக தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு அன்றைய தினம் சிலாவத்தை தீர்த்தக்கரைக்குச் செல்லும் பாதையிலுள்ள மூன்றாம் கட்டை சந்தியிலுள்ள பனிச்சை மரத்தின் புனிதத் தன்மையான இடத்தில் தீர்த்தக்குடம் இறக்கி வைக்கப்படும்.




அதன்பின் அங்கு இளைப்பாறி அம்பாளை நோக்கிய பிரார்த்தனை இடம்பெற்று வழமைபோன்று சிலாவத்தை தீர்த்தக் கரையில் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு நடைபெற்று தொடர்ந்து காட்டா விநாயகர் ஆலயத்தில் இருக்கின்ற அம்மன் மண்டபத்தில் 7 நாட்கள் விளக்கேற்றி விட்டு மே மாதம் 23 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை மடப்பண்டம் எடுத்து வரப்பட்டு விசாகப் பொங்கல் நடைபெறும். தற்போது ஆலய திருப்பணி வேலைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-3)

# முள்ளியவளையில் இயங்காத நிலையிலுள்ள சனசமூக நிலையங்களை மீள இயக்குக

## பொதுமக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முள்ளியவளை உப அலுவலகத்திற்குட்பட்ட சனசமூக நிலையங்களில் சில எவ்விதமான செயற்பாடுகளும் இன்றி காணப்படுகின்றன. அவ்வாறான சனசமூக நிலையங்களை மீளப்புதுப்பித்து இயங்க வைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். குறித்த பிரதேசத்தில்உள்ள ஒவ்வொருகிராம அலுவலர் பிரிவு ரீதியான தனித்தனியே சனசமூகநிலைய நிர்வாகங்கள் உள்ளன. ஆனாலும் அவற்றில் சில நிர்வாகங்கள் செயலிழந்து காணப்படுவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை இப்பிரதேசத்தில் உள்ள சனசமூக நிலையங்கள் சிலவற்றிற்கு பிரதேச சபையினரால் நாளாந்த, வாராந்த பத்திரிகைகள் மக்களுக்கு வாசிப்பதற்கு வழங்கப்படுகின்ற போதிலும் பிரத்தியேக கட்டடங்கள் இல்லாத நிலையங்களுக்கு பத்திரிகைகள் வழங்கப்படுவதில்லை.

ஏனெனில் அவை வழங்கப்பட்டாலும் மக்கள் சென்று பத்திரிகைகளை வாசிப்பதற்கு இடப்பற்றாக்குறை காரணமாகவுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. ஆனாலும் கூடுதலான கிராமங்களில் பொதுநோக்கு மண்டபங்கள் காணப்படுகின்றன.

அவற்றில் குறித்த பத்திரிகைகளைவாசிப்பதற்குவைப்பதன்மூலம் மக்கள் நன்மை அடைவதுடன் சனசமூக நிலையங்களின் செயற்பாடுகளையும் உரிய முறையில் நெறிப்படுத்த முடியுமெனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இது தொடர்பில் கவனத்தில் எடுத்து இயங்காமல் இருக்கும் சனசமூக நிலையங்களை இயங்கவைப்பதுடன் அனைத்து சனசமூக நிலையங்களுக்கும் வாராந்த, நாளாந்தப்பத்திரிகைகள் கிடைக்கக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-3-310)

## நிதி அமைச்சருக்கு எதிரான தீர்மான விவாதம் மே மாதம்

நிதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மான விவாதம் எதிர்வரும் மே மாதம்நடைபெறவுள்ளது.

நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்கவிற்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சியினர் சபாநாயகரிடம் நம்பிக்கையில்லா தீர்மானம் ஒன்றை சமர்ப்பித்திருந்தனர்.

இந்த நம்பிக்கையில்லா தீர்மான யோசனை தொடர்பிலான விவாதம் எதிர்வரும் மே மாதத்தில் நடத்தப்படும் என சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த விடயம் பற்றி கலந்துரையாடப்பட்டது.

அமைச்சர் சம்பிக்க ரணவக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மான யோசனையை நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்குவதற்கு முன்னதாக சட்ட ஆலோசனை பெற்றுக் கொள்ளப்படும்.

இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தில் வழக்கு விசாரணை ஒனறு தொடர்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளதாக கரு ஜயசூரிய மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# போரை முடிவுக்கு கொண்டு வந்தாலும் மக்கள் மத்தியில் பீதியை மகிந்த அரசு விதைத்தது

## அஜித் மன்னப்பெரும குற்றச்சாட்டு

கடந்த அரசாங்கம் போரை முடிவுக்குக் கொண்டு வந்தாலும் மக்கள் மத்தியில் பீதியை விதைத்தது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

மீளவும் ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கில் போர்ப் பீதியை மக்கள் மீது திணிக்க முயற்சிக்கின்றனர்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

இதனால் நாட்டில் மீளவும் போர் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் கிடையாது. மீளவும் பிரச்சினைகள் இடம பெறக்கூடாது என்ற அடிப்படையிலேயே நாம் செயற்பட்டு வருகின்றோம்.

போர் வெற்றிக்கு பின்னர் போரினால் பாதிக்கப்பட்ட மக்களை இயல்வு நிலைக்கு திருப்ப எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென நாம் ஆராய்ந்து வருகின்றோம்.

காணிகள் தொடர்பில் அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தசட்டம்போரல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மை ஏற்படுத்தக்கூடியது.

கடந்த அராங்கம் வடக்கின் வசந்தம் என்ற பெயரில் தமக்கு வசந்தத்தை ஏற்படுத்திக் கொண்டது என அஜித் மன்னப்பெரும மேலும் தெரிவித்துள்ளார். (இ-5

# அவுஸ்திரேலியாவுடனான நீண்ட உறவை இலங்கை மீண்டும் உறுதிப்படுத்தியது!

## அமைச்சர் மங்கள தெரிவிப்பு



அவுஸ்திரேலியாவுடன் நீண்டகால உறவை மீண்டும் இலங்கை உறுதிப்படுத்தியுள்ளது என வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர நேற்று முன்தினம் அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் ஜூலி பிஸப்பை சிட்னியில் சந்தித்த போது தெரிவித்துள்ளார்,

கடந்த 4 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை சமரவீர அவுஸ்திரேலியாவில் விஜயத்தை மேற்கொண்டார்.

2015ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல்இடம்பெற்றபின்னர் அமைச்சர் அவுஸ்திரேலியாவுக்கு மேற்கொண்ட முதல் விஜயம் இதுவாகும்.

இலங்கை அரசாங்கம் ஜனநாயகம், நல்லிணக்கம் மற்றும் பொருளாதார அபிவிருத்திகளுடன் சமாதானத்தையும் கொண்டு வர முயற்சிப்பதாக ஜூலி பிஷப்புடனான கலந்துரையாடலின் போது அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார். (இ-5)

## போரினால் காணிகளை இழந்தவர்களுக்கு காணி வழங்கப்பட வேண்டும் - வாசுதேவ

(கொழும்பு)

போர் காரணமாக காணிகளை இழந்தவர்களுக்கு காணி வழங்கப்பட வேண்டியது அவசியமானது என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய போது நேற்று முன்தினம் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,


காணிகளை இழந்தவர்களுக்கு காணி வழங்கப்பட வேண்டும்.

எனினும், போரின் போது வேறு நபர்கள் குறித்த காணியில் குடியேறியிருந்தால் அவர்களிடமிருந்து காணிகளை மீளப்பெற்றுக் கொள்வது சரியானதல்ல.

ஏனெனில், அந்தக் காணியில் தற்போது வசிப்பவர் இருக்கும் நிலைமையை கருத்திற்கொள்ள வேண்டும்.

பணம் படைத்தவர்கள், ஏழைகளை காணிகளிலிருந்து விரட்டியடிக்க முயற்சித்தால் அதனை அனுமதிக்க முடியாது எனவும் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# செல்லப்பா சுவாமிகளின் 101 ஆவது குருபூசை தினம் இன்றாகும்



உலகில் உள்ள எல்லாச் சமயங்களிலும் எல்லா நாடுகளிலும் அருளாளர்களும் ஞானிகளும் தோன்றியிருக்கிறார்கள்.

உலகில் மனிதனாகப் பிறந்தவன் அடையத்தக்க மிக உயர் நிலை ஞானநிலையே என்பதை உதாரணம் மூலம் உணர்த்துவதற்கே இப்படி ஞானிகள் தோன்றிப் பிரகாசித்திருக்கிறார்கள்.

இந்த வகையில் சமீபகாலத்தில் உலகறிய, மெய்ஞானியாக, தூய சித்தராக விளங்கியவர் யோக சுவாமிகளாவார்.

யோக சுவாமிகளின் குருவாக விளங்கியமை மட்டுமன்றி யோக சுவாமிகள் வாயிலாக இந்த உலகிற்கு தெய்வீகத்தை அருளிய ஞான சித்தராக விளங்குபவர் நல்லூர் தேரடிச்சித்தர் என்னும் செல்லப்பா சுவாமிகளாவார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் வட்டுக்கோட்டை வல்லிபுரம் என்பவருக்கும் நல்லூர் பொன்னம்மா என்பவருக்கும் பிள்ளைகளாகப் பிறந்த நால்வருள் ஒருவரே செல்லப்பா சுவாமிகளாவார். இவர் 1860ஆம் ஆண்டு பிறந்தார் என்பர்.

செல்லப்பா சுவாமிகள் இளமையிலே தெய்வீக நாட்டம் கொண்டு குடும்பப்பற்றை விட்டு தம் வீட்டுக்கு மிக அண்மையில் இருந்த நல்லூர்க்கந்த சுவாமியாரை வழிபட்டுக்கொண்டு தேரடியிலே இருந்திருக்கிறார்.

குடும்பப் பற்றையும் உலகப் பற்றை விடு. ஆன்மீக சாதனையில் ஈடுபடுவோர்- முன்னேறுவோர் வீட்டையும் ஊரையும் துறந்து காடுகளையோ புண்ணியத் தலங்களையோ அடைவதே பெரும்பான்மையான வரலாறுகள். ஆனால் செல்லப்பா சுவாமிகளோ வீட்டில், அயலில், ஊரில் உள்ள ஆலயத்தையும் தேரடியையுமே தன் சாதனைகளை மேற்கொண்டு முன்னேறி பூரணத்துவ நிலையை அடைந்திருக்கிறார். இப்படியான தன் முயற்சிக்குப் பாதுகாப்பாகவே விசரன் போல நடித்திருக்கிறார்.

உலகம் உறங்கும் போது ஞானி விழித்திருப்பான் என்ற கோட்பாட்டிற்கு அமைய நடுச்சாம வேளையில் நல்லைக்கந்தன் ஆலயம் முன்னின்று முருகனை அழைத்து வணங்கி அருள்பெற்ற தன் உறவினர் இரக்கத்துடனும் அன்புடனும் உணவு கொடுக்க முயன்றால் "உதில நஞ்சு போட்டுக்கொண்டு வந்துள்ளாய் என்று அதை ஏற்காமலோ அல்லது ஏற்று வீசி எறிந்தோ விசரன் போல நடித்திருக்கிறார். உறவு முறையான பாசத் தன்மையையே அவர் நஞ்சு என குறிப்பிட்டு வீட்டின் அயலில் இருந்தே சுற்றத் தொடர்பை துறந்த மகிமையை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

செல்லப்பா சுவாமிகள் தன் சுற்றமெனும் தொல்பசுக்குழாங்கள் பற்றியழைத்துப் பத பருகாமல் அற்புதமா விசர் செல்லப்பன் எனப் பகிரங்கமானாலும் அவனின் புனிதமும் தெய்வீகமும் வெளிப்படவே செய்தது. அதனால் இப்படியான நிலை உண்டானபோதும் சாதாரண பொது மக்கள் தன்னை நெருங்காத வண்ணம் விசர் செல்லப்பராகவே விளங்கியிருக்கிறார். யோக சுவாமிகளின் சீடர்களின் மிக்க முதன்மை உடையவர் என எல்லோராலும் அறிய பெற்றிருக்கும் செல்லத்துரை சுவாமிகள் பல சந்தர்ப்பங்களில் செல்லப்பா சுவாமிகள் நல்லூர்க் கந்தன் அருள் பெற்றவர் என்றும் அக்காலத்தில் கடையிற் சுவாமிகளை ஓரிரு முறை சந்தித்திருக்கின்றனர் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அருளாளர் இருவர் சந்தித்த சந்திப்பே செல்லப்பா சுவாமிகள் கடையிற் சுவாமிகள் வரலாற்றில் இடம்பெற்றிருக்கின்றன. இன்றும் செல்லத்துரை சுவாமிகள், கடையிற் சுவாமிகள், குழந்தைவேற் சுவாமிகள் சமாதிபோல் செல்லப்பா சுவாமிகள், யோக சுவாமிகள் சமாதி அமையாமை பற்றியும் வேறுபாட்டைச் சுட்டியிருக்கிறார்.

இவர் சீரான யோகசுவாமிகளே ஒருமுறை ''நாற்பது வருடமாக விசர் நாடகத்தை திறமையாக நடத்தியிருக்கிறார்'' என்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

பொது நிலையில் விசர்ச் செல்லப்பராக இருந்தாலும் தன்னை நம்பியவர்க்கு நோய் தீர்த்து, பிள்ளைப்பேறு அருளுதல் போன்ற அருளிப்பாடுகளையும் நிகழ்த்தி ஞானியர் பெருமைக்கு உரியவராக விளங்கியமை உலகில் உள்ள அனைத்து சமயங்களும் வற்புறுத்தும் ஞானியர் வழிபாட்டின் மகிமையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

உலகில் ஆங்காங்கு தோன்றிய ஞானியரில் பலர் தாமே அருட் செயல்களைப்புரிந்து உலகம் வளர ஈடேற்றுபவராகவும் தம் சீடர் வழியில் அருட் செயல்கள்ளைப் புரிந்து உலக மக்களை உய்விப்பவராகவும் இருந்திருக்கிறார்கள்.

செல்லப்பா சுவாமிகள், இராம கிருஷ்ணன் முதலியோர் தம் சீடர்கள் மூலம் உலக மக்களை உய்ய அருளியதை அவதானிக்க முடிகின்றது.

செல்லப்பா சுவாமிகள் அருள் பெற்ற யோக சுவாமிகள் எண்ணில்லாத அற்புதங்களை நிகழ் த்தியிருக்கிறார். அவர் நிகழ்த்திய அற்புதங்களில் சில நூல் வடிவிலும் உள்ளன. இந்த அற்புதங்களைப் படித்தறிவோர் அவரோடு பழகி நன்மையடைய இயலவில்லையே என ஏங்குவதும் இயல்பே. இப்படியான ஏக்கத்தை முற்றாகப் போக்கும் கருணையுடன் யோகர் சுவாமிகள் நற்சிந்தனை எனும் அருட்பாடல்களை வழங்கியிருக்கிறார். நற்சிந்தனை பாடல்களையும் நற்சிந்தனைப் பாடல்களில் ஆங்காங்கு யோக சுவாமிகளைக்கொண்டாடும் திருமுறைகளையும் பாராயணம் செய்து நாமெல்லாம் அருள் அனுபவங்களை அடைந்து மகிழ வாய்ப்புள்ளது.

இப்படியான மகிமைமிக்க நற்சிந்தனைப் பாடல்களில் செல்லப்பா சுவாமிகளைப் பற்றி அதிகமாகவும் தெளிவாகவும் யோக சுவாமிகள் அருளியிருக்கிறார்.

ஐயனே சற்குருநாதா- உனை
அண்டிவந்தேன் அருள் தாதா
சஞ்சலமிகவும் மிஞ்சுதே சற்குருநாதா
தமியேனை ஆள வேண்டும்

என்பன போலுள்ள பகுதிகள் நாமெல்லாம் நற்சிந்தனை மூலம் செல்லப்பா சுவாமிகளை வணங்கி அருள்பெற வேண்டும் என யோக சுவாமிகள் விரும்புவதையே காண்பிக்கின்றன.


செல்லப்பா சுவாமிகள் பெருமை தோற்றம் அவரை வணங்குவதன் பயன் முதலிய பல உயர்ந்த கருத்துக்களை நற்சிந்தனை மூலம் அறிய முடிகின்றது.

இத்துடன் யோக சுவாமிகள் பூரண ஞானியாகத் தன்னை அண்டியவரை ஆதரித்துக் காக்கும் அருளாளராக விளங்கிய நிலையில் தன் குரு செல்லப்பா சுவாமிகளை எங்ஙனம் வணங்கியுள்ளார். எங்ஙனம் நமக்கெல்லாம் அறிமுகப்படுத்தியிருக்கிறார் என் பதை அவரின் நற்சிந்தனை மூலம் அறிந்து பணிந்து நம்மை நாமே பாக்கியவான்களாக்க வேண்டும்.

பண்டிதர்
சி.பொன்னம்பலவாணர்




யாழ்ப்பாணம் அச்சகத்தார் இணையத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் கிறீன்கிராஸ் ஹோட்டலில் இடம்பெற்றது. நியூக்கிளியஸ் பவுண்டேஷன் ஆலோசகர் எஸ்.ஜே. கேதீஸ் தலைமையின் கீழ் இடம்பெற்ற இவ் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை பேரவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்.



சர்வதேச மிதிவெடி விழிப்புணர்வ தினம் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகரால யத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் கலந்து கொண்டதுடன் மேலும் அரசாங்கத்தின பல பிரமுகர்கள் பிரதிநிதிகள் மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்கள எனப் பலர் கலந்து கொண்டனர்.




தேசிய மட்டத்தில் அறநெறிப்பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டியில் யாழ்ப்பாணம் திருநெல்வேலி சிவயோகர் அறநெறிப்பாடசாலையைச்சேர்ந்த கு.சிறிசுபாங்கன் தரம்-3 இற்கான பேச்சுப்போட்டியில் முதலிடத்தைப் பெற்றார். இப்போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்ற போது...




யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் .ப. இராஜேஸ்வரனை பிரதம ஆசிரியராக கொண்ட கல்வியியலாளன் ஆய்விதழ் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி ச. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இதன்போது ஆய்விதழ் வெளியீட்டு உரையினை யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெ.இராசநாயகமும் . ஆய்விதழுக்கான மதிப்பீட்டுரையினை யாழ். பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ரி.வேல்நம்பியும்.வாழ்த்துரையினை கல்வியியல் பேராசிரியர் மா.சின்னத்தம்பியும் வழங்கினார்கள்.



தேசிய தேசோதய சபையின் சர்வதேச மகளிர் தின நிகழ்வு நாவலர் வீதியிலுள்ள தியாகி அறக் கொடை நிலைய மண்டபத்தில் அண் மையில் நடைபெற்றது. இதன்போது யாழ். மாவட்ட மகளிர் விவகார குழுக் களின் சம்மேளன செயலாளர் திரு மதி. வரதராஜன் சசிரேகா சிறந்த செயற்பாட்டு உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுகௌரவிக்கப்படுவதையும் மகளிர் குழுக்களின் நடன நிகழ்வி னையும் படங்களில் காணலாம்.



யாழ்ப்பாணம், ஆறுகால்மடம் ஞானவைரவர்திருக்கோயில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு அறிவொளி சனசமூக நிலையத்தினரால் மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளின் பரிசளிப்பு விழாவும், மாணவர்களின் கலைவிழாவும் அண்மையில் ஆறுகால்மடம் அறிவொளி கலையரங்கில், அறிவொளி சனசமூக நிலையத்தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டதுடன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாநகரசபை பொதுசன உத்தியோகத்தர் ச.லோகசிவம், யாழ்.பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் திருமதி கலையமுதா நரேந்திரன், வைத்தியகலாநிதி மயூரன், அதிபர் ந.கந்தவனச்செல்வன் ஆசிரியர் ந.சிவராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(படங்கள்:-கிசோர்)

# சூகிக்கு பிரதமருக்கு ஒப்பான பதவிக்கு பாராளுமன்றில் ஒப்புதல்



ஆங் சான் சூகிக்கு பிரதம ருக்கு ஒப்பான பதவியை வழங்கும் சட்ட மூலம் ஒன்று மியன்மார் பாராளுமன்றத்தல் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தின் கீழவையில் நிறை வேற்றப்பட்ட சட்ட மூலத்தில் புதிதாக 'அரச ஆலோசகர்' பதவி உருவாக்கப்பட்டுள்ளது. இது சட்டமாக அமுல்படுத்தப்பட ஜனாதிபதியின் கையொப்பம் மாத்திரமே தேவைப்படுகிறது.

எனினும் பாராளுமன்றத்தில் கால்பங் காக இருக்கும் மக்களால், தேர்வுசெய்யப்ப டாத இராணுவ பிரதிநிதிகள் இந்த வாக்கெடுப்பை புறக்க ணித்திருந்தனர்.

இது சட்டத்திற்கு முரணானது என்று அறிவித்துள்ளனர்.மியன்மார் பொதுத்தேர்தலில் சூகியின் கட்சி அமோக வெற்றி பெற்ற போதும் அவர் ஜனாதிபதியாவது சட்ட விதிகளின்படி தடுக்கப்பட்டது.

பாராளுமன்ற மேலவை மற்றும் கீழவையில் ஆதரவு பெற்ற இந்த சட்டமூலத்திற்கு ஜனாதிபதி ஆங்கீகாரம் அளிக்க வேண்டும். சூகியின் நெருங்கிய விசுவாசியான டின் கியவ் ஜனாதிபதியாகவுள்ளார்.

சூகி ஏற்கனவே வெளியு றவு மற்றும் ஜனாதிபதி அலு வலக அமைச்சராக இருக்கும் நிலையில் மேலதிகமா கவே அவருக்கு இந்த பதவி வழங்கப்படவுள்ளது.

எனினும் நாட்டின் முக்கிய அதி காரங்களை இரா ணுவம் தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டுள்ளது. பாராளுமன்றத்தில் பிரதி நிதித் துவத்தை பெற்றிருக்கும் இராணுவம் மூன்று முக்கிய அமைச்சுகளை தன்னகத்தே கொண்டுள்ளது. (இ-5)

# ஆதனவரிப் பெயர் மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் -21 அராலி வீதியில் ஆதன இலக்கம் 48 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் **"சொந்தக்காரர்"** என ஆதன வரிப்பதி வேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த இலக்கத்தில் உள்ள ஆதனத்தின் மொத்தப் பரப்பளவு நெ.பர.03 குளி 7.34 ஆகும்.

இதில் நெற்பரப்பு 1 3/4 இற்கு புத்தளம் கொழும்பு வீதி, ஜில்லையடி, இல. 03 MCS பில்டிங்கில் வதியும் மரைக்கார் செயனுள் ஆப்தீன் கைம்பெண் சாஹிபாபேகம் (ரசித் மகள் சாஹிபாபேகம்) முன்னைய முகவரி இல. 43, 5 ஆம் குறுக்குத்தெரு, பொம்மைவெளி, அராலி வீதி, யாழ்ப்பாணம் என்பவர் தனது கணவர் மரைக்கார் செய்னுள் என்பவரால் பிரசித்த நொத்தாரிசு M.M. மன்சூர் முகதாவில் 1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அராலி வீதியில் குறித்த காணியை கொள்வனவு செய்ததாகவும் 1990 களில் முஸ்லிம் மக்கள் இடம்பெயர்ந்த பொழுது தாமும் இடம்பெயர்ந்து புத்தளம் சென்றதாகவும் அங்கு (புத்தளத்தில்) உடைமைகளை இழந்ததுடன் 1994 இல் தனது கணவர் மரைக்கார் செய்னுான் ஆப்தீன் இறந்து விட்டதாகவும் தன்னால் குறித்த பிரசித்த நொத்தாரிசு M.M. மன்சூர் அவர்களை சந்திக்க முடியவில்லை எனவும் பின்னர் குறித்த நொத்தாரிசு காலமாகி விட்டதாக அறிந்தேன் என்றும் காணி பதிவகத்தில் பூரணதேடுதல் செய்தும் குறித்த அறுதி சாதனத்தை கண்டுபிடிக்க முடியாத நிலையில் பிரசித்த நொத்தாரிசு யோ. சத்திய நாதன் முகதாவில் உறுதி இல. 538, 2003.07.11 ஆம் திகதிய உறுதி மூலம் இவ்வெளிப்படுத்தல் சாதனம் நிறைவேற்றி உள்ளேன் என வெளிப்படுத்தியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை மரைக்கார் செய்னுள் ஆப்தீன் கைம்பெண் சாஹிபா பேகமும், மரைக்கார் செய்னுள் ஆப்தீன் மகள் சலிசா பேகமும் பிரசித்த நொத்தாரிசு யோ. சத்தியநாதன் முகதாவில் உறுதி இல. 539/11.07.2003 மூலம் யாழ்ப்பாணம் ஓட்டுமடம் பொம்மைவெளி அராலி வீதியில் வதியும் கனகராசா பகீரதனுக்கு அறுதியாக வழங்கப்பட்டு குறித்த கனகராசா பகீரதன் பெண் சுரேந்தினி என்பவர்களால் இணுவில், இணுவில் மேற்கு, கந்தசாமி கோயிலடியைச் சேர்ந்த நடராசா ஸ்ரீகரனுக்கு அறுதியாக வழங்கப்பட்டு பிரசித்த நொத்தாரிசு சாந்தகுமாரி சிவபாதம் முகதாவில் நிறைவேற்றிய அறுதி உறுதிமூலம் இணுவில் மேற்கு கந்தசாமி கோயிலடியைச் சேர்ந்த நடராசா ஸ்ரீகரனுக்கு ஓட்டுமடம் , பொம்மைவெளி அராலி வீதியைச் சேர்ந்த கனகராசா பகீரதனும் பெண் சுரேந்தினி ஆகியோரால் நாகலிங்கம் சுந்தரேஸ்வரனுக்கு அறுதியாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பிரசித்த நொத்தாரிசு சிவபாதம் முகதாவில் நிறைவேற்றிய அறுதி உறுதி இல. 2297/16.07.2005 மூலம் யாழ்ப்பாணம், கொட்டடி, இல. 130, முத்தமிழ் வீதியைச் சேர்ந்த நாகலிங்கம் சுந்தரேஸ்வரனும் பெண் துரைச்செல்வி ஆகியோர் சிவலிங்கபுளியடி 101/01, ஓட்டுமடம் வீதியைச் சேர்ந்த பழனிவேல் சத்தியசீலனும் பெண் மைதிலிக்கு வழங்கப்பட்டு அவர்கள் பிரசித்த நொத்தாரிசு S. சிவபாதம் முகதாவில் நிறைவேற்றிய அறுதி உறுதி இல. 2572/11.02.2006 மூலம் ஊர்காவற்றுறை, தம்பாட்டி, நாரந்தனை வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி இலட்சுமணனுக்கு அறுதியாக வந்தடைந்துள்ளது.

ஆதன விபரம்:- வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார் பண்ணை தென்மேற்கு இறை "இரசாலிக்குளம் கரைவயல் பொம்மை வயல்" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் S. சுப்பிரமணியம் அவர்களின் வரைபட இல. 2837A/2015.10.21 இல் துண்டு 1 எனக்காட்டப்பட்ட நெற்.பர. 3 குளி 7.354 ஆகும்.

இதற்கு எல்லை

கிழக்கு:- 12 அடி ஒழுங்கை

வடக்கு:- 10 அடி ஒழுங்கை

மேற்கு:- நடேசு மேனகாவும் மற்றையவர்களும்

தெற்கு:- றோட்டு

தற்போது இவ் ஆதனம் சின்னத்தம்பி இலட்சுமணன் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார்.

எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது சின்னத்தம்பி இலட்சுமண்ன் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதன பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர்**

**மாநகர சபை.** (சி-4244)

# ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-09 நடுத்தெரு ஒழுங்கை ஆதன இலக்கம் 12 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் "தம்பு" கனகரட்ணம் பெண் சின்னம்மா என ஆதனவரிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை 219, கண்டிவீதி,அரியாலை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கனகரட்ணம் நடராஜா,தற்போது 62,Donnington Road, Worcester Park, London, KT48EN,UK இல் வசிப்பவரான கனகரட்ணம் செல்லத்துரை ஆகியோரால் தமது தத்துவ உரித்தாளரான இல 400/2, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கனகரட்ணம் இராஜேந்திரன் மூலமாக குறித்த ஆதனம் தமது தாயார் கனகரட்ணம் சின்னம்மாவிற்கு சீதனமாக வழங்கப்பட்டதென்றும் அவர் 1984 இல் காலமாகியதால் தமக்கு (மூன்றுபேருக்கும்) வந்து விட்டதென பிரசித்த நொத்தாரிஸ் தியாகலிங்கம் கணதீபன் முகதாவில் நிறைவேறிய உறுதி இலக்கம் 146/2015.05.25 மூலம் வெளிப்படுத்தி இதே நொத்தாரிஸ் முகதாவில் நிறைவேறிய நன்கொடை உறுதி இல 589/25.05.2015 மூலம் இல. 219, கண்டி வீதி,அரியாலை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கனகரட்ணம் நடராஜா குறித்த ஆதனத்தில் 1/3 பங்கையும் இதே நொத்தாரிஸ் முகதாவில் நிறைவேறிய நன்கொடை உறுதி இல 601/24.06.2015 மூலம் இல.62,Donnington Road, Worcester Park, London, KT48EN,UK ஐச் சேர்ந்த கனகரட்ணம் செல்லத்துரை தனது 1/3 பங்கையும் கனகரட்ணம் இராஜேந்திரனுக்கு நன்கொடையாக வழங்கி முழுவதும் கனகரட்ணம் இராஜேந்திரனுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

ஆதன விபரம்: வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி அரியாலை இறை சுண்டிக்குளி "பேருவெளிக்கு வடக்கிற் பெரிய புலம்" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் V.T பாலசுப்பிரமணியம் அவர்களது வரைபட இலக்கம் 5698/14.05.2013 ஆம் திகதிய வரைபடத்தின் படி நில.பர.04குளி09.9 இதற்கு எல்லை.

கிழக்கு:-காசிப்பிள்ளை பெண் நவமணியினதும் பொன்னுத்துரை கைம்பெண் செல்லம்மா

வடக்கு:- இராசையா மகள் பிரேமினி,

மேற்கு:-நடுத்தெரு ஒழுங்கை

தெற்கு:- புஸ்பராசா மகள் ரதியினதும்,அழகக்கோன் மகள் ருக்மணியினதும் ஆதனம்.

தற்போது இவ்வாதனத்தை கனகரட்ணம் இராஜேந்திரன் என்பவரால் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணபிக்கப்பட்டுள்ளது.எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்.யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உரிய ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கனகரட்ணம் இராஜேந்திரன் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆணையாளர்

மாநகரசபை. (சி-4245)

# யாழ்ப்பாணம் மாநகர சபை ஆதனவரி அறிவித்தல்-2016 தண்ட அறவீட்டிலிருந்து தவிர்த்துக்கொள்ளல்

2016 ஆம் ஆண்டு இரண்டாம் கந்தாயத்திற்கான ஆதன வரியினை 2016.06.30 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முன்னராக எவ்வித தண்டமுமின்றி இவ் அலுவலகத்தில் செலுத்தலாம் எனவும் குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் செலுத்தப்படும் வரிப்பணங்களுக்கு மேலதிகமாகக் கீழ் குறிப்பிடப்படும் விபரப்படி விறாந்துச் செலவு அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன். வெற்றுக் காணிகள் மற்றும் குடியிருப்பு காணிகள்-15%

ஏனைய காணிகள் -20% காலாண்டுக்குரிய ஆதன வரியை அக்காலாண்டின் முதல் மாதத்தின் 31 ஆம் திகதிக்குள் செலுத்தி 5% வரிக் கழிவினை பெற்றுக் கொள்ள முடியும். நிலுவை உட்பட 2016 ஆம் ஆண்டுக்கான வரியினைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நிலுவை தொகையினைச் செலுத்தாத பட்சத்தில் மாநகர சபைக் கட்டளை சட்டம் அத்தியாயம் 252 பிரிவு 252 (1) இன் படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

நேரடியாக செலுத்துபவர் அலுவலகத்திற்கு சமுகமளித்து பணத்தினை செலுத்தலாம் எனவும் காசோலையாகவோ, காசுக்கட்டளையாகவோ செலுத்துவோர் "மாநகர சபை ஆணையாளர் யாழ்ப்பாணம்" என அனுப்பி செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**

**மாநகரசபை அலுவலகம்**

**யாழ்ப்பாணம்** (சி-4243)

# எனது ஆட்சிக்காலம் முடிவதற்குள் ஐ.எஸ்.தீவிரவாதிகளை அழிப்பேன்

## அமெ.ஜனாதிபதி ஒபாமா சபதம்



(வோஷிங்டன்)

**தனது ஆட்சிக்காலம் முடிவடைவதற்குள் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பை அழித்தே தீருவேன் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

சிரியாவில் ஜனாதிபதி ஆசாத்துக்கு ஆதரவாக தங்களை உளவு பார்த்தவர்களை ஐ.எஸ்.அமைப்பினர் கொன்று சிலுவையில் அறைந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஐ.எஸ்.அமைப்பினர் சமீப காலமாக மிகப்பெரிய தோல்வியை சந்தித்து வருகின்றனர். இதையடுத்து தங்கள் அமைப்பு தொடர்பாக உளவு பார்ப்பவர்களை கொடூரமாக கொன்று வருகின்றனர்.

இந்நிலையில் சிரிய ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்துக்கு ஆதரவாக தங்களது அமைப்பை உளவு பார்த்த 4 பேரை ஐ.எஸ். அமைப்பினர் சுட்டுக்கொன்றனர்.பின்னர் அவரது உடல்களை சிலுவையில் அறைந்து பொதுமக்கள் பார்வைக்காக தலைநகர் ரக்காவில் தொங்கவிட்டுள்ளனர்.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 12க்கும் மேற்பட்ட சிரிய குடிமக்களை ஐ.எஸ். தீவிரவாதிகள் கொன்றுள்ளதாக மனித உரிமைகள் பார்வையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் தனது ஆட்சிக்காலம் முடிவதற்குள் ஐ.எஸ். அமைப்பை அழித்தே தீருவேன் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் மூத்த ராணுவ தலைவர்களுடன் ஆலோசனை நடத்திய ஒபாமா, ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் உள்ள பகுதிகள், அவர்களது பொருளாதார பலம் மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவையை கைப்பற்றி ஐ.எஸ். தீவிரவாதிகளை வீழ்த்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

அப்போது ரக்கா சம்பவம் தொடர்பாக குறிப்பிட்ட ஒபாமா, இது போன்ற செயல்களை நாம் பொறுத்துக் கொள்ளக்கூடாது.

எனது ஆட்சி முடிவதற்குள் ஐ.எஸ். தீவிரவாதிகளை அழிக்க வேண்டும் என்பதை முதல் கடமையாக கொண்டுள்ளேன் என்றும் தெரிவித்தார். (இ-5)

## பாகிஸ்தானில் 2015ம் ஆண்டில் 326 பேருக்கு மரண தண்டனை

### சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கையால் பரபரப்பு

உலகமெங்கும் மரண தண்டனை நிறைவேற்றுவதற்கு எதிரான குரல் வலுத்து வருகிறது. மரண தண்டனையை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று மனித உரிமை அமைப்புகளும் வலியுறுத்தி வருகின்றன.

இந்த நிலையில் பாகிஸ்தானில் 2015-ம் ஆண்டில் மட்டும் 326 பேர் தூக்கில் போடப்பட்டுள்ளனர் என்ற தகவல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. பாகிஸ்தானில் இத்தனை பேர் ஒரே ஆண்டில் தூக்கில் போடப்பட்டிருப்பது இதுவே முதல்முறை என ஆம்னஸ்டி இன்டர்நஷனல் என்னும் சர்வதேச மன்னிப்பு சபை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு உலகமெங்கும் 1.634 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. இது 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 54 சதவீத உயர்வு ஆகும். இதில் குறிப்பிடத்தக்க இன்னொரு அம்சம், சீனாவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டவர்கள் இந்த புள்ளிவிபரத்தில் சேர்க்கப்படவில்லை. சீனாவில் அதை அரசாங்க ரகசியமாக பாதுகாக்கின்றனர். ஈரானில் 2015-ம் ஆண்டு 977 பேருக்கும், சவுதி அரேபியாவில் 158 பேருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

உலக அளவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதில் பாகிஸ்தான், ஈரான், சவுதி அரேபியா ஆகிய 3 நாடுகளும் கிட்டத்தட்ட 90 சதவீதம் பங்களிப்பு செய்துள்ளன.

குற்றம் செய்தபோது 18 வயதுக்குள்ளே இருந்தவர்கள்கூட, ஈரானிலும், பாகிஸ்தானிலும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டவர்களின் பட்டியலில் உள்ளதாக ஆம்னஸ்டி இன்டர்நஷனல் மேலும் தெரிவித்துள்ளது. (இ-5)

## வியட்நாமின் புதிய பிரதமராக நிகுயென் சூவான் புக் தேர்வு



(ஹனோய்)

வியட்நாம் நாட்டில் கம்யூனிஸ்டு கட்சியின் பொதுச் செயலாளர், ஜனாதிபதி பிரதமர் ஆகிய மூவருக்கும்தான் முக்கிய அதிகாரம் உள்ளது.

19 உறுப்பினர்களை கொண்ட அரசியல் விவகாரக் குழு முடிவுகளை எடுக்கிறது.

அங்கு கடந்த வாரம் ஜனாதிபதி பதவிக்கு தேர்தல் நடந்தது. அதில் வேட்பாளராக கம்யூனிஸ்டு கட்சியால் முன்னிறுத்தப்பட்ட அந்த நாட்டின் சர்ச்சைக்குரிய பொலிஸ் தலைவர் டிரான் டாய் குவாங் (வயது 59) வெற்றி பெற்று ஜனாதிபதியானார்.

இதனிடையே, பத்தாண்டு காலம் பதவியில் இருந்த, முன்னாள் பிரதமர் நிவென் டன் ஜுங் நேற்று பதவி விலகினார்.

அதனால் புதிய பிரதமரை தேர்வு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்நிலையில், துணைப் பிரதமராக இருந்த நிகுயென் சூவான் புக் நேற்று புதிய பிரதமராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

வியட்நாம் பாராளுமன்றம் புதிய பிரதமர் தேர்வுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

சூவானுக்கு மொத்தம் உள்ள 490 பாராளுமன்ற உறுப்பினர்களில் 446 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

பின்னர் உடனடியாக அவர் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

அப்போது, புதிய பிரதமராக தேர்வு செய்யப்பட்ட சூவான் புக் கூறுகையில்.

என்னால் முடிந்த அளவிற்கு நாட்டிற்கும், மக்களுக்கும் சேவை செய்வேன்" என்று தெரிவித்தார்.

உள்நாட்டில் பொருளாதார சீர்திருத்தங்கள், ஊழல் போன்ற சவால்களைப் புதிய பிரதமர் நிகு யென் சூவான் புக் எதிர்கொள்ள உள்ளதாக கூறப்படுகிறது. (இ-5)

## வீதி விபத்துக்களில் சிக்கி பாகிஸ்தானில் 23பேர் பலி




பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணம், மியான்வாலி மாவட்டத்தின் ஹர்லோனி முர் பகுதி வழியாக வேகமாக சென்ற ஒரு பேருந்து எதிரே வந்த லொறியின்மீது மோதிய விபத்தில் 18 பேர் பலியாகினர், 30 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் சிலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இதேபோல், பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பில் உள்ள நீலம் சமவெளி பகுதியில் உள்ள பலாக்கா பாலத்தின் வழியாக சென்று கொண்டிருந்த ஒருகார், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து நீலம் ஆற்றுக்குள் பாய்ந்த விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்தனர். இந்த விபத்துச்சம்பவங்கள் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சரத் பொன்சேகாவின் கோரிக்கை நிராகரிப்பு

அதி சொகுசு வாகனமொன்றை கொள்வனவு செய்வது குறித்து முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா முன்வைத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ஒருவருக்கு வாகனமொன்றை கொள்வனவு செய்ய 350 இலட்ச ரூபா ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

எனினும், பி.எம்.டபிள்யு. செவன் சீரிஸ் ரக வாகனமொன்றை கொள்வனவு செய்ய இந்த நிதி மோதுமானதல்ல என நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இந்த ரக வாகனமொன்றை கொள்வனவு செய்ய 700 இலட்சம் தேவைப்படுவதாகவும் புதிய பென்ஸ ரக வாகனமொன்றையேனும் கொளவனவு செய்ய 400 இலட்சம் ரூபா தேவைப்படுவதாக அவர் தெரிவித்தார்.

எனவே, வாகனம் கொள்வனவு செய்ய 350 இலட்சம் ரூபா போதுமானதல்ல எனவும் குறைந்தபட்சம் 400 இலட்சம் ரூபா தேவை எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும், இந்தக் கோரிக்கையை நிராகரித்துள்ள ஜனாதிபதி, இந்த கோரிக்கை குறித்து பின்னர் பரிசீலனை செய்யலாம் எனவும் கூறியுள்ளார். (இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 07.04.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.61 | 146.41 |
| பவுண்ட் | பிரிட்டன் | 200.63 | 207.81 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 161.57 | 168.03 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 148.19 | 154.37 |
| டொலர் | கனடா | 108.34 | 112.88 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 107.46 | 112.52 |
| டொலர் | சிங்கப்பூர் | 105.36 | 109.40 |
| ரூபா | இந்தியா | 2.1623 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6774 |
| குவைத் | டினார் | 476.8848 |
| ஓமான் | ரியால் | 373.7614 |
| கட்டார் | ரியால் | 39.5151 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3708 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1767 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 50 | 35 | 70 | 40 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 50 | 80 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 50 | 130 | 120 | 160 | 100 |
| தக்காளி | 60 | 80 | 60 | 40 | 50 | 80 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 35 | 40 | 50 | 80 | 40 |
| கோவா | 60 | 50 | 60 | 80 | 60 | 80 | 50 |
| கரட் | 100 | 50 | 80 | 80 | 100 | 140 | 100 |
| பூசணி | 40 | 30 | 15 | 40 | 30 | 40 | 50 |
| புடோல் | 50 | 30 | 25 | 50 | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 35 | 50 | 40 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 70 | 80 | 80 | 100 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 75 | 80 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 100 | 120 | 100 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 50 | 80 | 60 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | 50 | 80 | 70 | 120 | 100 |
| பயற்றங்காய் | 80 | 100 | 30 | 80 | 40 | 60 | 60 |
| லீக்ஸ் | 130 | 100 | 100 | 120 | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 60 | 100 | 40 | 80 | 80 | 100 | 70 |
| கறிமிளகாய் | 120 | 100 | 100 | 100 | 80 | 120 | 80 |
| முருங்கைக்காய் | 500 | 500 | 350 | 400 | 400 | 500 | 700 |
| போஞ்சி | 100 | 200 | 100 | 120 | 100 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | 30 | — | 40 | — | 60 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 40 | 20 | 40 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 220 | 200 | 200 | 240 | 240 | 300 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 30-45 | 50 | 40 | 30-40 | 40 |
| இராசவள்ளி | 140 | 200 | 110 | 140 | 140 | 120 | 160 |
| வெங்காயப்பூ | 200 | 200 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 60 | 40 | 20 | 40 | 40 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 30 | 40 | 30 | 25 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | — | 50 | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் சுட்டுக்கொலை 150

13.07.1987 அன்று இரவு 7.30 மணிக்கு 3 பேர் அங்கு வந்தனர். அவர்கள் வருவதற்கு முன்பே முக்கியமான விடயங்களைப்பற்றி பேசுவதற்காக விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் வருவார்கள் என்று பொலிஸாரிடம் யோகேஸ்வரன் சொல்லி வைத்திருந்தார்.

இருந்தபோதிலும் அவர்கள் துப்பாக்கிகளை வைத்திருந்ததால் பொலிஸார் உள்ளே அனுமதிக்க மறுத்தனர். சந்தேகம் கொண்டு அடையாள அட்டை காண்பிக்கும்படி கேட்டனர். அப்போது பால்கனிக்கு வந்த யோகேஸ்வரன் அவர்களை உள்ளே அனுப்பும்படி கூறினார்.

3 பேரில் விசு, அலோசிஸ் ஆகிய இருவரும் உள்ளே சென்றனர். விக்னன் வெளியிலேயே நின்று விட்டார்.

### துப்பாக்கிச் சத்தம்

சிறிது நேரத்தில் மேலே துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டது. அமிர்தலிங்கத்தையும் யோகேஸ்வரனையும் சிவசிதம்பரத்தையும் சுட்டுவிட்டு விசு, அலோசியஸ் இருவரும் வெளியே ஓடி வந்தனர்.

அவர்களை மாடிப்படியில் நின்று கொண்டிருந்த பொலிஸ் துப்பாக்கியால் சுட்டார். அதில் 2 பேரும் இறந்தனர்.

இதற்கிடையே கீழே நின்று கொண்டிருந்த விக்னன் தப்பியோட முயன்றார். ஆனால் வெளிவாசல் கதவு பூட்டப்பட்டு விட்டதால் அவரால் தப்ப முடியவில்லை.

அவர் தப்பிக்க முயற்சி செய்ததைப் பார்த்ததும் அவரையும் பொலிஸார் சுட்டனர். இதில் அவர் பலத்த காயம் அடைந்தார். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கு மரணம் அடைந்தார்.

### விடுதலைப்புலிகள்

சுட்டுக் கொல்லப்பட்ட மூவரும் விடுதலைப்புலிகள். பிரேமதாசாவுடன் பாலசிங்கம் தலைமையில் பேச்சு நடத்திய விடுதலைப்புலிகள் குழுவில் இடம்பெற்றிருந்தவர்கள். சில நாட்களுக்கு முன் காட்டுப் பகுதியில் இருந்து கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள்.

இவர்கள் இதற்கு முன் 3 முறை அங்கு வந்து அமிர்தலிங்கத்துடன் பேச்சு நடத்தி இருக்கிறார்கள்.

### தலையில் 3 குண்டுகள்

அமிர்தலிங்கத்தின் தலையில் 3 குண்டுகள் துளைத்து இருந்தன. யோகேஸ்வரனின் நெஞ்சிலும் வயிற்றிலும் 11 குண்டுகள் பாய்ந்திருந்தன. அவர்கள் இருவரும் அதே இடத்தில் மரணமடைந்தனர்.

தோளில் குண்டு பாய்ந்த சிவ.சிதம்பரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. அவர் உயிருக்கு ஆபத்து இல்லை என்று டாக்டர்கள் தெரிவித்தனர்.

### யோகி பேட்டி

இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக கொழும்பில் தங்கியிருந்த விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் யோகியிடம் அமிர்தலிங்கம் கொலை பற்றி நிருபர்கள் கேட்டபோது அதுபற்றி கருத்துக் கூற மறுத்துவிட்டார்.

கருத்துக் கூறுவதற்கு முன்பு எனக்கு மேலும் விபரங்கள் தேவைப்படுகின்றன என்று யோகி கூறினார்.

இந்தக் கொலை பற்றி இலங்கைப் பத்திரிகைகள் செய்தி வெளியிட இலங்கை அரசு அனுமதி அளித்தது.

ஆனால், இலங்கை வானொலியிலும், தொலைக்காட்சிகளிலும் அமிர்தலிங்கமும் யோகேஸ்வரனும் துக்ககர மான சம்பவத்தில் இறந்தனர் என்று மட்டுமே செய்திகளை வெளிப்படுத்தினர்.

### தாழ் மாநில அரசு துயரம்

அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டதற்கு வரதராஜ பெருமாள் தலைமையில் இருந்த இலங்கைத் தமிழ் மாநில மந்திரி சபைக் கண்டனமும் துயரமும் தெரிவித்தது.

3 நாட்கள் துக்கம் கடைப்பிடிக்கவும் முடிவு செய்தது. கறுப்புப்பட்டை அணியும்படி பொதுமக்களுக்கு வரதராஜபெருமாள் வேண்டுகோள் விடுத்தார்.


### அஞ்சலி

அமிர்தலிங்கம் உடலை தங்களிடம் ஒப்படைக்கும்படி அமிர்தலிங்கத்தின் மனைவி மங்கையற்கரசிக்கு வரதராஜ பெருமாள் வேண்டுகோள் விடுத்தார்.

அமிர்தலிங்கத்தின் உடலை கொழும்பிலிருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணம் கொண்டு வந்து யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக வைப்போம். பிறகு அரச மரியாதையுடன் தகனம் செய்வோம் என்று வரதராஜபெருமாள் கூறினார்.

### யாழ்ப்பாணத்தில் தகனம்

அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரின் உடல்கள் 15.07.1989 அன்று விமானம் மூலம் மட்டக்களப்புக்கு கொண்டு செல்லப்பட்டன.



அமிர்தலிங்கத்தின் மனைவி மங்கையற்கரசி, அமிர்தலிங்கம், யோகேஸ்வரன்

(தொடரும்)

# 65,000 வீட்டுத்திட்டம் இறுதி முடிவு இல்லை

## அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கில் 65 ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டத்தை எந்த நிறுவனத்திடம் கையளிப்பது என்பது தொடர்பாக அரசாங்கம் இன்னமும் இறுதி முடிவை எடுக்கவில்லை என்று மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.



இந்த விவகாரம் குறித்து அடுத்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, இந்த திட்டத்தை நிறைவேற்றும் கட்டளையை வழங்குவது தொடர்பாக, ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான குழுவொன்ற மீளாய்வு செய்யும் என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னதாக, இந்த திட்டதை நிறைவேற்றும் பொறுப்பு இந்திய வம்சாவளி தொழிலதிபரான, லக்ஸ்மி மிட்டலின், அனைத்துலக நிறுவனமான ஆர்சிலர் மிட்டர் நிறுவனத்துக்கு அளிக்கப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மகிந்தவின் பாதுகாப்புக்கு 206 ராணுவம், பொலிஸ்

## சபை முதல்வர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு குறைக்கப்படவில்லை என சபை முதல்வர் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அவரின் உயிரை பாதுகாக்கும் தேவை எமக்கும் இருக்கிறது என்று தெரிவித்த அமைச்சர், அவரின் பாதுகாப்புக்கு 103 இராணுவத்தினரும், 103 பொலிஸாரும் வழங்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக் குறைக்கப்பட்டமை தொடர்பில் 23/2 நிலையியற் கட்டளையின் கீழ் தினேஷ் குணவர்த்தன கேள்வியெழுப்பியிருந்தார். இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே சபைமுதல்வர் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், மகிந்த ராஜபக்ஷ எமது நாட்டின் தலைவராக இருந்தவர். அவருக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புப் படையினரின் தொகை குறைக்கப்பட வில்லை. மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பை குறைத்திருப்பதாக மாற்று எதிர்க்கட்சியே கூறி வருகிறது. அவரின் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருப்பது இவர்களே.

சரத் பொன்சேகா பயங்கரவாதத்தை ஒழிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறி 2010 ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து ஐந்தாவது நிமிடமே அவருடைய சகல பாதுகாப்பும் நிறுத்தப்பட்டது. ஆனால் எமது அரசாங்கம் அவ்வாறு எதுவும் செய்யவில்லை. சரத் பொன்சேகாவை இலக்கு வைப்பதற்காகவே அன்று அவரின் பாது காப்பு நீக்கப்பட்டது.

இதேபோன்று வடமத்திய மாகாணசபைத் தேர்தலின் போது முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட்ட மேஜர் ஜெனரல் ஜனக பெரேராவின் பாதுகாப்பை கடந்த அரசாங்கம் நீக்கி அவரை பயங்கரவாதிகளின் இலக்காக்கியது. மறுநாளே அவர் கொலை செய்யப்பட்டார்.

முன்னாள் ஜனாதி பதியின் பாதுகாப்பைக் குறைக்க எந்த உத்தரவும் வழங்கப்படவில்லை. எனக்கு கிடைத்த தகவலையே இங்கு அறிவித்துள்ளேன். எமக்கும் மகிந்த ராஜபக்ஷவை பாதுகாக்கும் தேவை இருக்கிறது. எம்மிடம் மறைவான நிகழ்ச்சிநிரல் எதுவும் கிடையாது என்றும் அவர் தெரிவித்தார். (இ-5)

# பாதாள குழுக்களைச் சேர்ந்த 36 பேர் கைது

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளிலும் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் குற்றவியல் சம்பவங்களுடன் தொடர்புபட்ட முக்கிய குழுக்களைச் சேர்ந்த 36 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதேவேளை, மேல் மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் பூஜித்த ஜயசுந்தரவின் நேரடி கண்காணிப்பின் கீழ் மேற் கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது இக் குழுக்களால் பயன்படுத்த ப்பட்ட பல ஆயுதங்கள் கைப் பற்றப்பட்டுள்ளன. 32 தோட்டாக்களுடன் 2 மெகஸின்கள் ,4 ரி 56 ரக துப்பாக்கிகள், 4 கைத்துப்பாக்கிகள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வருடம் பெப்ரவரி மாதம் பாதாள குழுக்களின் தலைவர்களிடையே இடம் பெற்ற கொலைகளையடுத்து அது குறித்து விசேட சோதனைகளை நடத்துமாறு சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பூஜித்த ஜயசுந்தர நியமிக்கப்பட்டது முதல் கடந்த ஒரு மாதகாலமாக இந்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களில் நால்வர் மேலதிக விசாரணைகளுக்காக தொடர்ந்தும் பொலிஸாரினால் விசாரணைக்குட்படுத்தி வரும் அதே நேரம் ஏனையோர் விளக்கமறியல் அல்லது சிறைவாசம் அனுபவித்து வருவதாகவும் பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களில் எண்மர் களனி பிரதேச பொலிஸ் அமுலாக்கல் பிரிவினாலும் மேலும் எண்மர் பாணந்துறை பிரதேச பொலிஸ் அமுலாக்கல் பிரிவினாலும் நால்வர் நுகேகொடை பிரதேச குற்றவியல் தடுப்பு பிரிவினாலும் ஐந்துக்கு மேற்பட்டோர் நீர்கொழும்பு பிரதேச பொலிஸ் அமுலாக்கல் பிரிவினாலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றவாளிகளைக் கைது செய்வதற்காக அறிமுகம் செய்யப்பட்ட விசேட வீதித் தடைகள் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் எனக்கூறிய ஜயசுந்தர, இந்த வீதித் தடைகள் ஒரு வலையமைப்பாக முன்னெடுக்கப்படுமெனவும் கூறினார்.

பொலிஸாரின் தகவல்களுக்கமைய தற்போது நாட்டில் 15 பிரதான குழுக்கள் குற்றவியல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. இவற்றில் அநேகமானவை மேல் மற்றும் தென் மாகாணங்களிலேயே கூடுதலான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளன.

பாதாள குழுத் தலைவர்களுக் கிடையிலான மோதல்களின் பிரதிபலிப்பாகவே தென் அபிவிருத்தி அதிகார சபையின் முனனாள் தலைவரின் கொலையின் பிரதான சந்தேக நபரான தனுஷ்க ஹர்ஷவின் கொலை மற்றும் பாரத லக்ஷ்மனின் பிரதான கொலை சூத்திரதாரியான தெமட்ட கொட சமிந்தவை துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இன்று ஒரு தகவல்

### வெட்கத்தை விட்டொழிப்பது எப்படி?

வெட்கப்படுபவர்கள் பெண்கள் மட்டுமல்லர் ஆண்களும் வெட்கப்படுகிறார்கள். பெண்களுக்கு இது அவசியம் தான். ஆனால் அதற்கும் ஓர் எல்லை வேண்டும். ஆண்களுக்கு அறவே கூடாது என்பேன்.

வெட்கம் ஏன் ஏற்படுகிறது?

நம்மைப் பற்றி நமக்கே ஓர் நல்ல எண்ணம் இல்லாமை அல்லது தாழ்வு மனப்பான்மை எல்லோரும் நம் நடவடிக்கைகளையே கவனித்துக் கொண்டிருப்பதோடு குறைவேறு சொல்லுவார்கள் என்று நாமாகவே கற்பனை செய்து கொள்ளுதல்,ஏதோ அவர்கள் மிகப் பெரியவர்கள் போலவும் அவர்கள் முன் நாம் மிகச் சாதாரணமானவர்கள் போலவும் அவர்களிடத்தில் நல்ல அபிப்பிராயத்தை உண்டாக்க முடியாது என்பது போலும் ஏற்படக் கூடிய ஒருவித அவ நம்பிக்கை -இப்படிப் பல காரணங்கள். வெட்கப்படும் ஒவ்வொருவரும் தங்களது சுபாவத்திற்கான காரணத்தை உணர வேண்டும். அதைப் பற்றி அவர்களுக்கு ஒரு தெளிவான சிந்தனையும் தீர்க்கமான முடிவும் இருக்க வேண்டும்.

பொதுவாக நீங்கள் மனிதவர்க்கத்தினரையே கண்டு பயன்படுகிறீர்களா? அல்லது முன் பின் தெரியாதவர்களை மட்டும் கண்டு பயப்படுகிறீர்களா?

பயப்படுதல் என்ற சொல் ஒருவேளை இந்த இடத்தில் பொருந்தாவிட்டால் வெறுத் தல் என்ற சொல் பொருந்துமா என்று பார்த் துக் கொள்ளுங்கள்.

இத்தகைய ஒரு குறைபாடு உங்களை எந்த அளவுக்கு ஆக்கிரமித்திருக்கிறது? அளவுடனா? அல்லது அளவுக்கு மீறியா? என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நம்மிடமுள்ள பல குறைபாடுகள், அவற்றின் பின்னணி அவற்றின் அடிப்படைக் காரணங்கள் ஆகியவற்றை எண்ணிப் பார்ப்ப தன் மூலமே போக்கிக் கொண்டு விட முடி யும். அதைவிட்டு விட்டு கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றுவது அல்லது எனக்கு இப்படி ஒரு சுபாவம் உண்டு என்று பலரிடம் பறை சாற் றிக் கொண்டிருப்பது ஆகிய செயல்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

இல்லாவிடில் நம் குறைகளை நாமே மிகைப் படுத்திக் கொள்பவர்களாவோம். எவரையேனும் சந்திக்க வேண்டியிருந்தாலோ அந்த நிகழ்ச்சியைப் பற்றி அந்தச் சந்திப்பை பற்றி அதிகம் எண்ணாமல் இருக்க வேண்டும். எண்ண எண்ண அந்த உணர்வுகள் உங்களை மிகவும் வருத்தும் பிரச்சினை பூதாகாரமாகத் தெரியும் கற்பனை கட்டுப் பாடின்றிப் பெருகும்.

நீங்கள் சந்தித்துப் பேசப் போகிறவர்கள் ஏதோ தேவலோகத்தில் இருந்து இறங்கியவர்கள் என்றோ தனியே ஏதோ கொம்பு முளைத்திருப்பவர்கள் என்றோ நீங்களாகவே கற்பனை செய்து கொள்ளாமல் நம்மைப் போலவே ஒரு மனிதப் பிறவி என்பதான எண்ணத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

எல்லேபருடைய கவனமும் நம்மீது இருப்பது போலவும் நம்மிடம் அவர்கள் குறை கண்டு பிடிப்பார்கள் என்பதான எண்ணமும் நீங்க வேண்டும்.

நம்மைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்பதான உணர்வை முதலில் விட்டுத் தள்ள வேண்டும். அப்புறம் பாருங் கள் நீங்கள் அவர்கள் என்ன நினைக்க வேண்டும் என விரும்புகிறீர்களோ அதை அவர்களை நினைக்கச் செய்ய உங்களால் முடியும்.


லேனா தமிழ்வாணன்



# சிறுவர் அரங்கம்

1404

## சூரியனை சிறை பிடியுங்கள்!





...“அரசரே, தினமும் காலையிலும் மாலையிலும் இந்த எண்ணெயை உடலில் தேய்த்துக் கொண்டு மூன்று சுற்றுகள் அரண்மனையைச் சுற்றிவர வேண்டும். இது அரண்மனை தோஷம். எனவே அரண்மனையைச் சுற்றினால்தான் மருந்து வேலை செய்யும்” என்றனர்.

“சரி அப்படியே ஆகட்டும்” என்றார் ராஜா.

மறுநாள் காலை ராஜாவும் மந்திரியும் எழுந்து உடல் முழுவதும் எண்ணெயைத் தேய்த்துக் கொண்டு அரண் மனையை விட்டு வெளியே வந்தனர். அப்போதுதான் சூரியனும் அடிவானிலிருந்து வெளியே வந்தான். சூரிய ஒளி அன்றைக்குத் தான் ராஜாவின் உடலிலும் மந்திரி யின் உடலிலும் பட்டது. சூரிய னின் வெளிச்சத்தையும் அதன சூட்டையும் ராஜாவால் பொறு க்க முடியவில்லை. உடனே அவர்,

“மந்திரியாரே, விளக்கை அங்கே மாட்டியது யார்? உடனே அதை அணைக்கச் சொல்லும்” என்று உத்தரவிட் டார். மந்திரியும் காவலாட் களை அழைத்து, “யாரங்கே. உடனே அந்த விளக்கை அணையுங்கள். ராஜாவுக்குச் சூடு தாங்க முடியவில்லை” என்று கத்தினார். உடனே காவலாட்கள் சூரியனை அணைத்துவிடுவதற்காக துணி, போர்வை, பஞ்சு, தண்ணீர் என்று சகல பொருட் களுடன் போனார்கள். பகல் முழுவதும் நடந்தனர். சூரிய னும் தூரமாய் போய்க் கொண்டிருந்தான். மாலை யானதும் மறையத் தொடங்கி னான். தங்களைப் பார்த்து பயந்துதான் சூரிய விளக்கை அணைத்து விட்டார்கள் என்று மகிழ்ச்சியுடன் கத்திக் கொண்டு வந்து ராஜாவிடம் சொன்னார்கள். ராஜாவுக்கும் மகிழ்ச்சி. எல்லோருக்கும் பரிசு கொடுக்கச் சொன்னார். ஆனால் மறுநாள் காலையில் மறுபடியும் சூரியன் வந்துவிட் டான். மறுபடியும் விளக்கை அணைக்க எல்லோரும் ஓடினர். மறுபடியும் மாலை யானதும் சூரியன் மறைந்து விட வெறுங்கையுடன் திரும்பி வந்தனர்.

ராஜாவும், மந்திரியும் நாடெங்கும் முரசு முழங்கி செய்தி சொல்லச் சொன்னார் கள்.

“இதனால் சகலமானவர் களுக்கும் தெரிவிப்பது என்ன வென்றால் காலையில் தோன்றி மாலையில் தலைமறைவாகி விடும் சூரியனைத் தேடப்படும் குற்றவாளியாக மண்டியா தேசம் அறிவிக்கிறது. சூரி யனைப் பிடித்துக்கொண்டு வருபவர்களுக்குத் தக்க சன்மானம் வழங்கப்படும்”

மக்கள் அனைவரும் எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு சூரியனைப் பிடிக்க காலையில் புறப்பட்டுப் போவதும் மாலையில் திரும்புவதுமாக இருந்தார் கள். இப்போது ராஜாவுக்கோ, மந்திரிக்கோ, மண்டியா தேச மக்களுக்கோ எந்தத் தோல் நோயும் இல்லை. எல்லாம் குணமாகிவிட்டது. ஆனால் ராஜாவும், மந்திரியும் சர்வ தேச நாடுகளுக்கும் சூரிய னைப் பிடித்துத் தரச் சொல்லி ஓலை அனுப்பிக்கொண்டிருக் கிறார்கள். உங்கள் நாட்டுக் கும் ஓலை வந்திருக்கிறதா? கேட்டுப் பாருங்கள்!? (முற்றும்)

## 04.2016 08 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 217 - உரோம் பேரரசின் மன்னன் கரகல்லா படுகொலை செய்யப்பட்டான்.
- 1767 - தாய்லாந்தின் அயுத்தயா பேரரசு பர்மிய ரிடம் வீழ்ந்தது.
- 1857 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனி யின் வங்காள இராணுவத்தைச் சேர்ந்த மங்கல் பாண்டே என்ற சிப்பாய் பிரித்தா னிய ஆட்சிக்கெதிராக கிளர்ச்சியில் ஈடுபட் டமைக்காக தூக்கிலிடப்பட்டான்.
- 1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: லூசியா னாவில் மான்ஸ்ஃபீல்ட் என்ற இடத்தில் கூட்டமைப்பு படைகள் கூட்டுப் படைகளை தோற்கடித்தன.
- 1866 - ஆஸ்திரியா-ஹங்கேரிக்கு எதிராக இத் தாலியும் புரூசியாவும் அணி திரண்டன.
- 1867 - முதலாவது உலக கண்காட்சி பாரிஸ் நகரில் ஆரம்பமானது.
- 1899 - மார்த்தா பிளேஸ் என்பவர் மின் இருக் கையில் மரண தண்டனை பெற்ற முதற் பெண்.
- 1919 - பஞ்சாபில் நுழையக்கூடாதென்ற தடையை மீறியதால் மகாத்மா காந்தி டில்லி செல்லும் வழியில் கைது செய்யப்பட்டு பம்பாய்க்கு அழைத்துச் செல்லப்பட்டார்.
- 1929 - டில்லி நடுவண் அரசு கட்டடத்தில் பகத் சிங், மற்றும் பத்துகேஷ்வர் தத் ஆகியோர் துண்டுப் பிரசுரங்களையும் குண்டுகளை யும் வீசி தாமாகவே சரணடைந்தனர்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியர் கள் பிலிப்பைன்சின் பட்டான் மாநிலத்தைக் கைப் பற்றினர்.
- 1950 - இந்தியாவும் பாகிஸ்தானும் லியாக்கட்-நேரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.
- 1957 - எகிப்தில் சூயஸ் கால்வாய் மீளத் திறக்கப்பட்டது.
- 1973 - சைப்பிரசில் 32 குண்டுவெடிப்புகள் இடம்பெற்றன.
- 1985 - போபால் அனர்த்தம்: போபாலில் நச்சு வாயுக் கசிவினால் 2,000 பேருக்கு மேல் கொல்லப்பட்ட நிகழ்வுக்காக இந்தியா யூனியன் கார்பைட் நிறுவ்னத்துக்கெதி ராக வழக்குத் தொடர்ந்தது.
- 2004 - சூடான் அரசுக்கும் இரண்டு தீவிரவாத அமைப்புகளுக்கும் இடையில் போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டது.


**பிறப்புகள**

- 1911 - மெல்வின் கால்வின், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1997)
- **1938 - கோபி அன்னான், நோபல் பரிசு பெற்ற முன்னாள் ஐக்கிய நாடுகள் அவைப் பொதுச் செயலர்**

**இறப்புகள**

- 1857 - மங்கள் பாண்டே, பிரித்தானியக் கிழக் கிந்தியக் கம்பனியின் படை வீரர் (பி. 1827)
- 1931 - எரிக் கார்ல்ஃபெல்ட், நோபல் பரிசு பெற்ற சுவீடன் எழுத்தாளர் (பி. 1864)
- 1936 - ரொபேர்ட் பாரானி, மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1876)
- 1973 - பாப்லோ பிக்காசோ, ஸ்பெயின் நாட் டைச் சேர்ந்த புகழ்பெற்ற ஓவியர் (பி. 1881)
- 1984 - பியோத்தர் காப்பிட்சா, நோபல் பரிசு பெற்ற ரஷ்யர் (பி. 1894)
- 1992 - டானியேல் போவெட், மருத்துவத்துக் கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1907)

### கோஃபி அன்னான்



கோஃபி அன்னான் 1938 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி கானாவின் குமசியின் கோபேண்ட்ரோஸ் பகுதியில் பிறந் தார். இவரும் இவரது சகோதரி யும் இரட்டையர்களாவர். கானா நாட்டின் கலாசாரப்படி இரட்டையர் கள் கௌரவமாகக் கருதப்படுவர்.

கானா நாட்டில ஓர் வழக்கமாக குழந்தைகள் பிறந்த நாளினையே அவர்களுக்கு பெயராகச் சூட்டுவர். அவ்வழக்கப்படியே இவருக்கு **“கோஃபி”** (அதாவது அவர்களின் மொழியில் வெள்ளிக்கிழமை) என்று பெயரிட்டனர்.

ஐக்கிய நாடுகள் அவையின் ஏழாவது செயலாளராக இருந்தவர். ஜனவரி 1, 1997 இல் இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கோஃபி அன்னான் டிசெம்பர் 31, 2006 அன்று ஓய்வு பெற்றார்.

2001 இல் அன்னான், ஐக்கிய நாடுகளுக்கு கூட்டாக “ஒரு சிறந்த ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் அமைதியான உலகத்திற்காக உழைத் ததற்காக” அமைதிக்கான நோபல் பரிசு, விருது பெற்றார்.

பெப்ரவரி 23, 2012 முதல் 31 ஒகஸ்ட் 2012 வரை, சிரியாவிற் கான ஐ.நா. அரபு லீக் கூட்டு சிறப்பு பிரதிநிதியாக இருந்தார். ஐ.நா. வின் பற்றாக்குறையான பங்களிப்பு குறித்து சலிப்படைந்த கோஃபி அன்னான் சிறப்பு பிரதிநிதி பதவியில் இருந்து விலகினார்.

# புலிகள் மூலம் மகிந்தவை கொலை செய்ய சதித்திட்டம்

## பொது எதிரணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

**வடக்கில் திட்டமிட்ட வகையில் புலிகளின் ஆதிக்கம் தலைதூக்கி வருகின்றது. அவ்வாறான நிலையில் தேசிய பாதுகாப்பு விடயத்தில் அரசாங்கம் மிகவும் மோசமாக செயற்படுவதாக பொது எதிரணி குற்றம் சாட்டியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்ட இராணுவத்தினரை நீக்கிவிட்டு ஜனாதிபதியும் பிரதமரும் திட்டமிட்டு விடுதலைப்புலி பயங்கரவாதிகளின் மூலமாக மகிந்த ராஜபக்ஷவை கொலைசெய்யத் திட்டம் தீட்டியுள்ளனர் எனவும் பொது எதிரணியினர் குற்றம்சுமத்தினர்.**

பொது எதிரணியினரால் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பின்போதே அவ்வணியினர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினர்.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ச மேலும் தெரிவிக்கையில்,

மீண்டும் விடுதலைப் புலிகளின் பயங்கரவாத செயற்பாடுகள் தலை தூகியுள்ளதாக புலனாய்வு பிரிவு மூலம் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

வடக்கில் நடைபெற்று வரும் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான செயற்பாடுகள் அரசாங்கதிற்கு சவால் விடுக்கும் வகையில் அமைந்துள்ளன.

ஆனால் அரசாங்கம் இந்த சம்பவங்கள் தொடர்பில் சிறிதளவேனும் கவனம் செலுத்தாது தேசிய பாதுகாப்பு விடயத்தில் அக்கறையின்றிய வகையில் தான் செயற்படுகின்றது.

வடக்கில், ஆயுதங்களும் வெடிபொருட்களும் மீட்கப்பட்டுள்ளன. புலிகளின் முக்கிய நபர்களின் செயற்பாடுகள் மீண்டும் வடக்கில் இடம் பெற்று வருவதாக கூறப்படுகின்றது.

அவ்வாறு இருக்கையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பிற்கு வழங்கப்பட்ட இராணுவத்தினரை மே மாதத்தில் இருந்து முழுமையாக நீக்குவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எவ்வாறு இருப்பினும் ஜனாதிபதியும் பிரதமரும் தான் நாட்டின் பாதுகாப்பு விடயத்தில் தீர்மானம் எடுக்கின்றனர். ஆகவே ஜனாதிபதியும் பிரதமரும் திட்டமிட்டு விடுதலைப்புலி பயங்கரவாதிகளின் மூலமாக மகிந்த ராஜபக்ஷவை கொலை செய்யத் திட்டம் தீட்டியுள்ளனர் என்பது தெளிவாக எமக்கு தெரிகின்றது.

அதனால்தான் அவருக்கான இராணுவ பாதுகாப்பை முழுமையாக நீக்கப்பார்க்கின்றனர். இராணுவத்தால் மட்டுமே சரியான பாதுகாப்பை அவருக்கு வழ ங்க முடியும். அவ்வாறு இருக்கையில் அவர்களை நீக்கிவிட்டு சாதாரண பாதுகாப்பை மாத்திரம் வழங்கத் தீர்மானித்துள்ளதாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

ஆகவே இவர்கள் மகிந்த ராஜபக்ஷவை பாதுகாப்பதற்கு பதிலாக அவரை புலிகளின்மூலமாக கொலை செயது புலிகளின் பழிதீர்க்கும் நடவடிக்கையை மேற்கொள்ளவே முயற்சிக்கின்றனர்.

நாம் யாரும் எந்த கட்சியாக இருந்தாலும் எவ்வாறான கொள்கையில் இருந்தாலும் நாட்டில் நிலவிய கொடூரமான யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவந்த தலைவரான மகிந்த ராஜபக்ஷவை காப்பாற்ற வேண்டியது எம் அனைவரினதும் கடமையாகும்.

அவ்வாறு இருக்கையில் அவரை கொன்று பழிதீர்க்க இந்த அரசாங்கம் முயற்சிக்கின்றது என்றால் அதை எவ்வாறு நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது. ஆகவே மக்கள் இந்த செயற்பாடுகளை கண்டித்து எம்முடன் கைகோர்த்து போராட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் கருத்து தெரிவிக்கையில்,


தேசிய பாதுகாப்பு விடயத்தில் அரசாங்கம் எப்போதும் அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டும். அண்மையில் இஸ்லாமிய பயங்கரவாதிகளின் தாக்குதலில் பெல்ஜியம் பிரேசில்ஸ் நகரில் நடந்த குண்டுத்தாக்குதலில் பின்னணி சாதாரண ஒன்றல்ல.

இந்த தாக்குதலின் பின்னர் அந்த நாட்டின் பாதுகாப்பு மிகவும் பலமானதாக காணப்படுகின்றது.

ஆனால் இலங்கையில் அவ்வாறு அல்ல. இலங்கையில் தேசிய பாதுகாப்பு விடயத்தில் அனைத்துமே தலைகீழாக மார்றியுள்ளது என மேலும் குற்றம் சாட்டியார். (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 686

உஷா





மது




றதி





விது



தனுஷன்




தர்மா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கையின் யுத்தக்குற்ற விசாரணைக்கு வெளிநாட்டு நீதிபதிகள் தேவையில்லை!

## ஜனாதிபதியின் பிடிவாதம்-உடன்பாட்டை மீறும் அதர்மம்!

## தொடரும் “ஐ.நா.மனித உரிமை சபை” அமர்வுகள்:



> சண்டேலீடர்பத்திரிகையில் “இலங்கையின்யுத்தக் குற்ற விசாரணைக்கு வெளிநாட்டு நீதிபதிகள்தேவையில்லை; ஜனாதிபதியின்பிடிவாதம்-உப்பாட்டைமீறும் அதர்மம்!” எனும் தலைப்பில் ஈஸ்வரன்ரட்ணம்எழுதிய அரசியல் கட்டுரையின் தமிழாக்கம்...

கடந்த வார இறுதியில்
ஜனாதிபதி மைத்திரிபால
சிறிசேன, இலங்கையின்
யுத்தக்குற்ற சம்பந்தமான
பொறுப்புக்கூறல் வழிமுறை
களில் வெளிநாட்டு நீதிபதிகள்
சம்பந்தப்படும் விதமாக
அவர்கள் இங்கு அழைக்
கப்படுவதற்கு தான் இணக்
கப்போவதில்லை என தனது
பகிரங்க அறிக்கையொன்றில்
கூறியிருந்தது பரவலான கடும்
விமர்சனத்தை ஈர்த்துள்ளது.

போர் மட்டிலான பொறுப்புக்
கூறல் விசாரணைகளுக்கு
வெளிநாட்டு நீதிபதிகள் உள்
வாங்கப்படுவது அவசியம்
என்ற விடயம் கடந்த வருடம்
இடம்பெற்ற ‘ஐ.நா.மனித
உரிமை சபை அமர்வு’களின்
போது இலங்கையின் அனு
சரணையுடனும் பரஸ்பர
இணக்கப்பாட்டுடனுமே
நிறைவேற்றப்பட்ட தீர்மானம்
என்ற அடிப்படையிலேயே
இந்த விமர்சனங்கள் கிளம்பி
யிருந்தன.

கடந்த வார இறுதி நாட்
களில் வாதுவையில் இடம்
பெற்ற உள்ளூர் சட்டவாளர்கள்
மாநாடொன்றில் பேசிய
ஜனாதிபதி, உள்ளூர் சட்டவியல்
நடைமுறைச் செயற்பாடுகளில்
தமக்கு நம்பிக்கையிருப்ப
தாகவும் சிறப்பான அதன்
செயற்பாட்டிற்கு சட்டவியல்
ஒழுங்குமுறைகள் பலப்
படுத்தப்படுவதுடன் சுதந்திர
மான அதன் செயற்பாடுகள்
உறுதிப்படுத்தப்படுவதுமே
செய்யப்பட வேண்டிய அனை
த்துமாகும் என்றே, தான்
உணருவதாகவும் கூறி
யிருந்தார்.

இலங்கை யுத்தம் சம்பந்த
மான மனித உரிமை மீறல்கள்
மட்டில் மேற்கொள்ளப்படும்
விசாரணைக்களிலான உள்
ளூர் பொறிமுறைகள் நம்பகத்
தன்மை வாய்ந்ததாயிருப்பதை
உறுதிசெய்து கொள்வதற்கு
வெளிநாட்டு நீதிபதிகளை
அழைக்கும்படி சர்வதேச
மனித உரிமைகளுக்கான
குழுக்கள் இலங்கைக்கு
அறைகூவல் விடுத்திருந்தன.

“உள்ளூர் மனித உரிமை
மீறல்கள் மட்டிலான விசார
ணைகளின் பின்னர் நீதி மன்ற
அமர்வு நடைமுறை யொன்று
கைக்கொள்ளப்பட வேண்டிய
தேவையொன்று ஏற்படு
மானால் அதில் வெளி நாட்டு
நீதிபதிகள் கலந்து கொண்டு
அந்த உள்ளூர்ப் பொறி
முறையில் சம்பந்தப்படுவ
தற்கென அவர்களை அழைப்
பதற்கு நான் இணக் கப்போவ
தில்லை” என்றே ஜனாதிபதி
கூறியிருந்தார்.

ஒரு சில வாரங்களுக்கு
முன்னருங்கூட ஜனாதிபதிய
வர்கள் இதே விதமானதொரு
வாய்மூல அறிக்கையொன்
றினை சர்வதேச ஊடகங்
களுக்கு விடுத்திருந்ததுடன்,
அது மனித உரிமைகள்
குழுக்களிடையே புயலைக்
கிளப்பியுமிருந்தது மட்டுமல்
லாது ஜனாதிபதியவர்கள் இது
விடயமாக தனது நிலைப்
பாட்டினை மீள்பரிசீலனை
செய்ய வேண்டுமென்ற கோரிக்
கையையும் அவைகள் மத்தியி
லிருந்து எழுப்பியுமிருந்தது.

ஐ.நா. மனித உரிமை
சபையில் இலங்கைப் பிரச்
சினை மீது தீர்மானம் நிறை
வேற்றிக்கொள்வதற்கு அழுத்
தம் கொடுத்துச் செயற்பட்டி
ருந்ததும் உள்ளக விசாரணைப்
பொறிமுறைகளில் சர்வதேச
த்தினது ப்ங்காற்றலை ஆதரி
த்து செயற்பட்டு வந்ததுமான
“மனித உரிமைகள் கண்
காணிப்பகம்” என்ற அமைப்
பானது இலங்கை மீதான
மனித உரிமை மீறல் விசா
ரணைகளில் சர்வதேச நீதிபதி
களின் பங்கிற்கான தேவைக்கு
இரட்டிப்பு வலியுறுத்தல் கொடு
த்தும் வந்தது.

**மனித உரிமைகள்
ஆணைக்குழு தீர்மானம்**

“உள்ளூர் நீதிபதிகள் மற்றும்
வழக்கினை முன்னெடுத்துச்
செல்லும் தரப்புச் சட்டத்தரணி
களாலும் உணர்வுபூர்வமான
போர்க்குற்றச்சாட்டுக்கள் மட்டில்
மேற்கொள்ளப்பட்ட விசா
ரணைகளின் தொடர்ச்சியான
தோல்வி அனுபவங்கள் கார
ணமாகவேதான்
மனித உரிமைகள்
ஆணையகம்
மேற்படி தீர்மானத்
தினூடாக வெளி
நாட்டு நீதிபதிகளின்
பங்குபற்றுதலைக்
கோரியிருந்தது.
வெளிநாட்டு நீதிபதி
களின் பங்குபற்று
தலுக்கு திரும்பத்
திரும்ப மறுப்புத்
தெரிவித்து வரும்
ஜனாதிபதியவர்
களின் வாய்மூல
தொடர் அறிவித்தல்
கள் பொறுப்புக்
கூறல் பொறிமுறை
மட்டி லான அர
சாங்கத்தின்
நிலைப்பாட்டிற்கு
முரணாக இருப்
பதுடன் இந்த வித
மான போக்குகள்
அவர்களது நேர்
மைக்கும் நம்ப
கத்தன்மைக்கும்
அறைகூவல்
விடுப்ப தாகவுமிருக்
கிறது” என ஆசிய
மனித உரிமைகள் கண்
காணிப்பக இயக்குநரான பிரட்
அடெம்ஸ் சண்டே லீடருக்கு
கூறியிருந்தார்.

கடந்த வருட ஜனாபதிபதித்
தேர் தலில் அரசாங்கத்திற்கு
ஆதரவு அளித் திருந்த தமிழர்
தேசிய கூட்டமைப்புங்கூட
ஜனாதிபதியவர்களின் இந்தவித
நிலைப் பாட்டிற்கெதிராக தனது
அதிருப்தியை வலியுறுத்தி
யிருந்தது. யுத்தக் குற்றங்கள்
மட்டிலான பொறுப் புக்கூறலுக்கு
தனித்த விதமான உள்ளூர்
பொறிமுறையை தமிழ் மக்கள்
ஏற்றுக்கொள் எப்போவதில்லை
என ‘TNA’ பாராளுமன்ற
உறுப்பினரான சுரேஸ் பிரேமச்
சந்திரன் கூறுகிறார்.

வெளிநாட்டு நீதிபதிகளின்
பங்குபற்றுதலை பிரேரிக்கும்
ஐ.நா. தீர்மானத்தின் சரத்துக்
களை அரசாங்கம் தெளிவான
முறையில் ஏற்றுக்கொண்டிரு
ப்பதாக அவர் கூறுகிறார். வரம்பு
கடந்த வன்முறைப் பிரயோக
ங்கள், மனித உரிமை மீறல்கள்
மற்றும் சர்வதேச மனிதாபி
மான சட்ட மீறல்கள் போன்ற
வற்றுக்கேற்ற விதமான விசா
ரணைகள் மேற்கொள்வதற்
கான விசேட ஆலோசனை
களுடன்கூடிய ஒரு நீதி விசா
ரணைப் பொறிமுறையினை
நிறுவிக் கொள்ளும் இலங்கை
யின் கருத்தினை ‘UNHRC’
கவனத்திற் கொள்கிறது.
குறித்த இந்த விசாரணைப்
பொறிமுறையின் நம்பகத்தன்
மையை உறுதிப் படுத்திக்
கொள்ளும் விதத்தில் பிரபலம்
வாய்ந்த சுயாதீனமான
தனியாட் தலைமைத்துவச்
செயற்பாடுகள், பொதுநல
வாய அமைப்பு மற்றும்
ஏனைய வெளிநாட்டு நீதிபதி
களதும் ஆலோசனை அலுவல்
களும் சுதந்திரமாக இயங்கும்.

**வெளிநாட்டு நீதிபதி
களின் முக்கியத்துவம்**

வெளிநாட்டு நீதிபதிகளின்
பங்குபற்றுதல் விடயத்தின்
முக்கியத்துவம் பற்றி ‘TNA’
உறுப்பினர் எம்.ஏ.சுமந்திர
னால் பாராளுமன்றத்தின்
கவனத்திற்கு கொண்டு வரப்
பட்டதாக சுரேஸ் பிரேமச்சந்
திரன் கூறியுள்ளார்.

(தொடரும்)

-தமிழில்-யோகர்-

# ஆட்சி உரிமை சட்டமூலம் சபையில் திருத்தங்களுடன் நிறைவேற்றம்

யுத்த காலத்தில் ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாக காணி உள்ளிட்ட அசையா சொததுக்களை இழந்தவர்கள் அவற்றை மீளப பெற்றுக்கொள்வதற்கு வழியமைமக கும் ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் நேற்று முன்தினம பாராளுமன்றத்தில் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

இதற்கமைய 1983ஆம் ஆண்டு மே மாதம்முதல் 2009ஆம்ஆண்டு மே மாதம 18ஆம் திகதி வரையான காலப் பகுதியில் தமது காணி உரிமைகளை அனுபவக்க முடியாது போனவர்கள் மற்றும் அவற்றை மீளப் பெறுவதற்கு நீதிமன்றத்தின் உதவியை நாட முடியாதவர்கள் குறித்த சொத்து மீதான உரிமையை மீளப் பெற இச்சட்டமூலம் வழிகோலியுள்ளது.

இரண்டு வருட காலத்துக்குள் காணி உள்ளிட்ட அசையா சொத்துக்களின் உரிமைகளை மீளப்பெற்றுக் கொள்வதற்காக நீதிமன்றம்செல்ல முடியும். இந்தச்சட்டத்தின் ஊடாக 30 வருட கால யுத்தத்தினால்தமது சொத்துக்களை அனுபவிக்க முடியாது கைவிட்டு வந்தவரகளும், 1983 ஆம் ஆண்டு இனக் கலவரத்தினால்தமது சொத்துக்களை கைவிட்டு வந்தவர்களும் நன்மையடைவர்.

இந்த சட்டமூலத்தை நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ சமர்ப்பித்து உரையாற்றினார். இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன். ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோர் திருத்தங்களை முன்வைத்தனர்.

அவற்றை ஏற்று சட்டமூலத்தில் திருத்தங்களைக்கொண்டுவர நீதிஅமைச்சர் இணங்கினார. விவாதத்தின் முடிவில் வாக்கெடுபபின்றி சட்டமூலம் நிறைவேறியது.

இலங்கையில் இடம்பெற்ற ஆயுதந்தாங்கிய பயங்கரவாத குழுவொன்றின் செயற்பாடுகள் காரணமாக நீதிமன்றத்தில் தமது உரிமைகளைத் தொடர்வதற்கு அல்லது தம்மைப்பாதுகாத்து கொள்வதறகு இயலாதிருக்கின்ற ஆட்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய விசேட சட்ட ஏற்பாடுகள் மற்றும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதற்கு இடைநேர்விளைவான கருமங்கள் ஆகியவற்றை இயலச்செய்வதறகுமானதொரு சட்டம் என்றே இந்த சட்டமூலததிற்கு முகப்புரை வழங்கப்பட்டுள்ளது.

சட்டமூலத்தை சமர்ப்பித்து உரையாற்றிய அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மேலும் குறிபபிடுகையில், தற்பொழுது நடைமுறையிலஉள்ள ரோமன்-டச்சு சட்ட ஏற்பாடுகளுககு அமையவே இவ்வளவுகாலமும் ஆட்சியுரிமை சட்டம் காணப்படுகிறது. இதற்கமைய யாதேனும்ஒருவருக்கு உரித்தான அசையும் அலலது அசையா சொத்துக்கள் 10 வருடங்களுக்கு மேலாக வேறொருவரினால் அனுபவிக்கப்பட்டிருப்பின், அதன் உரிமையை அனுபவித்தவர் பெற்றுக்கொள்ள முடியும்.

இநத சட்டத்தில் பாரிய குறைபாடுகள் இல்லாவிட்டாலும் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக நிலவிய யுத்தம் காரணமாக வடக்கு, கிழக்கில் உள்ள மக்கள் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். மோதல் நிலைமைகள் காரணமாக ஒரு பகுதி மக்களுக்கு இந்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. யுத்தத்தால் தமது சொத்துக்களைக் கைவிட்டுச் சென்றவர்கள் 10 வருடங்களுக்கு மேலாக திரும்ப முடியாத சூழ்நிலையால், அவற்றை அனுபவித்தவர்கள் உரிமைகொண்டாடுகின்றனர். யுத்தம காரணமாக அவர்களுக்கு நீதிமன்றத்தின உதவியையும்நாடமுடியாது போனது.

இதனால் பரம்பரை பரம்பரையாக வழுங்கப்பட்டுவந்த சொத்துக்களை அதன உண்மையான உரிமையாளர்கள் இழக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. 1983 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் யுத்தம் முடிவுக்கு வந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் யாதேனும் நபரொருவரினால் தமது சொத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்து அனுபவிக்க முடியாமல் போயிருந்தாலோ அல்லது நீதிமன்றத்தை நாடி தமது காணி உரிமத்தை மீள பெற முடியாமல் போயிருநதாலோ அது இந்த நாட்டில் நிலவிய மோதல்களினால் அந் நபருக்கு இழைக்கபபட்ட அநீதியாகவே அமைந்துள்ளது.

இந்த நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களது காணிகளை மீளப் பெற்றுக் கொள்வதில் நடைமுறைச் சிக்கல் நிலவுவதால் அவ்வாறான காணிகளின் உரிமத்தை அவற்றின் உரிமையாளர்கள் மீளப் பெற்றுக் கொள்வதற்கு ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தின் ஊடாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார்.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தின் பிரகாரம், காணி உட்பட ஏதேனும் அசைவற்ற சொத்தை மீளப பெறுவதற்காக தம்முடைய உரிமைகளைத் தொடர்வதற்கு இயலாதவராக இருந்தவரான “அனுகூலம் குறைந்த நபரொருவர்” (பாதிக்கப்பட்ட நபர்) இச் சட்டம் நடைமுறைக்கு வந்ததற்குப் பின்னர் 24 மாதங்களினுள் (இரண்டு வருடங்கள்) இச் சட்டத்தினால் அளிக்கப்பட்ட நன்மைகளைப்பயன்படுத்துவதற்கு அவர் வழக்கொன்றை தொடுப்பதற்கு உரித்துடையராதல் வேண்டும் என்று விதந்துரைக்கப்பட்டுள்ளது.

இதில், “ஏதேனும் ஆயுதம் தாங்கிய பயங்கரவாத குழுவொன்றின் செயற்பாடுகள்” என்பது, 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சம வாயச் சட்டத்தில், “பயங்கரவாதச் செயல்” ஒன்றாக வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் செயல் எனப் பொருளாகும் என்றும் சட்டமூலத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதேபோல், “அனுகூலம் குறைந்த நபர்” என்பது 1983 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதியன்று தொடங்கி 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதியில் முடிவடைந்த காலப்பகுதியின் போது ஏதேனும் ஆயுதந்தாங்கிய பயங்கரவாத குழுவொன்றின் செயற்பாடுகள் காரணமாக நிலவிய சூழ்நிலைகளின் விளைவாக அந்த நபர், அவருடைய உரிமைகளை எந்த நீதிமன்றத்தில் தொடர்வதற்கு அவர் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டிருந்தாரோ அந்த நீதிமன்றம் ஒன்றில் தமது உரிமைகளைத் தொடர்வதற்கு இயலாதவராக இருந்தவரான நபர் ஒருவர் என்று பொருள்படும் என்றும் ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தில் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

விவாதத்தில் உரையாற்றிய திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திசாநாயக்க, இனங்களுக்கிடையில மீண்டும்முறுகல்நிலை ஏற்படாத வகையல் இந்தச் சட்டத்தை செயற்படுத்த வேணடும்என்று கோரினார. ஏற்கனவே மற்றவரகளின் காணிகளில் வீடுகளை கட்டி வாழ்ந்து வருபவர்கள் குறித்தும் சிந்திக்க வேணடும்என்றும்அவர் சுட்டிக்காட்டினார்.

பிரதியமைச்சர் அஜித்.பி.பெரேரா உரையாற்றுகையில், 1983 கலவரத்தினால் கொழும்பிலும் தென்பகுதயிலும் இருந்து வெளியேறிய தமிழ் மக்கள இந்த சட்டத்தினூடாக நன்மையடைய இருபதாகவும்ஒரு இனத்தையோ ஒரு பிரதேசததையோ இலக்குவைத்து இந்த சட்டமூலம் தயாரிக்கப்படவில்லையெனவும் கூறினார்.

டக்ளஸ்தேவானந்தா எம்.பி. உரையாற்றுகையில், அரச காணிகளுக்கு செல்லுபடியாகாது எனவும், இந்த சட்டத்தை பரந்தளவில முனனெடுக்க வேண்டும் எனவும் கோரினார். இந்த விவாதத்தில் உரையாற்றிய விஜித ஹேரத் எம்பி, சட்டமூலத்தில் நீதிமன்ற உதவியை நாடும் கால எல்லை ஒரு வருடம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதை 2வருடங களாக நீடிக்க வேண்டும் என்று கோரினார்.

இந்த சட்டமூலத்தின் பிரகாரம் 1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் பெறுவது சிக்கலானது. இது குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என இவ்விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை விடுத்தார். (இ-5)


விஜயதாஸ ராஜபக்ஷ


அஜித்.பி.பெரேரா


எம்.ஏ. சுமந்திரன்


டக்ளஸ்தேவானந்தா


விஜித ஹேரத்


விமலவீர திஸாநாயக்க

# அரச புகைப்பட விழாவுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அரச புகைப் படவிழா - 2016 மற்றும் பிரதேச மட்ட கலை இலக்கியப் போட்டி- 2016 ஆகியவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

இவற்றில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் விண்ணப் பங்களை யாழ்.நல்லூர் பிரதேச செயலக கலாசார பிரிவிடம் பெற்றுக் கொள்ளலாம் என உதவிப் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ

# ‘ஆறுதல்’ சஞ்சிகை,‘பாடு ப்பாப்பா’ இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஆறுதல் நிறுவனத்தினால் வெளியிடப்படும் கல்வி, சமூக, உளவியல் சஞ்சிகையான ஆறுதல் சஞ்சிகை யினதும், பாடு பாப்பா எனும் இறுவெட்டினதும் வெளியீட்டு நிகழ்வு நாளை மறுதினம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 6 மணி வரை ஆறுதல் நிறுவன நிறைவேற்று அதிகாரி சுந்தரம் டிவகலாலா தலைமையில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆறுதல் சஞ்சிகையின் வெளியீட்டுரை, நயவுரையினை முன்னாள் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா பாடு பாப்பா இறுவெட்டு வெயியீட்டுரை, அறிமுக உரையினை முன்னாள் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் கவிஞர் சோ.பத்மநாதன் நிகழ்த்தவுள்ளனர். (இ-5)

# 65 ஆயிரம் வீட்டுத்திட்ட விபரங்களை 21 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குக

## சுமந்திரன் எம்.பி. அமைச்சர் சுவாமிநாதனுக்கு கடிதம்

(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களில் 65 ஆயிரம் வீடுகள் அமைக்கும்திட்டங்கள் தொடர்பான விபரங்களை வழங்குமாறு கோரி தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மீள்குடியேற்ற அமைச்சர் டி. எம்.சுவாமிநாதனுக்கு நேற்றைய தினம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மேற்படி வீட்டுத்திட்டம் வெளிப்படைத் தன்மையுடன் போரினால்பாதிக்கப்பட்ட மக்களின் அவசரமான தேவைகளை நிறைவு செய்வதற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளை பாராட்டுகின்றேன். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் மேற்படி வீட்டுத்திட்டம் தொடர்பில் அதிகளவு கவனம் செலுத்தப் படும் நிலையில் மக்கள் மீதான இதன் தாக்கம் குறித்து இந்த வீட்டுத்திட்டம் தொடர்பான மேலதிக தகவல்களை கவனத்தில் கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளேன்.

இதனால் மேற்படி வீட்டுத் திட்டம் தொடர்பில் கீழ்வரும் விபரங்களை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேற்படி வீட்டுத்திட்டத்திற்கு நிதி வழங்குவதற்கு தகுதி பெற்றுள்ள 15 நிதி வழங்குநர்கள், அவர்களின் விருப்ப வெளிப்பாடு (EOI) தொடர்பான விபரங்கள், திருத்தம் செய்யப்பட்ட (EOI) இன் அடிப்படைகள், முன்மொழிவுகளுக்கான வேண்டுகைகளை (RFP) சமர்ப்பித்த நிதி வழங்குநர்கள், உறுதிப் படுத்தப்பட்ட ஆகக் குறைந்த நிதித் தேவைப்பாடு மற்றும் ஏற்றுக் கொள்ளத்தக்க பாதுகாப்பு தொடர்பான முன்மொழிவுகள், திட்டத்திற்கான முழுச் செலவீனம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட (RFP) ஆவணங்கள், கேள்விக்கோரல்கள்தொடர்பான விண்ணப்பங்கள் திறக்கப்பட்ட திகதி மற்றும் அதன் போது பிரசன்னமாகியிருந்தவர்களின் விபரங்கள், Arc elor mittal உடனான நிதி ஏற்பாடுகள், Arc elor mittal இனால் முன்மொழியப்பட்ட உண்மையான நிர்மாணச் செலவு, ஏனைய நிதி வழங்குநர்களுடனான ஒப்பீட்டு விபரம், வடக்கு கிழக்கில் 10 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கு மேற்படி வீடமைப்புத் திட்டத்தில் ஒப்பீட்டளவில் ஏற்படும் நிர்மாணச்செலவு, முன்மொழியப்பட்ட மேற்படி வீட்டுத்திட்டத்தின் பாவனைக்காலம், மேற்படி நிர்மாணப் பணிகளுக்கான சுற்றுச்சூழல் அறிக்கை, நிர்மாணப்ப பணிகள் இடம்பெறும் காலப்பகுதி தொடர்பான அறிக்கை, மேற்படி நிர்மாணப் பணிகளில் ஈடுபடும் பிரதேச முகவர்கள் தொடர்பான தகவல்கள், நிர்மாண நடைமுறைப் பணிகளில் பிரதேச ரீதியாக தொழிலாளர்கள் பயன்படுத்தப் படுவது தொடர்பான விபரங்கள்.

எதிர்வரும் 21 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக மேற்படி வேண்டுகைகள் தொடர்பான தகவல்களை வழங்குமாறு தாழ்மையாக கேட்டுக் கொள்கிறேன் என அக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (3)

# தமிழ் சினிமா வரலாறு

135

## எம்.ஜி.ஆரை கதாநாயகனாக அறிமுகம் செய்த ஜுபிடர் சோமு

கோவையில் ஜுபிடர் வசம் இருந்த சென்ட்ரல் ஸ்டூடியோவை குத்தகைக்கு விட்டு விட்டு சென்னையில் உள்ள நெப்டியூன் ஸ்டுடியோவை (பிற்காலத்தில் சத்யா ஸ்டூடியோ) எடுத்து நடத்தினார் ஜுபிடர் சோமு.

இந்தக் காலகட்டத்தில் வெளிவந்த கற்புக்கரசி, எல்லோரும் இந்நாட்டு மன்னர், அரசிளங்குமரி முதலான படங்கள் பெரியளவில் வெற்றி பெறவில்லை.

**மரணம்**

ஜுபிடர் சோமுவின் உடல் நலமும் குன்றியது. அவருடைய மகன்களான காசி, செந்தில் ஆகியோர் தந்தையைக் காப்பாற்ற அரும்பாடு பட்டனர்.

ஆயினும் டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் பலன் இன்றி 1960 நவம்பர் 17 ஆம் திகதி ஜுபிடர் சோமு காலமானார். அப்போது அவருக்கு வயது 53.

**மகளும் மரணம்**

ஜுபிடர் சோமுவின் நெருங்கிய நண்பரும் கதை-வசன ஆசிரியருமான மா. லெட்சுமணன் எல்லோரும் இந்நாட்டு மன்னர் படத்தின் கதாசிரியர் ஆவார். இவருடைய கதைக்கு கலைஞர் கருணாநிதி திரைக்கதை-வசனம் எழுதினார். ஜெமினிக் கணேசன் சரோஜா தேவி நடித்த இந்தப் படத்தை டி.பிரகாஷ்ராவ் டைரக்ட் செய்தார்.

சோமு பற்றி அவர் கூறியதாவது,

தொழிநுட்பம் அதிகம் முன்னேறாத கால கட்டத்திலேயே அருமையான படங்கள் தயாரித்தவர் ஜுபிடர் சோமு. அவர் காலமான நாளை என்னால் மறக்கவே முடியாது. சோமுவுக்கு ஒரு மகள் உண்டு. மன வளர்ச்சி குன்றியவர். அந்தப் பெண்ணிடம் சோமு மிகுந்த அன்பு கொண்டவர்.

சோமு இறப்பதற்கு முன் தன் மகளிடம் அன்புடன் பேசினார். தண்ணீர் கொண்டு வரச் சொன்னார். தண்ணீர் கொண்டு வருவதற்குள் சோமு உயிர் பிரிந்து விட்டது.

இதைத் தொடர்ந்து பிரமுகர்கள் திரளாக



வந்து சோமுவுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அந்த நேரத்தில் வேலைக்காரி பக்கத்து அறைக்குச் சென்றபோது சோமுவின் மகளும் இறந்து கிடந்ததைப் பார்த்து பதறிக் கொண்டு வந்து தகவல் கொடுத்தார். ஒரே சமயத்தில் தந்தையும் மகளும் இறந்து போனதைக் கண்டு மனம் கலங்கினோம்.

இவ்வாறு மா.லெட்சுமணன் கூறினார்.

தமிழ்த்திரை உலகில் சூப்பர் ஸ்டாரகவும் பிறகு தமிழ் முதலமைச்சராகவும் திகழ்ந்த எம்.ஜி.ஆர். சினிமா உலகில் அடியெடுத்து வைத்த பின் கதாநாயகன் அந்தஸ்தை பெற 11 ஆண்டுகள் போராட வேண்டியிருந்தது.

**பெற்றோர்**

திரை உலகிலும் சகாப்தம் படைத்த எம்.ஜி. ஆரின் முழுப் பெயர் எம்.ஜி. ராமச்சந்திரன். பெற்றோர் பெயர் கோபால மேனன்-சத்யபாமா.

கோபாலமேனன் மாஜிஸ்திரேட்டராகப் பண் புரிந்து வந்தார். அரூர், எர்ணாகுளம், திருச்சூர், கரூர் முதலிய இடங்களில் வேலை பார்த்தார். நீதி தவறாத அவர் அநீதிக்கு துணை போக மறுத்ததால் அவரை வேறு ஊருக்கு மாற்றினார்கள். அதனால் மன வேதனை அடைந்த கோபாலமேனன் பதவியை ராஜினாமா செய்தார். மனைவி யுடன் இலங்கை சென்றார்.

**எம்.ஜி.ஆர். பிறந்தார்**

கோபாலமேனன்-சத்யபாமா தம்பதியினர் இலங்கையில் வசித்து வந்தபோது 1917 ஆம் ஆண்டு ஜனவரி 17 ஆம் திகதி சுவாதி நட்சத்திரத்தில் எம்.ஜி.ஆர். பிறந்தார். (தொடரும்)

# வடக்கை அதிகாரத்துவ,...

**(நேற்றைய கட்டுரையின் தொடர்ச்சி)**

...தற்போது இலங்கை அரசாங்கத்தின் அதிகாரத்துவப் போக்கு என்பது தற்போதும் நாங்கள் அனைத்துலக சமூகம், புலம்பெயர் மக்கள், இந்தியா போன்ற வெளித்தரப்பினரை வடக்கிற்கு அழைத்து மக்களுக்கு சேவையைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தடையாக உள்ளது என்பதை வலியுறுத்திக் கூறுகிறேன். இலங்கை அரசாங்கமானது எம்மைத் தமது மேலாதிக்கத்திற்கு உட்படுத்துகிறது. தாங்கள் விரும்பியவாறெல்லாம் அவர்கள் எம்மை நடத்த விரும்புகின்றனர் என்பதே உண்மையாகும்.

**கேள்வி: வடக்கு மற்றும் கிழக்கில் 65,000 வீடுகளைப் புனரமைக்கும் திட்டத்தை எதிர்ப்பதற்கான காரணம் என்ன?**

பதில்: மத்திய அரசாங்கமானது இது தொடர்பாக எம்முடனும், வடக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடியிருக்க வேண்டும். ஆனால் இது தொடர்பாக எவ்வித கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்படவில்லை. கடந்த மாதம் 15 ஆம் திகதி எம்மிடம் இது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட போது நான் அதனை எதிர்த்தேன். இது சிறந்ததொரு திட்டமாக அமையாது என நான் கூறினேன்.

ஏனெனில், இந்த வீட்டிற்காக 2.1 மில்லியன் செலவிடப்படவுள்ளது. இதற்குப் பதிலாக இதில் குறைந்தது இரண்டு வீடுகளை அமைக்க முடியும். அவ்வாறு அமைத்தால் 130,000 வீடுகளை அமைக்க முடியும். இதன் மூலம் வீடற்றோர் பிரச்சினையைத் தீர்க்க முடியும். 'இது ஒரு மாதிரித் திட்டம். இது இன்னமும் இறுதி வடிவமாக்கப்படவில்லை' என இலங்கை அரசாங் கம் கூறுகிறது. அண்மையில் இது தொடர்பாக பத்திரிகைகளில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இதற்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் நாம் முற்றிலும் அவமதிக்கப்பட்டுள்ளோம். இலங்கை அரசாங்கமானது வடக்கு மாகாணத்தை 'அதிகாரத்துவ, மேலாதிக்க, அராஜக' மனப்பாங்குடன் நடத்துகின்றது. இது எமக்கு நன்மை அளிக்கும் விடயமல்ல. இது இலங்கை அரசாங்கத்திற்கு நன்மை பயக்கும் விடயமாகும். ஏனெனில் இலங்கை அரசாங்கமானது எமது மக்களின் துன்ப துயரங்களைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துகிறது. நாங்கள் பல்வேறு துன்பங்களுக்கும், வறுமை நிலைக்கும் உட்பட்டுள்ளோம். இவற்றைப் பயன்படுத்தி அரசாங்கமானது வெளிநாடுகளிலிடமிருந்து நன்மைகளைப் பெற முயல்கிறது. எமது மக்களின் நீண்ட கால நலன்கள் இங்கு முதன்மைப்படுத்தப்பட வேண்டும்.

**கேள்வி: அரசியல் சீர்திருத்தம் தொடர்பான தங்களின் கருத்துக்கள் மற்றும் தமிழ் மக்கள் உட்பட சிறுபான்மை சமூகத்தவர்களின உண்மையான எதிர்பார்ப்புக்கள் என்ன?**

பதில்: தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை என்பது நேற்றோ அல்லது அதற்கு முதல் நாளோ ஏற்பட்டதல்ல. இவை கடந்த 67 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுத்துள்ளோம். இலங்கையின் அரசியல் யாப்பில் ஒற்றையாட்சி முறை நீக்கப்பட வேண்டும். ஒற்றையாட்சி என்பது மத்திய அரசாங்கத்தின் கைகளில் மட்டுமே அதிகாரங்கள் குவிந்திருக்கும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் சிறுபான்மை சமூகத்தவர்கள் அல்ல என்பதை இங்கு கூறவேண்டும். இவர்கள் 2000 ஆண்டுகளுக்கும் மேலாக தமது பிரதேசங்களில் பெரும்பான்மைப் பலத்துடன் வாழ்கின்றனர்.

சமஸ்டி நிர்வாகம் என்பது அதிகாரங்கள் பரவலாக்கப்படுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது. ஆகவே சமஸ்டி போன்ற அதிகாரப் பரவலாக்கல் முறைமை காணப்படும் இந்தியா போன்ற நாடுகளின் ஆட்சி முறைமை இங்கும் பின்பற்றப்பட வேண்டும். அனைத்துலக சாசனங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவாறு, குறித்ததொரு சமூகத்தின் சிறப்பு இயல்புகளைக் கொண்டு அவர்களுக்கான ஆட்சி அமைக்கப்படும் உரிமையை அவர்கள் கொண்டுள்ளனர். அதாவது இவர்கள் தம்மைத் தாமே சுயமாக ஆளும் உரிமையைக் கொண்டுள்ளனர்.

சமஸ்டி நிர்வாக முறைமை காணப்படும் உலக நாடுகள் தமக்கிடையே பிரிந்து தனியாட்சி மேற்கொள்ளவில்லை. எடுத்துக்காட்டாக, கியுபெக், ஸ்கொட்லாந்து, சுவிற்சர்லாந்து மற்றும் இந்தியா போன்ற நாடுகள் மாநில ஆட்சியைக் கொண்டிருந்தாலும் இவை தமக்கிடையே தனித்தனி நாடுகளாகப் பிளவுபடவில்லை.

எமது மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் என்ன என்பதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதுவே எமது இளைஞர்கள் ஆயுதம் தூக்குவதற்கு அடிப்படையாக அமைந்தது. இதனை நாங்கள் மக்களுக்கு எடுத்துக் கூறாவிட்டால், கடந்த காலத்தில் ஏற்பட்டது போன்று பல பிரச்சினைகள் ஏற்படும்.

**கேள்வி: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் அவர்களுடன் நீங்கள் தற்போது புரிந்துணர்விற்கு வந்துள்ளீர்களா?**

பதில்: புரிந்துணர்வு ஏற்படுத்துகின்ற அளவிற்கு சம்பந்தனுக்கும் எனக்கும் இடையில் எவ்வித பிரச்சினையுமில்லை. தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கமே எமக்கிடையே தவறான புரிந்துணர்வு ஏற்படக் காரணமாகும். தமிழ் மக்கள் பேரவை ஒருபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிராகச் செயற்படாது எனவும் மாறாக இதற்கு சமாந்தரமாகப் பணியாற்றும் எனவும் இது ஒரு அரசியற் கட்சியாகத் தன்னை மாற்றிக் கொள்ளாது எனவும் சம்பந்தனிடம் நான் எடுத்துக் கூறினேன். பின்னர் தற்போது அவர் 'முற்றிலும் திருப்தியடைந்துள்ளார்'. இது மிகச் சிறிய விடயமாகும். வேறுவிதத்தில், எமக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கும் இடையில் எவ்வித பிரச்சினையும் இல்லை.

(முற்றும்)

பிச்சை எடுத்தாராம் பெருமாள்
அதை தட்டிப் பறித்தாராம் அனுமார்.
-தமிழ் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்குக

65 ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டத்தில் பொருத்து வீடுகளை நிர்மாணிப்பதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இடைநிறுத்தியுள்ளமை ஒரு நல்ல தீர்மானம் என்று கூறிக் கொள்ளலாம்.

பொருத்து வீடுகளை அமைப்பது தொடர்பில் வடக்கு மாகாணத்தில் கடும் எதிர்ப்பு எழுந்திருந்த நிலையில் எப்பாடுபட்டாவது பொருத்து வீடுகளை அமைத்து விட வேண்டும் என ஒரு தரப்பும்; இல்லையில்லை பொருத்து வீடுகளை அமைக்க விட்டு விடக்கூடாது என மறுதரப்புமாக சர்ச்சைப்பட்டிருந்த வேளையில், வீடுகளைப்பெற இருந்த குடும்பங்கள் நாங்கள் இருப்பதற்கு வீடு இல்லாமல் கஷ்டப்படுகிறோம். இவர்கள் தர்க்கப்படுகிறார்கள் என்ற மனநிலையில் இருந்தனர். நிலைமை இதுவாக இருந்தபோது,

பொருத்து வீடுகளை அமைக்கும் திட்டத்தை இடைநிறுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவானது பொருத்து வீடமைப்பின் மூலம் ஏகப்பட்ட பணம் மோசடி செய்யப்படும் என்ற குற்றச்சாட்டுக்கு முடிவு கட்டியுள்ளது.

அதாவது அப்போது றோட்டில் அடித்தார்கள். இப்போது வீட்டில் அடிக்கப் பார்க்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு முடிவு கட்டப்பட்டமை நல்லாட்சியில் எடுக்கப்பட்ட சிறந்த தீர்மானம் எனலாம்.

அதேவேளை பொருத்து வீடுகளுக்கு ஜனாதிபதி தடை விதிப்பு என்று கூறும் போது,

ஐயா! எங்களுக்குக் கிடைக்க இருந்த வீடு கிடையாதா? கைக்குக் கிட்டியும் வாய்க்குக் கிட்டாமல் போய் விட்டதே! என்று ஏங்குகின்ற ஏழை மக்களுக்கு ஒரு நல்ல உத்தரவாதத்தை வழங்குவதும் ஜனாதிபதியின் தார்மீகக் கடமையாக இருக்கும்.

பொருத்துவீட்டுத் திட்டத்துக்குப் பதிலாக சீமெந்தினால் கட்டிடம் அமைக்கப்பட்டு ஓடிட்ட வீடு கட்டிக் கொடுக்கப்படும் என்ற அறிவித்தல் வெளிவருமாக இருந்தால் மக்கள் திருப்தியடைவர்.

மாறாக பொருத்து வீட்டுக்குத் தடை என்பது மட்டுமே தகவலாக இருக்குமானால் நிரந்தர வீடு கிடைக்கா விட்டாலும் பரவாயில்லை, பொருத்து வீட்டையாவது அமைத்துத் தாருங்கள் என்று கேட்பது வீடற்றவர்களைப் பொறுத்தவரை நூறுவீதம் நியாயமானதாகும்.

எனவே இல்லாதவர்களை வருத்தி அவர்களை எதற்கும் இணங்க வைப்பதென்பது தர்மமாகாது.

ஆனால் வீடற்றவர்களுக்கு அவர்களின் சமய, பண்பாட்டு அம்சங்களுக்கு அமைவாக வீடுகளை அமைத்துக் கொடுப்பதே நீதியாகும் என்ற அடிப்படையில் வீடற்றவர்களுக்கு நிரந்தரமான கல் வீட்டை அமைத்துக் கொடுக்கும் திட்டத்தை ஜனாதிபதி அவர்கள் அமுல்படுத்த வேண்டும்.

அதேநேரம் பொருத்து வீட்டுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்களுக்கு வீடு வழங்கக்கூடாது என சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளும் உயர் அதிகாரிகளும் கோபம் கொள்ளாமல், கட்டிக்கொடுக்கின்ற வீடுகளை மக்கள் விரும்புவது போல கட்டிக்கொடுப்பதே நல்லது என்று நினைத்து குறித்த 65ஆயிரம் வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும்.

இவ்வாறு செய்வது மக்களிடையே ஒரு திருப்தியான மனநிலையைத் தோற்றுவிப்பதுடன் திருப்தியான சேவை வழங்கப்பட்டது என்ற மனநிறைவும் ஏற்படும் என்பதால் சீமெந்தினாலான நிரந்தர வீடுகளை அமைக்க உடனடியாக ஆவன செய்வதே பொருத்துடையதாகும்.

## அனுமதியற்ற கட்டடங்கள் அகற்றல்

வீதிக்கு இடையூறாகவும் அனுமதியற்றும் கட்டப்பட்ட கட்டடங்கள் நல்லூர் பிரதேச சபையால் அகற்றப்பட்டு வருகிறது. சபையின் முறையான அனுமதியின்றி திருநெல்வேலி வளாக வீதியில் கட்டப்பட்ட மதில் ஒன்று வீதி அகலிப்பு காரணமாகவும் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலும் இருந்தமையாலும் இம்மதில் அகற்றப்பட்டு வீதி செப்பனிடப்பட்டது.

அதேபோல கொக்குவில் பகுதியில் உள்ள இராமகிருஷ்ணா பாடசாலைக்கு செல் லும் வீதியில் அனுமதி பெறாமல் கட்டப்பட்ட மதிலால் பாடசாலைக்கும் பொது மக்களிற்கும் போக்குவரத்தினை பாதித்தமையால் அம்மதிலானது பிரதேச சபையால் அகற்றப்பட்டது.

மேலும் சபை எல்லைக்குள் கட்டப்படும் எவ்விதமான கட்டுமான நடவடிக்கையும் சபையின் அனுமதி பெற்றே மேற்கொள்ளப்படல் வேண்டும் என்றும் அவ்வாறு அனுமதியின்றி அமைக்கப்படும் கட்டுமானங்கள் சபையினால் அகற்றப்படும் என்பதையும் நல்லூர் பிரதேசசபை அறிவித்துள்ளது. (இ-8)

## சங்காபிஷேகம்

தவத்திரு வே. முருகேசு சுவாமிகளின் 19 ஆம் ஆண்டு குருபூசை எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

மேலும் இக்குருபூசை தினத்தில் விசேட நிகழ்வாக பக்க வாத்திய சகிதம் இசைச்சொற்பொழிவை கவிமணி க.ஆனந்தராசா அன்னைதாசன் வழங்கவுள்ளார்.

இன்று வெள்ளிக்கிழமை செல்வச் சந்நிதி ஆலயத்தில் முருகேசு சுவாமிகளின் ஞாபகார்த்தமாக வருடாந்த சங்காபிஷேகமும் சண்முகார்ச்சனையும் இடம்பெறும். (இ




### மெய் மறக்கச் செய்யும் பேராசை

❖ உங்களில் ஒருவர் மற்றவரைப் பற்றி புறம்பேச வேண்டாம். உங்களில் எவரேனும் இறந்து விட்ட தன் சகோதரரின் இறைச்சியை உண்ண விரும்புவாரா என்ன? பாருங்கள்! நீங்களே அதனை அருவருப்பாய் கருதுகின்றீர்கள்".

❖ "உன் சகோதரனைப் பற்றி அவன் வெறுக்கும் வகையில் (அவன் இல்லாதபோது) பேசுவதே புறமாகும்"என்றார்கள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள். "கூறப்படும் விடயம் உண்மையிலேயே என் சகோதரனிடம் காணப் பட்டாலுமா அது புறம் ஆகும்?" என நபி அவர்களிடம் வினவப்பட்டது. "நீ கூறும் விடயம் அவரிடம் காணப் பட்டால் நீ பேசியது புறமாகும். அது அவரிடம் இல்லையெனில் நீ பேசியது அவதூறாகும்" என பதிலுரைத்தார்கள் நபி அவர்கள்.

❖ புறம் பேசுபவனை- அவன் எவரைப் பற்றி புறம் பேசினானோ, அவர் மன்னிக்காத வரை இறைவனும் மன்னிப்பதில்லை.

❖ கொடுமைக்குள்ளானவன் குரல் எழுப்புவது புறம் ஆகாது: அநீதி இழைக்கப்பட்டவனைத் தவிர வேறு யாரும் தீங்கான சொற்களை வெளிப்படையாகப் பேசுவதை இறைவன் விரும்புவதில்லை. ஆனால், நீங்கள் வெளிப்படையாகவும், மறைவாகவும் நற்செயல்கள் செய்தவண்ணம் இருங்கள் அல்லது குறைந்தபட்சம் (அநீதியானவர்களின் தீங்கை) மன்னித்து விடுங்கள்.

(வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து)

# வீட்டில் கும்பம் வைப்பதாகக் கூறி தங்க வளையல் அபகரிப்பு

வடமராட்சிப் பகுதிகளில் சாஸ்திரம் சொல்வதாக வரும் ஏமாற்றும் பேர் வழிகள் குறித்து அவதானமாக இருக்குமாறு கோரப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கரணவாய் அண்ணா சிலையடிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றிற்குசாஸ்திரம் சொல்வதாகசென்றபெண் ஒருவர் 100 ரூபாயிற்கு சாஸ்திரம் சொல்லியுள்ளார். பின்னர் அவர்களுக்கு தோசமுள்ளது எனவும் 1000 ரூபாயிற்கு பரிகாரம் செய்வதாகவும் கூறி அப் பணத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

பின்னர் கும்பம் வைப்பதற்கு ஏற்பாடு செய்து அதற்குள் தங்கக் காப்பு ஒன்றையும் போடுமாறும் பணித்துள்ளார் .அந்த சாஸ்திரம் கூறும் பெண் பரிகாரம் செய்யப்பட்டதன் பின் யார் கண்களிலும் படாமல் சுவாமி அறையினுள் அக் கும்பத்தை வைக்குமாறும் கூறியுள்ளார்.

ஒரு வாரம் கழித்து நேற்று முன் தினம் புதன்கிழமை அவ்வீட்டார் கும்பத்தை திறந்து பார்த்த போது தங்க வளையலுக்குப் பதிலாக பித்தளை வளையல் ஒன்று காணப்பட்டதையடுத்து அதிர்ச்சியடைந்தனர்.

இத்தகைய ஏமாற்றுப் பேர் வழிகள் பெண்கள் உள்ளவீடுகளிலேயே தமது கைவரிசையைக் காட்டி வருவதாகவும் அவர்கள் குறித்து மக்கள் அவதானமாக இருக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (3-44)

# நடைபாதை வியாபாரம் அகற்றப்பட்டுள்ளது

பலாலி வீதியில் அனுமதியின்றி நடைபெற்ற பழக்கடைகள், துணிக் கடைகள் மற்றும் பல தரப்பட்ட விற்பனைப் பொருட்கள் நல்லூர் பிரதேச சபையினால் கடந்த சனிக்கிழமை வாகனம் மூலம் அகற்றப்பட்டன. இவ்வாறு அகற்றப்பட்ட பொருட்களிற்கு தண்டப் பணம் அறவிட்டு சம்பந்தப்பட்ட வியாபாரிகளிற்கு கடுமையான எச்சரிக்கை வழங்கப்பட்டு திருப்பிக் கொடுக்கப்பட்டது. இனிவரும் காலங்களில் இவ்வாறு பொருட்கள் கைப்பற்றப்படும் பட்சத்தில் அவை நேரடியாக நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நல்லூர் பிரதேச சபை அறிவித்துள்ளது. மேலும் பொது மக்களுக்கு சிரமங்கள்ஏற்படாமல் இருக்கவும் வீதி விபத்துக்களை தடுக்கவும் பிரதேச சபையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் ஏற்கெனவே பத்திரிகை மூலமும் நேரடியாகவும் நடைபாதை வியாபாரம் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதை பிரதேச சபை அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. மேலும் இந் நடவடிக்கை பிரதேச சபையால் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் எனவும் பிரதேச சபை தெரிவித்துள்ளது. (இ-8)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ்.பிரதேசத்தில** அம்பலவாணர் வீதி, உடுவில், ஆர்க் லேன, ஶ்ரீலங்கா பாடசாலைவீதி, இராமலிங்கம் வீதி, சோமணான் தோட்டம், உடுப்பிட்டி V.C, நாச்சிமார் கோவிலடி, கொற்றாவத்தை, பொலிகண்டி, ஆலடி, நெடியகாடு, வெள்ள றோட், உடுப்பிட்டி சந்தி, உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, பாரதி சனசமூக நிலையத்தடி, பழைய பொலிஸ் நிலையத்தடி, வல்வெட்டித்துறை சந்தி, உடுப்பிட்டி வாசிகசாலை சந்தி, பொக்கணைச் சந்தி, கெருடாவில், தொண்டைமானாறு, மயிலியதனை, சிதம்பராக் கல்லூரி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** டொன் பொஸ்கோ, வன்னிவிளாங்குளம், ஒட்டறுத்தகுளம், வடகாடு, பாலிநகர், அம்பாள்புரம், கொள்ளவிளாங்குளம், ஐம்பது வீட்டுத்திட்டம், பாண்டியன் குளம், நட்டாங் கண்டல், கரும்புள்ளியான், தென்னியங்குளம், உயிலங்குளம், பாரதி நகர், மாங்காக்குடியிருப்பு, ஆலங்குளம், கல்விளான், இரணைமடு, திருவையாறு, கிருஸ்ணபுரம், அம்பாள்குளம், பாரதிபுரம், மலையாளபுரம், விநாயகபுரம், விவேகானந்தநகர், அறிவியல்நகர், MAS Intimate, MAS Active, பொறியியல்பீடம், விவசாய பீடம், பார்ம் கவுஸ், North Cargill's Agri food, கிளிநொச்சி இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், கிளி நொச்சி வைத்தியசாலை, விக்கிரமரட்ண பிறைவேற் லிமிட்டட், 66ஆம் இராணுவ படைமுகாம், பிள்ளையாா் அரிசி ஆலை, துணுக்காய் பலநோக்கு கூட்டுறவுச்சங்க அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### சமாதி

ஓர் உயிரணுதான் முழு உடலாகிறது. எங்கோ அது நகங்களாகவும் நாசியாகவும் (மூக்கு) நாவாகவும் இருக்கின்றது. ஆனால் அனைத்துமே ஒரு உயிரணுவின் விளக்கம்தான். இதுபோலவே இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே ஒரே பொருளால் ஆனது.எல்லாமே ஒரே பொருளால் ஆனதுதான் என்ற உணர்ச்சி உடலையும் மனதையும் குணப்படுத்துகிறது. பண்டைய இயற்கைச் சுகாதார விஞ்ஞான மான ஆயுர்வேத சாத்திரப்படி ஒருவரின் உடல் மனக்கூட்டமைப்பு, வாதம், பித்தம், கபம் என்ற மூன்று முக்கிய கூறுகள் உள்ள அமைப்புக்களால் ஆனது. தோஷங்களைச் சமன்படுத்துகிறது. இதுவே ஸவிதர்க்க- சமாதி என்பது. (பகுத்தறிவுக்குப் பொருத்தமான விழிப்புணர்வுடன் கூடிய அமைதியான மனநிலை)

ஆழ்ந்த உறக்கத்தில் விழிப்புணர்வு- ஜடசமாதி (இயங்காத் தன்மையுடன் கூடிய அமைதியான மனநிலை) நோயைக் குணப்படுத்துவதில் முக்கிய கூறாக உள்ளது. உறக்கம், உறக்கமும் ஓய்வும் இல்லாமல் மருந்து மாத்திரம் உதவாது. சாதாரண உறக்கம் தரும் ஓய்வை விடப் பன்மடங்கு ஓய்வை ஜடசாமாதி தருகின்றது.

மெய்மறந்த நிலையிலான சமாதி பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டது. இதுவே நிர்விதர்க்க- சமாதி (பேரானந்தத்துடன் கூடிய அமைதியான மனநிலை)

நிர்விதர்க்க சமாதி பேரானந்த அனுபவத்திற்கும் அப்பாற்பட்டது- வார்த்தைகளால் விளக்க இயலாதது.

பண்டைய இயற்கைச் சுகாதார விஞ்ஞானமான ஆயுர்வேத சாத்திரப்படி ஒருவரின் உடல் மனக்கூட்டமைப்பு- வாதம்,பித்தம், கபம் என்ற முக்கிய மூன்று கூறுகள் உள்ள அமைப்புக்களால் ஆனது.

# ஸ்ரான்லி அணியை வீழ்த்தி ஜொனியன்ஸ் கால் இறுதிக்கு தகுதி



கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்திற்காக கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் வருடாவருடம் நடத்தும் 30 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் 2 ஆவது சுற்றில் 12 ஆவது போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் யாழ்.ஜொனியன்ஸ்அணி, ஸ்ரான்லி அணியை 89 ஓட்டங்களால் வெற்றி பெற்று கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.ஜொனியன்ஸ் அணி 30 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 249 ஓட்டங்களைப் பெற்றனர். அன்புஜன்-51, அமிர்தயன் -10, கரியிரவின்-33, அகிலன்-60, லவேந்திரா-57, விதுஸன் -14 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் ஸ்ரான்லி அணியை சார்ந்த துஸ்யந்தன்-1, விதுஸன்-3, மதன், சுரேஸ், ரஜீவ் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர். பதிலுக்குத துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 25.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றனர். சுதர்ஸன்-29, மதன்-20, சத்தியப்பிரசன்னா-52 ஓட்டங்களைப் பெற்றனர். கஜீபன்-01, அகிலன்-04, லோகதீசன்-02, லவேந்திரா-02, பிருந்தாபன்-01, இலக்கினைக் கைப்பற்றினர்.

இப் போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் தரவரிசைப் பட்டியலுக்கு யாழ்.ஜொனியன்ஸ் 7.37 புள்ளிகளையும் ஸ்ரான்லி அணி 2.51 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. இப் போட்டியில் வெற்றி பெற்ற யாழ்.ஜொனியன்ஸ் அணி, சென்றலைட்ஸ் அணியுடன் 3 ஆவது கால் இறுதிப் போட்டியில் எதிர்கொள்வர். இப் போட்டி 10.04.2016 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.(கு)


## கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ணம்-2016 கால் இறுதிப்போட்டி நாளை



கே.சி.சி.சி.



ஓல்ட் கோல்ஸ்



ஜொலிஸ்ரார் அணி



மானிப்பாய் பரீஸ்

கே.சி.சி.சி வெற்றிக்கிண்ணத்துக்கான கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் வருடாவருடம் நடத்தி வரும் கிரிக்கெட் போட்டியின் கால் இறுதிப் போட்டி நாளை 9 ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு நடைபெறும் முதலாவது கால் இறுதிப் போட்டியில் கொக்குவில் கே.சி. சி.சி.விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஓல்ட் கோல்ஸ் விளையாட்டுக்கழகமும் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறும் இரண்டாவது கால் இறுதிப் போட்டியில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழத்தை எதிர்த்து மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (கு)

## அரையிறுதியில் கரவெட்டி ஞானம்ஸ்

Litro Gas அனுசரணையுடன் யமஹா விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் மென்பந்து சுற்றுப் போட்டியின் மூன்றாவது சுற்று ஆட்டத்தில் கொக்குவில் பிரம்படி அணியை 7 விக்கெட்டாலும் காலிறுதியில் சங்கானை கிங்ஸ் அணியை 21 ஓட்டங்களாலும் வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம். (க)

## இன்றைய போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் நடப்பு வருடத்திற்கான வல்லன் கிண்ணத்திற்கான காற்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு நடைபெறும் போட்டியில் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையர்ட்டுக்கழகமும் மாலை 4மணிக்கு நடைபெறும் போட்டியில் உடற்கல்வி ஐக்கியம் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மன்னார் பனங்கட்டுக்கொட்டு சென் ஜோசப் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)

97ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி (Set up game) நடைபெற்று வருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை இரவு 7மணிக்கு மின்னொளியில் அரியாலை சரஸ்வதி சன்சமூக நிலைய மைதானத்தில் நடைபெறும் முதலாவது அரையிறுதிப் போட்டியில் இளவாலை மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக்கழகமும் இரவு8மணிக்கு நடைபெறும் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மல்லாகம் நியூ வோறியல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நீர்வேலி காமாட்சி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (கு)

## கோப்பாய் பிரதேச செயலக கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி

### ஊரெழு றோயல் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலக பதிவு செய்த விளையாட்டுக் கழகங்களுக்கிடையான கிரிக்கெட் போட்டியில் ஊரெழு றோயல் சம்பியனானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய றோயல் அணி 15ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 69 ஓட்டங்களை பெற்றது. அணித்தலைவர் கஜந்தன் 41ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார். பின்னர் வெற்றி இலக்கை நோக்கி ஆடிய அச்சுவேலி முரசொலி அணி 9விக்கெட்டை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. (கு)

## காற்பந்தாட்டத் தொடர் ஞானமுருகன், மகாத்மா வெற்றி

தெல்லிப்பழை நாமகள் வி.கழகம் நடத்திவரும் காற்பந்தாட்டத் தொடரில் இடம்பெற்ற ஆட்டங்களில் ஞானமுருகன், மகாத்மா அணிகள் வெற்றிபெற்றுள்ளன.தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் குறித்த தொடர் நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இதில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதிக் கொண்டது.

இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் எந்தவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க)

## ரூ. ஆயிரத்து நூறு...

இதன்படி சீனா 500 மில்லியன் யுவான்களை இலங்கைக்கு நன்கொடையாக வழங்க தயாராக இருப்பதாக சீனப் பிரதமர் லீ க்சியங் தெரிவித்துள்ளார்.

அத்துடன் முதலீடு, கைத்தொழில் வலயங்கள் மற்றும் கைத்தொழில் திட்டங்களுக்கு சீன அரசாங்கம், இலங்கைக்கு முழுமையான உதவிகளை வழங்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

சீனப்பிரதமரை, இலங்கைப் பிரதமர் ரணில விக்கிரமசிங்க நேற்று மாலை சந்தித்து நடத்திய இருதரப்பு பேச்சுவார்த்தைகளின் பின்னர், சீனா, இந்த நிதியை இலங்கைக்கு வழங்க இணங்கியுள்ளது.

இதன்போது, இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திடுவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (செ-12)


## அனல் மின் திட்ட...

இலங்கை பழங்குடியினர் உரிமைகளுக்கான அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட அமைதி போராட்டத்தில் நிலக்கரியை எரித்து எம்மை நோயாளியாக்காதே!, எங்கள் விளைநிலங்களை நாசமாக்காதே!, எமது சூழலை பாதிக்கும் அனல் மின் நிலையத்தை ஆரம்பிக்காதே!, எங்கள் வாழ்க்கையை எரித்தா நாட்டுக்கு வெளிச்சம்! போன்ற பதாகைகளை ஏந்திய வண்ணமும் கோடரிகளை ஏந்திய வண்ணமும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் விறகு வெட்டுதல், தேன் எடுத்தல், வேட்டையாடுதல், விவசாயம் போன்ற வாழ்வாதார மேம்பாட்டிற்காக செய்யப்பட்டு வந்த தொழில்கள் அனல் மின் நிலையம் அமைப்பதினால் பாதிக்கப்பட்டு வருவதாகவும் அதனை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (செ-12)

# மகிந்த அரசு செய்ததைப்போலவே அமைச்சர் பதவிகள் பரிசளிக்கபடுகின்றன

## ரில்வின் சில்வா சாடல்



நாட்டில் பொருட்களின் விலைகள் வான் உயரத்திற்கு அதிகரித்துள்ள நிலையில், மக்களுக்கு நிவாரணங்களை வழங்காது, புத்தாண்டில் அமைச்சர் பதவிகள் பரிசளிக்கப்படுவதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை பெலவத்தையில் உள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

மாதத்திற்கு இரண்டு முறை அமைச்சரவையின் எண்ணிக்கையை அரசாங்கம் அதிகரித்து வருகிறது.

அமைச்சரவையானது காலநிலை போல அடிக்கடி மாறிக்கொண்டிருக்கின்றது. அரசாங்கம் மக்கள் வழங்கிய ஆணைக்கு எதிராக செயற்பட்டு வருகிறது.

மகிந்த ராஜபக்ஷ தனது அதிகாரத்தை உறுதிப்படுத்திக்கொள்ள இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டார். மகிந்த அரசாங்கத்தின் அமைச்சர்களின் எண்ணிக்கை நூறை தாண்டியது.

இதனால், தமது அதிகார நோக்கங்களுக்காக நாட்டில் அமைச்சர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டாம்.

நாட்டை அபிவிருத்தி செய்ய நாட்டில் அமைச்சரவை ஒன்று அவசியம். தற்போது 92 அமைச்சர்கள் உள்ளனர்.

19வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் 46/1 பந்தியில் அமைச்சரவையின் எண்ணிக்கை 30 எனவும் ராஜாங்க மற்றும் பிரதியமைச்சர்களின் அமைச்சர்களின் எண்ணிக்கை 40 எனவும் வரையறுக்கப்பட்டுள்ளது. இதற்கு மேல் அதிகரிக்கக் கூடாது எனவும் கூறப்பட்டுள்ளது.

ஆனால் தற்போதுள்ள அரசாங்கம் 19வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திலும் நுழைந்து போகிறது என ரில்வின் சில்வா குற்றம் சுமத்தியுள்ளார். (செ-12)

## எம்.பிக்களுக்கான ஒழுக்கநெறிக் கோவை

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்க நெறிக்கோவை அனைத்து பிரதிநிதிகளிடத்திலும் வழங்கப்பட்டு எழுத்து மூலமான அபிப்பிராயங்களை இருவார காலத்தினுள் பாராளுமன்ற செயலாளரிடத்தில் கையளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் நேற்றுக் காலை 10.30க்கு ஆரம்பமானது. இதன்போது சபாநாயகர் கரு ஜயசூரிய விசேட அறிவிப்புகளை செய்யும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்கநெறிக்கோவை தயாரிக்கப்பட்டு தங்களின் மேசைகளில் வைக்கப்பட்டுள்ளன. அந்த வரைபு தொடர்பான தங்களின் அபிப்பிரா்யங்களை எழுத்து மூலமாக எதிர்வரும் இருவார காலத்தினுள் பாராளுமன்ற செயலாளரிடத்தில் கையளிக்க வேண்டும் என்றார். (செ-12)


# NORTH LANKA IIT
# NLIIT CITY CAMPUS

**கல்வியியல் முதுமாணி (M.Ed.) கற்கை நெறி ஆரம்ப செயலமர்வு 10.04.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி.**
**இடம்: North Lanka IIT வளாக பிரதான மண்டபம்**

- கல்வி அமைச்சின் அனுமதி.
- தேசிய கல்வி நிறுவக கல்வியியல் முதுகலைமாணி பாடத்திட்டம்.
- தமிழ்மொழி மூல பாடநெறி.
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கிகாரத்துடன்.
- Costa Rica சர்வதேச பல்கலைக்கழகப்பதிவுடன்.
- மிகத்தரம் வாய்ந்த M.Ed. பாடநெறி ஆரம்பமாகின்றது. பங்குபற்ற விரும்புவோர் தவறாது சமுகமளிக்கவும்.
- விரைவில்

01. கல்வியியல், விஞ்ஞானம், கணிதம், தகவல் தொழில்நுட்பம், ஆரம்பக்கல்வி, தமிழ், சமயம் ஆகிய துறைகளில் M.Phil, Ph.D பாடநெறிகளும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து ஆரம்பிக்கப்படவுள்ளன.

02. பாடசாலை அதிபர்கள், உபஅதிபர்கள், ஆர்வமுள்ள ஆசிரியர்களுக்கான PGDEM, கல்விமுகாமைத்துவ டிப்ளோமா, பாடசாலை முகாமைத்துவ சான்றிதழ், டிப்ளோமா பாடநெறிகளும் எமது மண்ணின் அதிபர், ஆசிரியர், வாண்மை விருத்தி கருதி ஆரம்பமாக உள்ளன.

03. சர்வதேச - தேசிய - உயர் கல்வி ஆய்வுகள் சமர்ப்பிப்புக்களுக்கான வழிகாட்டல்கள், பாடசாலை முகாமைத்துவ, பெறுபேறுகளை அதிகரிக்க முகாமைத்துவ பிரச்சினைகளைத் தீர்க்க ஆய்வுகளை மேற்கொண்டு தீர்வுகளைக் காண ஆலோசனைகளைப் பெற நிபுணத்துவ ஆலோசனைச் சேவையை உரிய தகுதி வாய்ந்த நிபுணர்களால் வழங்கவுள்ளோம்.

04. தற்போது எமது வளாகத்தில், B.Sc. in Comp.Sc, PGD, M.Sc, M.BA, Degree in Physical Ed. ஆகிய பாடநெறிகள் நடைபெறுகின்றன.

**M.Ed தொடர்பான மேலதிக விபரங்களுக்கு:**

கலாநிதி பா.தனபாலன்
தொ.பே: 077 068 1958

**Dr.B.Thanabalan [Ph.D]**
Dean
Faculty of Education
University of Costa-Rica and
North Lanka IIT collabration Project - 2016

(C-4247)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




திதி : பூர்வபக்க பிரதமை

## குலசேகரம்பிள்ளை இரவீந்திரநாதன்

(முன்னாள் ஆசிரியர்–மானிப்பாய் இந்துக் கல்லூரி)

நீங்கள் எம்மைவிட்டு மறைந்து ஓராண்டு கடந்தாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் இதயங்களில்
நீங்காத நினைவாக நிறைந்து நிற்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

என்றும் உங்கள் அன்பு நினைவுகளுடன் :
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், மாமா,
சின்னம்மா, சகோதரர்கள், சகோதரிகள்,
பெறாமக்கள், மைத்துனன்மார்கள்,
மைத்துனிமார்கள், பேரப்பிள்ளைகள்,
மற்றும் உறவினர்கள்.

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.

(4138)

# தீர்மானங்களையே ஏற்காத...

வடக்கு மாகாண சபையின் 49 ஆவது அமர்வு கைதடியில் அமைந்துள்ள வட மாகாண சபை கட்டடத்தில் நேற்றையதினம் நடை பெற்றது.

இதில் வடக்கு மாகாண சபையால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வுத்திட்ட முன் வரைபு தொடர் பான விவாதம் இடம்பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

அரசியல் அமைப்பு மாற்றம் தொடர்பாக 18 பேர் கூடி நீண்ட நாட்களாக ஆராய்ந்து தீர்வுத்திட்ட முன்வரைபை தயாரித்துள்ளோம்.

நாம் தயாரித்த அரசியல் தீர்வுத்தட்ட முன்வரைபை தமிழ்த் தேசியக் கூடடமைப்பின் தலைவரிடம் ஒப்படைக்க இருப்பதாக அறிகிறேன். இந்த அறிக்கை நேரடியாக அரசுக்கு போகப்போகின்றதா? இல்லை த.தே.கூ தலைவர்களிடம் ஒப்படைக்கப் பட்டு அவர்கள் கருத்துக்களுக்குள் உள்வாங்கப்பட்டு அவர்கள் ஊடாக போகபோகின்றதா என்று தெரிய வேண்டும்.

நாங்கள் நீண்ட நாட்களாக ஆராய்ந்து தயாரித்து கொடுக்கும் இந்த அறிக்கையில் உள்ள விடயங்கள் அனைத்தும் த.தே.கூ தயாரித்துகொடுக்கும் தமது தீர்வுத் திட்ட அறிக்கையில் உள்ளடக்கப்படுமா என சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

ஏனெனில் கடந்த காலங்களில் த.தே.கூட்டமைப்பில் உள்ள தலைவர்கள் வட மாகாண சபையின தீர்மானங்களை ஏற்றுக் கொள்ள வில்லை. எந்தவிடயங்களுக்கும் வட மாகாண சபையின் கருத்துக்கள் உள் வாங்கப்படுவதில்லை. அவர்கள் எமது கருத்துக் களைவேறாகவும் தமது முடிவை வேறாகவும் தான் செயற்படுத்தி வந்தார்கள். இது பொய் இல்லை நடை பெற்றுவருகின்ற உண்மை.

எனவேதான் நாங்கள் இவ்வாறு நண்ட நாட்களாக நேரத்தை ஒதுககி மிகவும் சிரமப்பட்டு இந்த தீர்வுத் திட்டத்தை தயாரித்துக் கொடுக்கும் போது அது சாதகமானதாக போய் சேருமா என்பதற்கு முதலமைச்சரும் அவைத் தலைவரும் உத்தரவாதம் அளிக்கவேண்டும்.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தீர்வுத்திட்ட அறிக்கையை தயாரித்து விட்டதாகவும் கூறுகிறார்கள்.

ஆகவே நாங்கள் ஏமாற்றப் படக்கூடிய சூழல் வரக்கூடாது என்பதில் திடமாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (செ-9)

## கிணற்றுக்குள்...

டையில் இடம் பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தினைச் சேர்ந்த சசிகரன் சுதர்சன் (வயது 4) என்ற முன்பள்ளி சிறுவனே உயிரிழந தவனாவான்.

சடலமானது பிரேதப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சிறுவனின் மரணம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-30)

## முன்னாள் ஜனாதிபதி மகிந்...

வித்தார்.

கொழும்பில நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பை குறைத்திருப்பதாக பரவலாக பேசப்படும் கருத்துக்களில் எந்த உண்மையும் இல்லை. தற்போது வரை 256 படை வீரர்கள் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ள நிலையில், இந்த பாதுகாப்பு நடவடிக்கையில் சிறுமாற்றம் ஒன்றே நிகழவுள்ளது.

இராணுவத்தினருக்கு பதிலாக பொலிஸ் அதிகாரிகளும், விசேட அதிரடிப்படை அதிகாரிகளும் நியமிக்கப்படவுள்ளனர்.

எந்தவொரு அரசியல் பிரதிநிதிக்கும் இராணுவத்தினரை பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்த சட்டம் இல்லை.

ஒருவேளை, பாதுகாப்பு கடமையில் இராணுவத்தினர் ஈடுபடுத்துவதானால் நாட்டில் அவசரகால சட்டம் இருக்க வேண்டும்.

ஆனால் இலங்கையில் அவ்வாறு சட்டம் இல்லை. இதன் காரணமாக இராணுவத்தினருக்கு பதிலாக பொலிஸ் அதிகாரிகளும், விசேட இராணுவ பயிற்சி பெற்ற பொலிஸ் அதிகாரிகளும் நியமிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை, தற்போதைய ஜனாதிபதிக்கோ அல்லது பிரதமருக்கோ பாதுகாப்பு கடமையில் இராணுவத்தினர் என்று எவரும் இல்லை.

இந்தநிலையில், சிலரது போலியான பரப்புரைகளை யாரும் நம்ப வேண்டாம் எனவும் மகிந்தவின் பாதுகாப்பு குறைக்கப்படவில்லை எனவும் பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி மேலும் தெரிவித்துள்ளார். (செ-12)

## வடக்கு மாகாண...

நேற்றையதினம் நடை பெற்றது. அதன்போதே வடமாகாண முதலமைச்சரால் குறித்தஅரசியல் தீர்வுத் திட்டவரைபு முன்மொழியப்பட்டது.

புதிய அரசியலமைப்பை உருவாக்கும் நடவடிக்கையில் அரசு முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் வட மாகாணசபையால் அரசியல் தீர்வுதிட்டவரைபு சமர்ப்பிக்கப்படவேண்டும் என ஆளும் கட்சி உறுப்பினர்கள் முதலமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தமைக்கு அமைவாக கடந்த ஜனவரி மாதம் வட மாகாணசபையில் தீர்வுத்திட்ட தயாரிப்பதற்கு குழு நியமிக்கப்பட்டது.

இதில் 18 பேர் இணைந்து 3 பிரிவுகளாகஅரசியல் தீர்வுத்திட்ட வரைபு தயாரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

குறித்த வரைபு பூரணப்படுத்தப் படுவதற்கு முன்னர் தீர்வுத்திட்டம தொடர்பாக முன்மொழிவை நேற்றையதினம் சபையில் தெரிவித்து விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

அந்தவகையில் திட்டவரைபில் திருத்தங்களை மேற்கொண்டு எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறவுள்ளவிசேட அமர்வில் தீர்வுத் திட்டத்துக்கான மேலதிக விவாதங்கள இடம்பெற்று அரசியல் தீர்வுத் திட்ட வரைபு முழுமைப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## ஐ.தே.கவின்...

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற மின்சார நெருக்கடி தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான வவாதத்தில் உரையாற்றும் போதே மகிந்தானந்த அளுத்கமகே எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சீனாவின் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி திட்டத்தை எமது ஆட்சியில் முன்னெடுத்த போது எதிர்த்தீர்கள். ஊழல் மோசடிகள் என்றீர்கள். ஆனால் இன்று 33 ஏக்கரை அதிகமாக சீனாவுக்கு வழங்கி 99 வருட கால குத்தகைக் குத் திட்டத்தை சீனாவுக்கு வழங்கியுள்ளீர்கள்.

அத்தோடு இத்திட்டம் பல காலங்கள் இடைநிறுத்தப்பட்டு சீன நிறுவனத்துடன் நீண்ட "டீல்" களை நடத்திய ஐ.தே.கட்சி முக்கியஸ்தர் ஒருவர் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை தரகுப்பணமாக பெற்றுக் கொண்டுள்ளார் என்றார். (செ-12)

## யாழ்.செயல...

பி[illegible]னர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

யாழ்.தீவகம் மண்கும்பான் பகுதி உள்ளிட்ட சில பகுதிகளில் சுமார் 60 ஏக்கர் வரையிலான காணி மற்றும் ஆனைக்கோட்டை பகுதியில் 16 பரப்பு காணி ஆகியன படையினரின் தேவைகளுக்காக சுவீகரிப்பதற்காக இன்று காலை நிலங்கள் அளவீடு செய்யப்படவுள்ளன.

இந்நிலையில் குறித்த காணி அளவீட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ்.மாவட்டச் செயலகம் முன்பாக எதிர்ப்பு போராட்டத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் அரசியல்வாதிகள மற்றும் பொது அமைப்புக்களைச் சார்ந்தவர்கள் அனைவரும் கலந்து கொண்டு போராட்டத்தை வலுச் சேர்க்குமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். (செ-12)

## இந்.மீனவர்...

ஏ.எம்.எம்.றியால் நேற்றையதினம் உத்தரவிட்டுள்ளார்

நேற்று முன்தினம் இரவு நெடுந்தீவு கடற்பரப்பில் ஒரு படகில் வந்து அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் ஒன்பது பேரையும் இலஙகை கடற்படையினர் கைது செய்து அவர்களை யாழ் மாவட்ட கடற் தொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைத்தனர்.

நேற்றையதினம் இவர்கள் ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதவான் அவர்களை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார். (செ-9)

## இராஜதந்திர கடவுச்சீட்டு...

செய்வதற்காக இரண்டு கடற்படையினர் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இலங்கை தூதரகத்தில் தோட்டவேலை செய்பவர்கள் என்று கூறியே இவர்களுக்கு இராஜதந்திரக் கடவுச்சீட்டு பெறப்பட்டு, அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

எனினும், அவர்கள் பசில் ராஜபக்ஷவின் மகனின் வீட்டில் உணவு சமைத்துப் பரிமாறுபவர்களாகவே பணியாற்றியிருந்தனர் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. கடற்படையினரில் ஒருவர் திருமணத்துக்காக நாடு திரும்பிய போது, புஸ்பா ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில், இராஜதந்திரக் கடவுச்சீட்டை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டார.

இரண்டாவது கடற்படைச் சிப்பாய், கடந்த ஆண்டு ஜனவரி மாதம் ஜனாதிபதி தேர்தல் முடிந்த பின்னர், நாடு திரும்பினார் என்றும் விசாரணையில் தெரிய வந்துள்ளது. இந்த இராஜதந்திரக் கடவுச்சீட்டுகளுக்கு 2017 வரை அமெரிக்காவில் வதிவிட உரிமை வழங்கப்பட்டிருந்தது என்றும், பாரிய மோசடிகள், அதிகார துஷ்பிரயோகங்கள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக் குழு கண்டறிந்துள்ளது. (செ-12)

## மஹாநாயக்கர்...

னரின் கூட்டம், நேற்று மாலை 4 மணிக்கு இடம்பெற்றது.

இதன்போதே, புதிய மஹாநாயக்கர் தெரிவு செய்யப்பட்டார். தேர்தலொன்று நடத்தப்படாமலேயே இந்த தெரிவு இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதி வண. கலகம ஸ்ரீ அத்ததஸ்ஸி மஹாநாயக்க தேரர், காலமானதைத் தொடர்ந்து நிலவிய, அஸ்கிரிய மஹாநாயக்கர் பதவி வெற்றிடமாகவே காணப்பட்டது. இந்நிலையிலேயே, வரக்காகொட ஞானரத்தன தேரர் அஸ்கிரிய மஹா நாயக்கராக நேற்று தெரிவு செய்யப்பட்டார். (செ-12)


LOGIC 2018
எஸ்.எஸ்.மனோகரன்
ஆரம்பம் :- 9.04.2016 10.00 மணி
BEACON யாழ்.நகர்
(C-4239)

ஆங்கில வகுப்பு
தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக் குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு : 0767070069
(3279) M.Suren

அச்சு இயந்திர இயக்குநர்கள் தேவை
1. SORD (HEIDELBERG) இயந்திர இயக்குநர்
2. KORD (HEIDELBERG) இயந்திர இயக்குநர்
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
நேர்முகத்தேர்வு: 09.04.2016, சனிக்கிழமை காலை 9.30 - பிற்பகல் 12.30 வரை
ANDRA 379,Kasthuriyar Road, Jaffna
Tel: 0776622981 | 0777481696
(C-4229)



பண்டிகைக்கால விசேட சலுகைகள்
220க்கு மேற்பட்ட உள்நாடு வெளிநாடுகளுக்கான துரிததபால்கள் பொதிகள் சேவைகள்!
இந்தச் சலுகை சித்திரை மாதம் 15ஆம் திகதிவரை மட்டும்
வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், உணவுப் பொருட்கள், கருவாடு, மருந்து, எண்ணெய் வகைகள் என்பவற்றை அனுப்பி வைக்கலாம்
11Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1Kgக்கு மிக குறைந்த கட்டணம்.
UK-600/= Canada-900/= France-700/= Germany-650/=
மற்றைய நாடுகளுக்கும் மிகக்குறைந்த கட்டணத்தில் அனுப்பி கொள்ள முடியும்
(4137)
திருமுருகன் கொம்நெற் (PVT) Ltd
271A, K.K.S Road, Jaffna.
46, Aadiyapatham Road, Thirunelvely.
18, பிரதான வீதி, நெல்லியடி.
பிரதான வீதி, பருத்தித்துறை. (பஸ் நிலையம் முன்பாக)
பிரதான வீதி, சங்கானை (ஆசைப்பிள்ளை நகைக்கடை முன்பாக) 021222 7835


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.